# எழுத எழுத



நிலா

பதிப்புரிமை ஆசிரியர்க்கே
தொலைபேசி : 00442087955838
மின்னஞ்சல் :
nilaaa2001@yahoo.co.uk
இணையத்தளம் :
www.nilamutram.com

கணபதி துணை

# என்னுரை

'எழுத எழுத' என்ற இந்த எழுத்து வடிவம் பிரதி புதன் தோறும் லண்டன் தமிழ் வானொலியில் 'இலக்கிய சங்கமம்' நிகழ்ச்சியில் அங்கம் அங்கமாக எனது குரல்வடிவில் பலருக்கும் சென்றடைந்த ஒரு தொடராக்கம்.

இது உண்மையில் எனக்குத் திடீரென எழுந்த அவா. பல வருடங்களுக்கு முன்பாக என்மனம் துன்பத்தால் தவித்த பொழுது, சுமை பாறாங்கல்லாக என்னை அழுத்திய பொழுது நான் என் துன்பத்தை என் நெருங்கிய உறவில்லாத, நட்பு கூட அல்லாத எனை நினைத்துக் கலங்காத ஒருவரிடம் பகிரத் துடித்தேன்.

அந்த ஒருத்தி இலங்கை வானொலியில் ஆக்கங்கள் அனுப்பி வந்த ஒரு நேயர் சசிகலா சந்திரசேகர். அவர் அப்போது மட்டக்களப்பு வாசி. நானும் அவரும் 'பூவும் பொட்டும் - மங்கையர் மஞ்சரி, குங்குமச்சிமிழ் போன்ற நிகழ்ச்சிகளுக்கு தவறாது ஆக்கங்கள் அனுப்புபவர். முகவரி கூறி ஒலி பரப்புவார்கள் அப்போது. 1996, 97 ஆண்டு காலப்பகுதி அது.

ஒலிபரப்பில் அவர் முகவரியை அறிந்து நான் என்முகவரியுடன், என் துன்பம் எனும் பயணியை இறக்கிவிடும் பேரூந்தாக எனது எழுத்தும், அவரை தரிக்கும் ஒரு தரிப்பிடமாக இருக்கும் படியும், அந்த துன்பங்களை உள்வாங்கி உடனே வெளியேற்றும் படியும் வேண்டி மடல் எழுதினேன்.

நான் எதிர் பார்த்தபடி எனக்குப் பதிலும் வந்தது. போகப் போக அந்தப் பெண் என்னை மிகவும் நேசிக்கத் தொடங்கி விட்டாள். கொழும்பு வந்த போது தொலைபேசியில் உரையாடிய அவள் என்னைக் காண வேண்டும் என்றாள். என்னுடன் அவள் பழகுவதைத் தவிர்க்க விரும்பினாலும் அவரது அன்பு வேண்டு கோளை நிராகரிக்க முடியாமல் நான் தோற்றுப்போனேன்.

வந்தாள். சந்தித்தாள். மகிழ்வின் எல்லையில் அவள். அதன்பின் அதே வேகத்துடன், அதே கிரமத்துடன் என்னால் எழுத முடிய வில்லை. பருவ மழைபோல் என் வாழ்வில் வந்துபோகும் வைத்தியத்துக்கு நான் உட்படுத்தப் பட்டேன். எண்ணெயிலேயே குளித்து வாழ்ந்த பிசு பிசுப்பான காலங்கள் அவை.

எழுதுவது தடைப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக வாழ்க்கை நாடகத்தில் காட்சிகள் மாறின. கணனியின் அறிமுகம். என்னையே மறந்து அதனை அனுபவித்து நேரம் போக்கினேன். இணையம் பற்றி மேலோட்டமாக செவியுற்றிருந்த காலம் அது.

மூன்று மாதங்களில் இலண்டன் வருகை. அதனால் எழுதும் வாய்ப்பு மேலும் தடைப்பட்டது. இங்கு சன்ரைஸ் வானொலி கேட்கக் கிடைத்தது. மீண்டும் விழித்தேன். எனினும் என் வாழக்கையின் அவசரங்கள். அழுத்தங்கள் தொடவே செய்தன.

இணையத்து நண்பர்கள் அறிமுகம் ஆனார்கள். முகம் தெரியாத அவர்களுடன் பற்பல துன்பங்களையும் கொட்டித்தீர்த்தாலும் ஒலிமூலம் குழுக்களாக அவர்களுடன் அளவளாவ ஆனந்தம் என்கதவையும் எட்டிப்பார்த்தது. அவர்களை மகிழ்விக்க, அவர் களுக்காக என்றும் கவிதைகள் எழுதிய காலங்களும் உண்டு.

கிடைத்த வசதியில் படிப்பைத் தொடர்ந்தேன். இயன்றளவு முடித்தேன். எனது பெற்றோரது பட்டதாரிக்கனவு நிறைவேறியது.

எனது இலக்கியப் பயணத்தில் பல ஊடகங்கள் வாய்ப்புத் தந்தாலும் இலண்டன் தமிழ் வானொலி எனக்கு இறக்கைகள் கொடுத்துள்ளது. இதனால் என் அனுபவங்களை சுவையுடன் கூடிய சோகமாகப் பகிர்கிறேன். இன்று வரை அதாவது ஒக்டோபர் 2006 வரை இவள் வாழ்ந்து கண்ட அனுபவங்களை நூலாக்கி உங்கள் கரங்களில் தந்துள்ளேன் சுவைத்துத் தான் பாருங்களேன்.

என்னை இந்த நிலைக்கு உயர்த்திய எல்லோருக்கும் எனது மனம் கனிநத நன்றிகளும் வாழ்த்துக்களும்.

# உள்ளந் தாங்கும் உடல்

எழுத எழுத என முயன்று இன்னும் எழுதிக்கொண்டே இருப்பவர் நிலா. எல்லா விதமான உடல் வளமும் பெற்ற எம்மிலே பலர் எதுவும் செய்யாமல் நிற்கின்றோம். ஆனால், நகராது நிற்க வேண்டும் என்றவாறு இவர் உடல் நிலை. ஆனாலும் நில்லாமல் நிலாவாகத் தமிழுலகை வலம் வருகின்றார்.

கலை நிகழ்வுகள் பலவற்றிலே இவரைக் கண்டிருக்கின்றேன். பழகியதில்லை. கலையை விரும்பும் ஒருவர் என்ற எண்ணம். பின்னர் சில நிகழ்வுகளிலே கவிதைகளை வாசிக்கக் கேட்டிருக்கின்றேன். ஒரு பட்டிமண்டபத்திலே என்னோடு இணைந்து எமது பக்க நியாயங்களைத் திறம்பட முன்வைத்தார். இவ்வாறாகப் படிப்படியாக இவரை அறிந்து கொண்டேன். இவருடைய சொந்தக் கதையை இவர் எழுத எழுத யான் வாசித்தேன். முற்றாக அறிந்து கொண்டேன்.

வாசிக்கும்போது சில இடங்களிலே கண்கள் பனிக்கும். இவருடைய உடலின் இயலாமையை எண்ணி அல்ல. அதனை வென்றவர் இவர். அதற்காகப் பனித்தன என்றாலும் அது இவருக்குப் பிடிக்காத ஒன்று. இவருடைய கதையை வாசிக்கும் போது உங்களுக்கும் இது புரியும். கண்கள் பனிப்பது கவலையால் மட்டுமல்லவே. இவர் மற்றவர்களைப் பற்றி எழுதும் வரிகள் எம்மை எமது வாழ்வின் சில இடங்களுக்கு இழுத்துச் சென்றுவிடும். தனது தாயை இவர் வருணிக்கும் பாங்கு.... “இல்லாத ஆரோக்கியத்தால் இழந்துநிற்கும் வல்லமையை ஈடு கொடுக்கச் செக்கு மாடாக உழைக்கும் முதிய தாயார்” என்னும் அவருடைய வரிகளை விட வேறு விதமாக அந்தத் தாயை வருணிக்க முடியாது. ஒவ்வொரு சொல்லுமே கதை பேசி நிற்கின்றன. பதினைந்து ஆண்டுகள் பிரிந்த தந்தையை அவர் காண்பது புகழேந்திப் புலவருடைய நளவெண்பாவை நினைவு படுத்தியது. “கார் பெற்ற தோகையோ கண் பெற்ற வாண்முகமோ நீர் பெற்றுயர்ந்த நிலபுலமோ” எனத் தொடங்கி “ஏதோ உரைப்பன் எதிர்” எனப் புகழேந்தியே மயங்குகின்றார். நாட்டுநிலைமை காரணமாகப் பத்து ஆண்டுகள் தந்தையைக் காணாதவன் நான். அவர் மண்ணுலகை நீத்ததுகூடப் பத்தொன்பது நாட்களின் பின்னரே இலண்டனை எட்டியது. கண்கள் பனிக்காதா!

இவை மட்டுமல்ல. தனிப் பிள்ளையாகப் பிறந்து வாழ்பவர் பற்றி இரக்கப்படுகின்றார். காலத்தின் கோலத்தினாலே பிரிந்து வாழும் தம்பதியர்க்காகக்

கவலைப்படுகின்றார். இவை எல்லாம் கலையுள்ளத்தின் வெளிப்பாடுகள். தனக்காக இரங்காமல் மற்றையோரின் துன்பங் கண்டு இரங்கும் உள்ளமே கலையுள்ளம்.

தமிழீழத்தவரின் கதையோடு கலவரங்கள், இனப்படுகொலைகள், சிறை, வதைமுகாம், இலங்கைப் படையினரின் தாக்குதல், இந்தியப் படையினரின் தாக்குதல், எறிகணை, இடப்பெயர்வு, அகதிமுகாம், இன்னோரன்னவை இணைந்தேயிருக்கும். இவரையும் இவை விடவில்லை. எதனையும் இவர் மறக்கவும் இல்லை. மறைக்க முயலவும் இல்லை. இவருடைய சகோதரரின் சிறைவாழ்வு இவரை மிகவும் வேதனைப் படுத்தியுள்ளது. அவருக்காக எழுதிய கவிதையிலே, “சிறையை நீ வீடாக்கினாய் எம் வீடு சிறையானதே” என்ற வரி எவருக்கும் பிடிக்கும்.

கவலைகளை மட்டுமல்ல இங்கு எழுதியுள்ளார். பள்ளிப் பருவக் குறும்பிலிருந்து இன்றுவரை செய்யும் எதனையுமே அவர் ஒளிக்கவில்லை. வேம்படி மகளிர் கல்லூரியின் அன்றைய அதிபர் செல்வி ஆறுமுகம் எனது ஊரான சுதுமலையைச் சேர்ந்தவர். மிகவும் கண்டிப்பானவர். அவரை வருணிப்பதும் நிகழ்வுகளைக் கூறும் விதமும் யாரையுமே பள்ளிப் பருவத்திற்கு மீள வைக்கும்.

என்னிடம் அணிந்துரை கேட்டதற்காக எழுதவில்லை. உண்மையாகவே உள்ளத்திலே உதித்தனவே இனி வருவனவும். இவருடைய அன்றைய ஏழ்மை, தமிழீழத்தின் அரசியல் நிலைமை, உள்ளத்திற்கு ஏற்ப இடங்கொடாத உடல் போன்ற இவற்றோடு இவர் சாதித்தவை ஏராளம். பதினைந்து நாடகங்களை எழுதி மேடையேற்றுவது இலகுவான ஒன்றல்ல. இணையத்தளத்தை இயக்குவது சுலபமானதல்ல. கல்வியிலே தொடர்ந்து ஈடுபடுவதும் வெற்றி காண்பதும் இலகுவானதல்ல. அவ்வாறெனில் நிலாவிற்கு இவை இலகுவாகிவிட்டனவா? இல்லை. அவரே அந்த வழியைக் கூறுகின்றார். “உனக்குக் கீழே உள்ளவர் கோடி. நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு” என்ற கண்ணதாசனுடைய வரிகள் ஒன்று. “சவாலே மிகவும் பிடிக்கும்” என்ற மன வைராக்கியம். “கருமமே கண்” ஆனால் எதுவும் இயலும். “எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்” என்ற வள்ளுவனுடைய குறள் இலக்கணத்திற்கு இவர் இலக்கியம்.

இவற்றை இன்னும் விளக்கமாக உணர நீங்களும் கதையை வாசிக்க வேண்டும். நல்ல எழுத்தோட்டம். சொந்தக் கதையை எழுதும்போது கற்பனைக் குதிரை

ஓட மறுக்கும் என்பாரும் உளர். ஆனால் இவரோ உண்மைக் கதையை உயிரோவியமாகப் படைத்துள்ளார். கவிஞராகவும் நாடக எழுத்தாளராகவும் விளங்கும் இவருக்கு இது கடினமல்ல.

இவருடைய பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள், உதவியாளர்கள் யாவருமே போற்றுதற்கு உரியவர்கள். அவர் கூறுவதுபோலே இவருடைய கதை சோகமானது, சுவையானது, பலருக்குப் பாடமாகவும் அமையவல்லது. எனவே, இதனை இவர் எழுதியமை சாலச் சிறந்தது.

இவருடைய கதைக்கு அணிந்துரை எழுதியதை யான் எனக்குப் பெருமையாகக் கருதுகின்றேன். இறைவன் ஏதோ காரணங்கருதி இப்பிறப்பிலே இவரையும் இவரைச் சர்ந்தோரையும் தாக்கிவிட்டான். இனிவருங் காலங்களிலே இவ்வுயிர்களை அவன் கவனமெடுத்துக் காப்பாற்றுவானாக. இவர் எண்ணங்கள் யாவும் நிறைவேறட்டும்.

பலருக்கும் உள்ளத்தை உடல் தாங்கும். ஆனால் இந்த நிலாவிற்கோ உடலையும் உள்ளமே தாங்கும்.

இறுதிவரை இதே உளவலிமையோடு கலங்காது வாழ்ந்து இன்னும் பல நூல்களை வெளியிட எனது வாழ்த்துகள்.

அன்புடன்,

கந்தையா இராஜமனோகரன்
(00 44 (0) 7931 531 305)
சுதுமலை, தமிழீழம்.
ஐப்பசி 2006

# ஆசிரியர் பற்றி

கிடைத்ததில் வாழ்பவர் பலர். ச் தமக்கென அமைத்து வாழ்பவர் மிகச் சிலர்..

அரியாலையூர் அம்புயம் என்றும், நிலா என்றும் வானலைப் பரப்பில் அறிமுகம் ஆனவர்.

தந்தையார் நேசித்த காற்றலை, சண்றயிஸ் - சூரியோதயம், அதன் நீண்ட கால நேயராக..

தேடி இணைந்து, அதன் அபிமானமிக்கவராயும், தொடர்ந்து, மற்ஸ்-கோணர் சிறப்பு நிகழ்ச்சியின் தொகுப்பாளராகவும்,

நிலாமுற்றம்.கொம் இணையவலையத்தின் இயக்குனராக, அதில் மீதி உலகையும் தரிசிப்பவராக,

ஊடகம்சார்ந்து பேச்சோடும், எழுத்தோடும் நமக்கெல்லாம் அறிமுகமாகி, இன்று அதன் வெளியாக்கம் காணும் நிலையில், உதயகுமாரி பரமலிங்கம் அவர்கள்.. எம்முன்னே உயர்ந்து நிற்கின்றார்.

தளராத முயற்சி!
அசையாத நம்பிக்கை!
தடைகளை எதிர்கொள்ளும் துணிச்சல்!
இவரை இதுவரை உயர்த்தியுள்ளது.
இன்னமும் உயர்வார்.

எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் லண்டன் தமிழ் வானொலி-யில், கவிதைகள் புனைய ஆரம்பித்து, தன் வாழ்க்கையின் தடங்களை யாவர்க்கும் பாடமாக்க எண்ணி, எழுத ஆரம்பித்த ச்எழுதஎழுத- தொடர்சரிதம் இன்று அச்சேறி வெளியாகிறது.

சுமைகளும், சோகங்களும், தம்மோடு மறையட்டும் என்று ஒதுங்குவதை விடுத்து, இடைவந்த இயலாமை நிரந்தரமல்ல என்பதனை வாழ்வி யலாக்கினார்.

மிகப்பெரும் துணிச்சலால் அடைந்த வெற்றிகளுக்குப் பின்னே, ஒளிந்திருந்த உண்மைகள் இங்கே வெளிவருகின்றன.

எழுத-எழுத..

வாருங்கள்! மனம் பதிப்போம்!

அன்புடன் நடா மோகன்.
(ஒலிச்ஒளி படைப்பாளர்)

# எழுத, எழுத..

எத்தனையோ இருக்கின்றன எழுதுவதற்கு!

நான்பட்ட அனுபவங்கள் கொஞ்சம் வித்தியாசமானவை. அத னால் அதைப் பகிர்வது சுவையானதாகவும் சோகமானதாகவும் சிலவேளை பாடமாகவும் கூட இருக்கலாம்.

இதைச் செய்வதற்கு இடைஞ்சலாக இருக்கும் எனது உடல் நிலை. நான் கூறக்ககூற யாராவது எழுதினார்கள் என்றாலாவது பல புத்தகங்களை என்னால் ஆக்கிட முடியும்.

நான் நினைப்பதை எழுத வேண்டுமென்றால் நான் நினைப்பதைக் கணனியில் பதிந்தால் தானே வானொலியிலோ எழுத்துருவிலோ கொண்டுவர முடியும்.

அதற்கு நான் கணனியின் முன்னுட்கார வேண்டுமென்றால் இந்த நிலாவெனும் புனைபெயர் கொண்ட எனக்கு எத்தனையோ விடயங்கள் ஆகவேண்டி இருக்கிறது.

காலையென்பதை உணர்ந்து கண்விழிக்கும் போதே மனதுள் ஒரு பெரிய ஆதங்கம் எனப்படும் கல் அழுத்துகிறதே!

இன்று எனக்கு உதவிகள் சரியாகக் கிடைக்குமா? கிடைக்கா விடில் மேலும் என்காரியங்கள் தடைப்படலாம் அல்லது பின்போடப்படலாம் அல்லது நடக்காமலே போய்விடலாம் என்ற பெரிய ஆதங்கம் தான் அது.

“அரிது அரிது மானிடராதல் அரிது. அதுவும் கூன் குருடு செவிடு அன்றிப்பிறத்தல் அரிது” என்று ஒளவைப்பாட்டி அழகாகச் சொல்லிச் சென்றிருக்கிறாரே!

மற்றவர்களைச் சார்ந்து வாழ்தலென்பது எவ்வளவு பெரிய கொடுமை. அதை நான் தினமும் அனுபவித்து வருகிறேன்.

முப்பதுவருடமாக நோய் வாய்ப்பட்டு நான் நோயின் பிடியில் காலச்

சக்கரத்தில் சக்கரநாற்காலியில் அமர்ந்து வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டும் எனது வாழ்க்கையொன்றும் பஞ்சு மெத்தை அல்லவே7

கண்விழித்ததும் இல்லையில்லை என்விழிப்பு நேரத்தை காதில் விழும் அழைப்புமணி தெரியப்படுத்தியதும் கண்கள் தேடியோடும் எனது தெரிவில் வாங்கிய சுவர்க்கடிகாரத்தை நோக்கி. அது காலை ஆறரை என்றோ அதற்கு அண்மித்த நேரத்தையோ காட்டி நிற்கும்.

அதைத்தொடர்ந்து என்னுடன் தங்கிநிற்கும் பணிப்பெண்ணும் அந்த அழைப்புமணிக்குக் காரணமான பணிப்பெண்ணும் பாரந் தூக்கி போன்ற அமைப்பைக்கொண்ட 'ஹொய்ஸ்ட்' என ஆங்கிலத்தில் அழைக்கப் படுகின்ற உபகரணத்தால் என்னைத் தூக்கி ஓர் உருளும் தன்மையுள்ள நாற்காலியில் அமர்த்தி அழைத்துச் செல்வர் குளியலறைக்கு.

பொறுங்கள். யார் இந்தப் பெண்மணி! ஏன் இந்தப் பணிப்பெண் என்னுடன் தங்கி இருக்கிறாள்? என்றெல்லாம் கேள்வி உங்க ளுக்கு வரக்கூடும்.

என் சொந்தக் காரியங்களைக் கூடஎன்னால் கவனிக்க முடியாத என்னைப் பராமரிக்கத்தான் இந்தப் பணிப்பெண் என் வீட்டில் இரவுமுழுவதும் தங்கி இருக்கிறாள். சரி. ஏன் இந்த இரண்டாவது பணிப்பெண்? இவர்களை யார் வேலைக்கமர்த்தினார்கள்? இவ்வளவும் ஏன்?

தொலைந்துபோன என் ஆரோக்கியம் தேடித்தந்த துர்ப்பாக்கியம் தான் இது.

பன்னிரண்டு வயதுவரை என்னுடனிருந்த ஆரோக்கியம் எதுவித சைகை யும் இல்லாமலே எனைவிட்டுப்பிரியுமென்று யார்தான் நினைத்தார்கள்?

இலங்கை யாழ்நகரில் அமைந்துள்ள அரியாலையெனும் ஊரிலே கிளாக்கர் வீட்டார் என்று சொன்னாலே தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்த ஓரளவு வசதியான குடும்பத்திலே பிறந்து எல்லோரையும் போல் நடந்தோடி வாழ்ந்த நான்கு பிள்ளைகளில் கடைக்குட்டியான எனக்கு இப்படி மற்றவர்கள் தயவில் வாழும் நிலைவரும் என்று எதிர்பாராத எங்கள் குடும்பத்தினர்க்கு இது பெரிய இடியாக அமைந்துவிட்டது ஆச்சரியமான விடயமல்லவே! ஓடித்திரியும் மகவு கொஞ்சம் கொஞ்சமாக உடல் நிலையிழப்பதென்றால்?

கொழும்பில் என் தந்யைார் நிலஅளவைத் திணைக்களத்தில் பணிபுரிந்த போது எடுத்த புகைப்படம் இதோ:



எங்கோ, இலங்கை நாட்டின் மத்திய பகுதியான சிங்களவர் செறிந்து வாழும் அனுராதபுரத்தில் எனது அப்பா மாற்றலாகி எழுதுவினைஞராக வாழ்ந்த அந்தக் காலங்கள்!

எட்டுவயது முதல் பதின்மூன்று வயதுவரை வாழ்ந்த காலங்கள்! நான் பாடசாலையால் வந்தால் வீட்டிலேயே இருக்க மாட்டேன். ஆறுமணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி வாசிப்பிற்கான தொடக்க இசை காதுகளில் விழுந்து "ஐயையோ ஆறுமணியாச்சே. அப்பா அடிக்கப்போறாரே" என்று, அந்த வட்டாரத்திலமைந்திருந்த பூங்காவில் இதர நண்ப நண்பியர்களுடன் ஊஞ்சல் ஆடி, பட்டம் பறக்க விட்டு, எட்டுக்கோடு, கெந்திப்பிடித்தல், கிளித்தட்டு என்றெல்லாம் விளையாடி முடித்து வீடு நோக்கியோடி வந்த, அந்த வசந்த காலங்கள்!

இந்த வசந்தத்தை காலதேவன் மாற்றிவிட நினைத்தானோ!

பாடசாலைக்கு செல்லும் போதெல்லாம் எனது பாடசாலைப்பை எனது காலின்

முழங்கால் பின்பகுதியில் பட்டதும் கால்மடங்கி விழுந்த கசப்பான பள்ளிப் பருவங்கள்!

பரதநாட்டிய வகுப்பில் ஆடும்போதே விழுந்தாலும் வெளியில் காட்டிக் கொடுக்காத தருணங்கள்!

மேடை ஏறுவதே சிரமமென்று மேடையேறி பேச்சுப்போட்டிக்கு பரிசுவாங்க முடியாத அவலங்கள்!

சருமவியாதியொன்றால் பாதிக்கப்பட்டதனால் தான் இப்படி அடிக்கடி விழுகிறேனோ அல்லது வயதேற ஏற நாகரிகவயப்பட்டு தான் இப்படி விழும்விதமாக நடக்கிறேனோ என எனைப் பெற்றவர்கள் விசனப்பட்ட பொழுதுகள்!

அனுராதபுரத்தில் வைத்தியத்துக்கு செய்த முயற்சியெல்லாம் கைகொடுக்காததையடுத்து யாழ்நகர் வந்து வைத்தியசாலையில் இருந்ததனால் எழுபத்தியேழில் நடந்த இனக்கலவரத்திலிருந்து தப்பிய வாய்ப்புகள்!

அந்த வைத்தியசாலைப் பரிசோதனை விளைவுகள் தந்த முடிவுகள்! நான் 'மஸ்கியூலர் டிஸ்ரொபி' எனும் வியாதிக்கு ஆட்பட்டிருப்பதாகவும் இந்த வியாதியால் நான் இருபத்தைந்து வயதிலேயே இவ்வுலக வாழ்வை இழக்கலாம் என்ற வைத்தியர் கூறிய அந்தக்கணங்கள் அம்மாவின் காதுக்குப்போடப்பட்ட வெடி குண்டுகள்!

பலருக்கும் மறக்கமுடியாத இனிய நினைவுகளைத்தரும் பள்ளி வாழ்க்கை எனக்கு கசப்பையும் தந்து வைத்திருப்பது விதியின் வேடிக்கை என்போமா?

எல்லோரையும் மாணவியரையும் போல் மடிப்பு கலையாத சீருடை அணிந்து பாடசாலை செல்லும் நான் கடியெறும்பு வதைத்தாலும் குனிந்து கூடத் தட்டிவிட முடியாத, தட்டினால் தான் சடாரென்று அந்தக் கூட்டத்தில் விழுந்து விடுவேனே, விழுந்தால் எல்லோரின் பார்வைக்கும் ஆளாகி விடுவேனே!

மற்ற மாணவிகளைப் போல சப்பாத்து அணியக் கூட முடியாத, அணிந்தால் அதுவே நான் நடப்பதற்கான சமநிலையைக் கெடுத்துவிடும், அதுவே எனது விழுகைக்குக் காரணமாக அமைந்துவிடும் என்று ஒதுக்கிய வேதனைகள்!

பாடசாலைப் படிகளில் ஏறமுடியாமல் கைகளைஊன்று கொடுத்து படிப்படியாக ஏறிய கொடுமையான அனுபவங்கள்!

அடுத்தகை ஊன்றுகொடுக்க வேண்டுமே என மிகச்சுருக்கமாக இயன்றளவு சுமை குறைந்தது, மட்டுமே புத்தகங்கள் சுமந்த சுமைநிறைந்த காலங்கள்!

# அங்கம் - 2

என்னவோ தெரியவில்லை எனக்கு படிப்பின்மேல் விளக்க முடியாத பெருவிருப்பம் ஆழ்மனதில் வேரூன்றி இருந்தது.

படிப்பின் மேல் வந்த அந்த பிடிப்புக்கு எனது அம்மா அப்பாவும் மட்டுமல்ல அவர்களின் உடன்பிறப்புகளும் எனது இரண்டு பேத்திமார்களும் கூடக் காரணமெனலாம்.

எனக்கு மிகச் சிறுவயதாக இருக்கும் பொழுது அம்மாவின் மடியில் ஓடிப்போய் விழும் காலங்களில் பல பெற்றோர்களையும் போல் 'எங்கட பிள்ளை டொக்டராகவோ எஞ்சினியராகவோ வருவாள்' என எனது அம்மா கூறுவது என்மனதில் மிகவும் பதிந்திருந்தது.

படிப்பில் மிகவும் அக்கறை உள்ளவள் நானல்ல தான் என்ற போதிலும் படிப்பின் மேல் மிகவும் காதல் கொண்டவளாகவே இருந்தேன். என்ன குழப்புகிறேனா?

விருப்பம் இருந்தபோதும் நான் படிப்பதில் அக்கறை கொள்ள முடியாத அளவுக்கு கடைக்குட்டி என்ற கர்வம், அத்துடன் நேரந்தவறாத நட்பு உள்ளங்களுடன் தொடர்பு கொள்வதில் இருந்த சிரத்தை இவையெல்லாம் காரணமாக இருந்ததனாலோ என்னவோ படிப்பில் முழு அக்கறை காட்டவில்லை என்றே கூறவேண்டும்.

படிக்காமலேயே பாடங்களில் புலமை வரவேண்டும் என்று நினைக்கும் சிறார்களை இங்கும் தான், ஐரோப்பாவில் கண்டு கொண்டு தானிருக்கிறோம். இல்லையா? விடயத்துக்கு வருவோம்.

ஏதோ நான் முற்பிறப்பில் செய்த புண்ணியமோ என்னவோ பாடசாலையில் படிப்பிப்பதைப் பதிவு செய்து கொள்ளும் வலிமை எனது மூளைக்கிருந்தது. இருக்கிறதென்று நான் கூற மாட்டேன்.

நான் வீட்டில் படித்தது மிகவும் குறைவு. காரணங்களில் முதலாவது காரணம் நான் கடைக்குட்டி, இரண்டாவது எனது ஊருக்கு அடுத்த ஊராம் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் படிக்கும் வரை நான் தான் முதலாவது பிள்ளையாக வருவது.

ஆரம்ப வகுப்புகள் என்பதாலோ மூன்று பாடங்களுக்கும் முன்னூறு புள்ளிகள் கிடைத்தன எனக்கு. அனுராதபுரம் மாற்ற லாகி அப்பா எனையங்கு அழைத்தேகிய பின்பு ஆறாவது ஏழாவது என நான் ஆனதும் தான் புரிந்தது நாம் எப்போதும் பலர் மட்டங்களில் எமை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற வுண்மை.

அது ஒருபுறமிருக்க எனது உடன் பிறப்புகள் வாய்விட்டு மனனஞ் செய்தவை எனக்கு பதிவாக அமைந்தன. அதனாலும் விளையாட நிறைவான நேரம் கிடைத்தது.

இனக்கலவரத்தால் எழுபத்தியேழில் விரட்டியடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்த நாங்கள் பல பாடசாலைகளிலும் சேர வாய்ப்பு தந்திருந்தனர். எனது தந்தையார் என்னிடம் கேட்டார் எப்பாடசாலையில் சேரவைக்கலாம் என.

நான் வளர்ந்து வரும்வேளை எனது இயலாமையும் வளர்வதை உணர்ந்த பெண்பிள்ளையான நான் 'கலவன் பாடசாலையில் விழுந்து எழுவது எல்லாம் அவமானமாக இருக்குமே' என்பதை கருத்தில் கொண்டு தூரம் அதிகமாக இருந்தாலும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் சேருவதையே விரும்பினேன்.

'ஏலாதபிள்ளை படிச்சிருக்க வேணும்' என்ற அப்பாவின் கூற்றும் வேறு என் காதில் ஒலித்தபடி.

பாடசாலைக்குப் போகும் போது பேரூந்திலும் என் அயல் சக பாடசாலை மாணவியர்களுடன் எட்டாம் வகுப்பு படிக்கும் போது போய் வந்தேன்.

அனுராதபுரத்தில் படிக்கும் போது பலசமயங்களில் இருந்த ஒரே ஈருளியில் எனைப் பாடசாலையில் கொணர்ந்து விட்டு விட்டு வீடுவந்து அப்பாவிடம் அந்த ஈருருளியைச் சேர்த்து விட்டு ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள அதே பாடசாலைக்கு நடந்து வந்து சேரும். எனது பெரியண்ணாவின் அன்பை நான் இப்போதும் நினைத்து பெருமிதப் படுவது உண்டு.

அந்த செய்கை நான் கடைக்குட்டி என்பதால் செய்யப் பட்ட விடயம்.

இங்கும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இரண்டு அண்ணரும் என்னை

மனஞ் சலிக்காமல் கொணர்ந்து போய் விடுவார்கள். நானோ மிகவும் வீம்புக்காரி அப்போது. இரண்டு அண்ணன்மாரையும் அன்பென்ற சாட்டையால் ஆட்டிப்படைத் தவள்.

சக உதரங்களின் அவசியம் எனக்கு எப்போதும் தெரிந் திருப்பதால் ஏக மகனாகவோ மகளாகவோ பிறப்பவர்கள் மேல் எனக்கு ஓர் அனுதாபம் இப்போதும் உண்டு.

எதுதான் எங்கள் கைகளில் இருக்கிறது?

இந்தப்பள்ளிப்பருவத்தில் எனது பெற்றோர் பருவமழைபோல் மாறிமாறி ஏதோவொரு வைத்தியத்தையும் செய்தபடி தான் இருந்தார்கள்.

ஆங்கிலவைத்தியம் மேலிருந்த நம்பிக்கை குறைய நாட்டு வைத் தியத்தில் அக்கறை காட்டினர்.

பலருக்கும் அப்போது தெரிந்திருந்த நாட்டுவைத்தியர் யாழ் நகரிலுள்ள சிவன் கோவிலடியிலிருந்த மலையாள வைத்தியர். அந்த வைத்தியரிடம் பலரும் தங்கியிருந்து கூடவைத்தியம் செய்வார்கள். இடமே ஒரு அடியாள் பட்டறை போலிருக்கும். கைதட்டியதும் ஓடிவரும் சேவகர்கள்.

அங்கெல்லாம் சிறுமியான எனையழைத்து வைத்தியத்துக்கு ஏகுவார் எனது அப்பா. கொதித்த எண்ணெயால் உருவுதல், ஒத்தடம் பிடித்தல், ஓர் வகையான கலவையை முதுகில் அப்பி காயும்வரை இருக்கவிட்டு ஆங்கில வைத்தியத்தில் 'பிளாஸ்ரர்' போடுவது போல் 'பத்து' என்று கூறப்படும் ஒன்றைப் போடுவார்கள். இப்படி வைத்தியம் என்ற பெயரால் என் பள்ளிநாட்களில் பலவும் களவாடப்பட்டன.

இவை ஒருபுறம் பாடசாலையிலோ வேறெங்கோ நடக்கும் போதெல்லாம் நான் விழுந்து எனது காலிலோ கையிலோ வேறெங்கிலோ பலத்த நோவுகளையும் காயங்களையும் வரப்பிரசாதமாக வாங்கிவருவேன் வீடுவரும்போது.

அந்த நோவுக்கெல்லாம் எண்ணெய் தடவிவிட்டு 'சுழுக்கு' எடுத்து சுடுதண்ணீர் வைத்து குளிப்பாட்டிச் சீராட்டிய நடமாடும் தெய்வம் என் அம்மா.

அத்தோடு அயலிலுள்ள ஓர்மூதாட்டியை அழைத்துவந்து பக்குவம் எல்லாம் செய்து பத்தியம் ஆக்கிப் பத்துமாதம் சுமந்ததோடு நிறுத்தாமல் பகலிரவாய் காத்த என் அம்மா!

எத்தனையோ நாட்கள் நான் விழுவதை என்வீட்டாரிடம் மறைத்ததை என்னைத் தங்கள் முழங்காலை ஊன்று கொடுத்து சுதாரித்து எழும்பி நடக்க வைத்த நண்பியர்களின் அன்பை நான் மறக்கவே இல்லை.

போதாக்குறைக்கு பெண்ணாக வேறு பிறந்து தொலைத்து விட்டேனே இந்தப் பூவுலகத்தில்! எவ்வளவு தான் புரட்சி பேசினாலும் பெண் பெண் தான்! அதுவும் எங்கள் தமிழ் சமுதாயத்தில் பெண்ணுக்கென்று வரைமுறைகளிருப்பதை தமிழ்ப் பெண்கள் அனுசரிக்கத்தானே வேண்டும்.

இவ்வளவுக்குள்ளும் என் நண்பியர்களுடன் சென்று பார்த்த எமது ஊர் நாடகங்கள், தொலைக்காட்சி திரைப்படங்கள் பார்க்க அனுமதி வாங்க நானும் எனது நண்பிகளும் போட்ட நாடகங்கள் தான் எனைப்பிற்காலங்களில் நாடகங்கள் எழுதவைத்ததோ!

நினைத்துப் பார்த்தால் சிரிப்புத்தான்.

ஒன்பதாம் வகுப்பு ஆரம்பமானது. என்பெற்றோர் மீண்டும் அறிமுகம் செய்து வைத்தார்கள் அடுத்த வைத்தியமான சீனவைத்தியம் 'அக்குபங்ஸர்' வைத்தியம்.

அரியாலையில் காலை ஐந்து மணிக்கே காத்திருந்து யாழ்ப்பாணப் பேருந்து பிடித்து ஆறுமணிக்கு இணுவில் போகும் பேருந்தில் அமர்ந்திருப்பேன் ஏழு முப்பது மணிக்கு வரும் அங்குபங்ஸர் வைத்தியரான ஓர் தமிழரைக் கண்டு வைத்தியம் பெற்றுக் கொள்வதற்குத்தான் இந்த ஏற்பாடு

அப்போதே அறிமுகமான அந்த அங்குபங்ஸர் வைத்தியத்துக்கு அம்மா தனது நகையொன்றை விற்றுப் பணம் வைத்திருந்தது நினைவிருக்கிறது. என்ன நகையென்று தான் ஞாபகமில்லை.

அந்த வைத்தியம் அப்போதவ்வளவு பிரபலமாக இருக்கவில்லை. அதனால் அதற்கு கொடுத்த விலையும் சற்று அதிகம்தான்.

தினமும் இருபதுக்கும் மேற்பட்ட மிக மெல்லிய மின்காந்த ஊசிகளை உடலில் செலுத்தி அரைமணிநேரம் கழிந்து கழற்றி விடுவார் வைத்தியர்.

அது முடிந்து பாடசாலை தொடங்கி ஒருமணிநேரம் கழித்து போகும்போது கண்டவனுபவங்கள் கீறல்களாக இன்னும் என் மனதில்!

# அங்கம் - 3

இதற்கு முன்னதாக என்னை அப்பா அழைத்துப் போனதும் இருந்த விடுமுறை முடிவதற்குள் தனது அரசாங்கப் பணியின் நிமித்தம் குறுகிய காலத்துக்குள் மீண்டும் யாழ்நகர் அழைத்து வர கொழும்பு போதனாசாலையில் இருந்து இரண்டு மூன்று கிழமையிலேயே கூட்டிவந்ததும் கூட கொஞ்சம் நினைவில் இருக்கிறது.

நான் போதனா வைத்தியசாலையில் அனுமதி பெற்றிருந்த காலங்களில் எனது அம்மாவின் ஓரேதங்கை, எனது சிறியதாயாரும் தனது கணவருடன் வாழ்ந்து வந்ததால் எனது உணவுக்கு அதிகம் பிரச்சனை அதிகம் இருக்கவில்லை.

உணவு விடயத்தில் நான் மிகவும் சிரமம் தரும் பேர்வழி. அந்தப்பொறுப்பை அம்மாவைத் தவிர எவரும் ஏற்றுக் கொள்ள இப்போதும் விரும்புவதில்லை என்றால் பாருங்களேன். காலம் என்னை எப்படியெல்லாம் அடித்துச் செல்லுகிறது என்பதை அறியத்தானே போகிறீர்கள்.

செல்லம் என்ற பெயராலோ, அக்கறையென்ற பெயராலோ தங்கள் பிள்ளைகளை சிரமப்பட வைக்கும் பெற்றோர்களை இப் போதும் பார்க்கிறேன்.

மற்றும் அப்பாவின் தம்பியான எனது சித்தப்பா கொழும்பு வைத்திய சாலையில் மருந்து வினியோகத்துறையில் வேலைபார்த்து வந்தார். அவரிடம் கேட்டால் புரியும் என்ற அளவுக்கு உணவு விடயத்தில் நூதனமானவளாக இருந்தேன்.

அந்த முயற்சிக்குப்பின் தான் இந்த அக்குபங்ஸர் வைத்தியம். வைத்தியர் வந்து முதலாவது குழுவுக்குள் நான் தெரிவாகி அந்த மினகாந்த ஊசிகளின் அவதிகளுக்கு அகப்பட்டு மீண்டும் இணுவில் கந்தசாமிக் கோவிலுக்கு அருகிலுள்ள பேருந்துக்கு காத்து நிற்கும் போது எட்டு முப்பது ஆகிவிட்டிருக்கும்.

வீதியால் போய்வரும் மக்களில் எழுபத்தைந்து வீதத்தினரின் பார்வைக்கும் ஆளாகிக் கூசிக்குறுகிய உணர்வுகள் எங்கே பாடங்களில் கவனம் செலுத்தவைக்கும்?

அதுவும் கனவுகள் நிறைந்த அந்தப் பதினான்கு வயது. ஆனாலும் படித்தே ஆனால்தான் இந்த இயலாத பெண்பிள்ளையின் வாழ்வு வளமாகும் என்ற என்வீட்டாரின் உறுதி! அது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன்!

ஆனால் உறுதியில்லாத எனது கால்கள்!

'எப்போதும் ஏதாவது தட்டுப்படலாம் நான் விழலாம்' என்ற அச்சத்துடன் கழிந்த கொ் ரமான காலப் பொழுதுகள்! அந்தக் கடினத்திலிருந்து தப்ப எனது குதிகாலை உயர்த்தி உயர்த்தியே நடக்க முற்படலானேன். அதற்கேற்ற உயர்ந்த குதியுயர்ந்த சப்பாத்தும் வேறு!

ஒருவாறு யாழ்ப்பாண பெரிய பேருந்து நிலையம் வந்து பூபாலசிங்கம் புத்தகசாலை கடந்து யாழ் வைத்தியசாலைக்கு முன்னுள்ள வீதியால் வந்து யாழ் நூல்நிலையம் நோக்கி நடந்து மத்திய கல்லூரிக்கும் வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலைக்கும் இடையாலுள்ள வீதி
யால் முதலாம்குறுக்குத்தெரு வந்துபாடசாலைக்குள் போகவேண்டுமே!

வீதியே மக்கள் நடமாட்டமின்றி அமைதியாக இருக்கும் வேளை. ஒரே பயமாக இருக்கும். அதற்குள் "டேய் யார்ரா, உனக்கு ஸகூல் திறக்கிறது?" என்றோ அல்லது "லிவ்ற் தரட்டா" என்றோ அல்லது நான்கு அல்லது ஐந்து பேர் சேர்ந்து போடும் கூச்சல்களுக்கோ ஆளாகி பாடசாலையில் முதல் பாடமான விஞ்ஞானபாட நேரம் இரட்டைப் பாடநேரங்களாக படிக்க வாய்ப்பு இல்லாமல் இழந்து போன துன்பங்கள்!

முதல்நாள் பாடசாலைக்கு நேரம்கழித்துப் போனபோது எனது அதிபர் செல்வி ஆறுமுகம் ஆள்விட்டு எனை அழைத்து விசாரித்தார்.

அப்பா ஏற்கெனவே எனது தாமதம் குறித்த காரணத்தைப் பற்றி எழுதியிருந்த கடிதத்தைக் காண்பித்ததும் சம்மதத்தை தலையாட்டல் மூலம் தெரிவித்தார். செல்வி ஆறுமுகம் என்றாலே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளின் கலவையே மனதுள் தோன்றும். இவர் புன்னகைத்ததை நான் கண்டதேயில்லை. இதற்கு எங்கள் பாடசாலை மாணவிகளோ காரணமோ தெரியவில்லை.

சுவையான சம்பவமொன்று என்மனக்கதவைத் தட்டியுள்ளே எடடிப்பார்க்கிறது. அன்றும் நவராத்திரி பூசைக்காக அனைத்து சைவ மாணவிகளும் தம்பையா

மண்டபத்துக்கு சென்றுவிட்டனர். அல்லாத கிறிஸ்தவ மாணவிகள் வகுப்பில் தங்கியிருக்கலாம். அவர்களுடன் மாடிப்படியேற ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க நானும் செல்லாமல் இருக்கலாம் என்ற அனுமதி எனக்கு.

அந்த மாணவிகள் வழமைபோல் தங்களுடன் மிக அன்னி யோன்னியமாக இருந்த சகமாணவிகளின் உணவுப் பொதி களைத் திறந்து அதற்குள் மாமிசவுணவு உள்ள பொதியொன்றைத் தெரிவு செய்து சாப்பிட விழைந்தனர். என்னைக்கூட அவர்களுடன் பங்கு கொள்ளும் படியழைத்தனர்.

பொதுவாகவே சாப்பாடு என்றாலே பெரிதான ஆர்வமோ அல்லது மற்றவர்களிடம் வாங்கிச் சாப்பிடத்தயங்குபவள் நான் என்ற காரணங்கள் வேறு.

அந்த சாப்பாட்டில் அசைவ உணவான முட்டைப் பொரியல் இருந்ததும் கவனிக்க வேண்டிய விடயம். ஐந்தோ ஆறு மாணவிகளோ அட்டகாசம் பண்ணிவிட்டு அமர்ந்து விட்டனர்.

ஆனாலொன்று அவர்கள் மதியம் சாப்பிடும்போது நிச்சயம் தங்கள் உணவைப் பகிர்ந்து கொடுக்கத்தான் போகிறார்கள்.

அந்த உணவுக்கு சொந்தக்காரி ஏதோ சிலபல காரணங்களால் அண்மையில் அனுமதி பெற்றுக் கொண்ட ஓர் புதிய மாணவி. ஆனால் அவள் அந்தக் குழுவுடன் தான் அங்குமிங்கும் உலாவித் திரிபவள். அரட்டை அடிப்பவள்.
அவள் வகுப்புக்கு வந்ததும் தன்னுணவு பரிமாறப்படுவதை அறிந்து கொண்டாள். ஒன்றுமே பேசாமல் அரை நேரத்துடன் வீடு சென்று விட்டாள். அடுத்தநாள் அது பூகம்பமாக வெடிக்கும் என்று யார் தான் எதிர்பார்த்தார்கள?

வகுப்பாசிரியை மூலம் விசாரணை எல்லாம் ஆனது. ஆனால் ஒரு மாணவி கூட அதுபற்றி வாய் திறக்கவேயில்லை. எமது அதிபர் செல்வி ஆறுமுகம் ஓரிரு தினங்கள் அவகாசம் வழங்கினார். எல்லோரும் சேர்ந்து சாதித்த மௌனம் தந்த விளைவு வேம்படி பாடசாலை விடுதியுள் உள்ள நீண்ட விறாந்தையில் இரண்டு பாடநேரம் சுவரைப் பார்த்துக் கொண்டே நிற்கவேண்டுமென்ற தண்டனைக்குள்ளானோம் நாம். நானும் தான் கால்கடுக்க நின்றேன்.

அதைத்தொடர்ந்து அந்தக் குழுவைச்சேர்ந்த உணவைச் சாப்பிட்ட சாப்பிடாத மாணவிகளை வேறு பிரிவுகளில் சேர்த்தும் அந்த மாணவியை

பாடசாலையிலிருந்து அகற்றி வேறு பாடசாலைக்கு அழைத்து சென்று விட்டார் பல்கலைக்கழகப் பேராசிரியரான அவள்தந்தை. இதற்குள் வேடிக்கை என்னவென்றால் அந்தப்பெண் விரதமாமன்று என செல்வி ஆறுமுகத்துக்கு தொலை பேசியில் தாறுமாறாப்பேச்சாம். விந்தையான மனிதர்கள்! இப்படியான சம்பவங்கள் எனக்கினிமை சேர்க்கும் நினைவுகள்!

நான் பாடசாலையில் புகட்டலை இழக்கிறேன் என்றாலும் பிரத்தியேக வகுப்புக்குப் போகும் வாய்ப்புகளும் அவ்வளவாக இருக்கவில்லை. அதற்குள் எதற்கும் முட்டுக்கட்டையாக எனது தாளாமை.

எனது உடன்பிறப்புகளும் எனக்குமிக அண்மித்தவயதைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கும் அவர்கள் படிப்பும் அதற்கான நேரஒதுக்கல்களும் பணத்தேவைகளும் தவிர்க்க முடியாததாக இருந்தன. பத்தாம் வகுப்பை நான் அடைந்ததும் எனது அக்கா எனக்கு சொன்ன அறிவுரை இன்றும் எல்லோருக்கும் உதவக்கூடியதும் எந்த நாட்டினராலும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுமொன்று.

# அங்கம் - 4

ஆறுதலாக வலம்வந்த நினைவுக் குதிரையை, உங்கள் பொறுமையைப் பரிசீலிக்க விரும்பாமல் சற்றுவேகமாகச் செலுத்த வேண்டியவளானேன்.

ஒருவாறு பத்தாம் வகுப்பை எட்டித்தொட்டு விட்டேன். இனியும் வைத்தியம் என்ற பெயரால் என் படிப்புக்கு நீங்கள் பங்கம் வைக்க முடியாது என வீட்டாரிடம் உறுதியாகத் தெரிவித்த நான் அக்காவின் அறிவுரையின் படி கணித பாடத்தை மீள்பயிற்சிகளின் மூலம் என்வசப் படுத்தினேன்.

அதற்கு எனது மிகவிருப்பமான பாடம் கணிதம் என்பதுவும் காரணமாயிருக்கலாம். கணித பாடவளர்ச்சிக்கு மட்டுமல்ல எந்த ஒருதுறையின் முன்னேற்றத்துக்கும் தொடர்ந்த பயிற்சி செய்யும் பழக்கம் கைகொடுக்கும் என்பதை வளர்ந்து வரும் சமுதாயம் சிந்திப்பார்களா? சிந்தித்தால் நல்லது.

ஆகா ஓகோ என்றில்லாவிடினும் ஒருசில திறமைச் சித்திகளுடன் க. பொ. த உயர்தர வகுப்பு கணிதப்பிரிவு பயிலும் மாணவியானேன்.

அப்போதும் விதி பல்லிளித்ததன் பிரகாரம் ஆங்கில வைத்தியத்துக்காக அப்பாவினால் அழைத்துச் செல்லப்பட்டேன்.

இந்தவயதில் என்கைகளின் இயக்கமும் சற்று குறைய ஆரம்பித்ததை நீண்ட அடர்த்தியான கூந்தலை வாரச் சிரமப்பட்டு முழங்கையை சுவரில் ஊன்று கொடுத்து வாருவதிலிருந்து உணர்ந்து கொண்டேன்.

என்நோய் மிக மிக ஆறுதலாகவே எனக்குள் வளரக் கூடியது. தசைநார்கள் தன்வலுவை இழந்து போவது தான் இதன் செயற்பாடு. கொழும்பு வைத்தியம் மீண்டும் என் நோயின் பெயரை உறுதி செய்ததைத் தவிர வேறொன்றுமில்லை.

இம்முறை எனது க. பொ. த உயர்தரத்தின் அத்திவாரமே உறுதியில்லாமல் போடப்பட்டது தான் பலனாகக் கிடைத்தது.

க. பொ. த உயர்தரப் படிப்பு என்பது ஒரு புதிய அத்தியாயம். அதை முறையாகத்

தொடங்காததால் மிகவும் பாதிப்புக்குள்ளான நான் அடுத்த ஆண்டில் எனக்கு அடுத்த ஆண்டு மாணவிகளுடன் சேர்ந்து படித்தாலென்ன எனச்சிந்தித்து கல்வித்திணைக்களம் ஈறாக முயற்சி செய்தேன்.

ஓர் பெரிய அதிகாரி எனைக்கேட்டார், நோய்வளரும் நிலையில் உள்ள நான் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறேன் அதற்கென. அவரது மனப்பான்மை அப்போதே மிகப்பெரிய தாக்கத்தையும் விழிப்புணர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியது.

இவை எல்லாம் வாழ்வெனும் தோட்டத்தில் அமைக்கப்பட்ட அமைக்க இருக்கும் பூப்பந்தருக்கென நடப்பட்ட கதியால்களென எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

இரவு பகலாக வாட்டும் முதுகுவலியுடன் ஒருவாறு அடுத்த வகுப்புடன் படித்து வந்தாலும் எனை மீறிய துன்பங்கள் என் படிப்பை சரியாக மேற்கொள்ள அனுமதிக்கவில்லை.

பல்கலைக்கழகம் புகுவது பகற்கனவானது.

இந்தக் காலகட்டத்தில் எனது தந்தை ஓய்வூதியம் பெற்றுக் கொண்டதும் வெளிநாடு போக முற்பட்டு ஒருமுகவரிடம் வேலையானதும் அதே முகவரிடம் ஊர்மக்களுக்காகப் பிணை நின்றதுவும் அதனால் நாணயத்தைக் காத்துக்கொள்ள சொத்துகள் இழந்ததுவும் என் வாழ்வின் பெரிய திருப்புமனை.

மேலும் பலமுயற்சிகள் தோற்றதுவும் தன்பங்களிப்பை மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு பணம் போனால் சம்பாதிக்கலாம், அன்பல்ல என்ற அம்மாவின் உறுதியும் எமது குடும்ப ஒற்றுமையும் எனக்கு மனதில் மிகப் பெரிய போதனை என்ற வேரையூன்றியதோடு நம்பிக்கையும் விடாமுயற்சியும் தான் வாழ்வுக்கு வேதவாக்கு என்பதையுணரவைத்தது.

இவற்றினிடையே தொடர்ந்த தாளாத முதுகுவலியும் இயலாமையும் என்னை விரக்தியின் விளிம்புக்கே எடுத்துச் சென்றதொன்றும் வியப்பில்லையே!

வெளியில் கொழுத்தும் வெய்யில்.

தரையில் பாய்விரித்துப் படுத்திருக்கும் நானோ வீட்டாருக்குத் தெரியாமல்

அழுதழுது வழிந்து கொண்டிருக்கும் கண்ணீரினால் பீ வீ, அது எனது வீட்டார் எனையழைக்கும் செல்லப் பெயர் வதனியினதும் எனது தந்தையின் பெயரினதும் முதலெழுத்துக்கள், என ஆங்கிலத்திலும் பாவி என்றும் மாறி மாறி எழுதி அழித்துக் கொண்டிருப்பேன்.

தொட்டதெற்கெல்லம் கோபம் வரும், எதிலும் நம்பிக்கையின்மை, கட்டாயம் வாழத்தான் வேண்டுமா என்ற கேள்வி, இதற்கா என்னைப் பெற்றெடுத்தா என் அம்மா என மறுகிய துன்பமான இளமைக் காலங்கள்!

பாடசாலை போனாலாவது எப்படியும் பொழுது போய்விடும்.

போகவே முடியாத உடல்நிலை வந்தபின்பு கூட இயன்றளவு ஒன்று விட்ட தினங்கள் போய்வந்தேன். எனது சின்னமாமியிடம் நான் போய் “மாமி என்னாலே ஏலவே ஏலாது” என்று அழுததை பலவருடங்களான பின்பும் அவரே அடிக்கடி கூறி வருந்துவார்.

வாழ்வை முடித்து விடக்கூட முடியாதே, அந்தசெய்கை கூட என்குடும்ப முன்னேற்றத்தைப் பாதித்து விடக்காரணமாகி விடுமே என்ற சூழ்நிலைகள்.

நின்ற நிலையிலேயே அம்மா குளிக்கவார்த்து விட்டால் பிற அலுவல்களை நின்ற நிலையிலேயே சமாளித்து செய்து விட்டு ஊரு நாற்காலியில் அமர்வது என்ற முறைக்கு வாழ்வு பழக்கப்பட்டது.

இருக்கும் பொழுதை நிதானமாகப் போக்கக்கூட உதவாத மனநிலை.

வீட்டை அழகாக வைத்திருப்பது எனக்குப் பிடித்த விடயம். பழையமுறையிலமைந்த நாற்சார் வீடான எனது வீட்டை எப்படி மாற்றியமைத்தால் அழகாக இருக்குமென பலவித கற்பனைகள் செய்து படங்கள் படங்களாகக் கீறுவேன்.

கவிதைகள் எழுதினதாக நினைவில்லை.

நண்பியர்களுக்கு வாழத்துமடல்கள் கவிதைசேர்த்து ஏதோ எல்லாம் எழுதி அனுப்புவேன். என் பிரிய தோழி ரஜனி சுன்னாகத்திலிருந்தாள். அவள் சுவைக்க சுவைக்க மடலெழுதுவதையும் விட்டுவிட்டேன்.

உற்ற நண்பன் போலவே பழகிவந்த எனது பெரியண்ணா வெளிநாடு போய்விட்டார். அப்பா, அண்ண இவர்களின் பிரிவு வேறு மனதை அழுத்தும்.

வாழ்விலிருந்த பிடிப்பு குறையத் தொடங்கியது. நோயாளி பெண் என்பதோடு நாட்டில் நடக்கும் குழப்பங்களும் என்வாழ்வை அழுத்தியது.

நாளாவட்டத்தில் என்னுடன் மிகவும் பாசமான எனக்கு நேர்மூத்த அண்ணாவின் ஆதரவும் எனது மச்சானமார், மச்சாள்மார், சிற்றப்பா பிள்ளைகள் இப்படி இவர்களின் சேர்க்கையும் அவ்வப்போது மகிழ்வைத் தந்தாலும் பிடிப்பு என்ற தராசை விரக்தி என்ற சுமை உயரவே செய்தது.



நாங்கள் சிறுபிள்ளையாக இருந்த காலங்களில் அநுராதபுரத்தில் வாழ்ந்து வந்ததால் ஊர்ப்பிள்ளைகளுடன் பழக அதிகம் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

பழகியவர்கள், அயலவர்களை அழைத்து வர அப்போது அதிகம் புழக்கத்திலில்லாத தொலைக்காட்சிப்பெட்டி அதுவும் கறுப்பு வெள்ளை, உதவியது என்றே கூறவேண்டும்.

தனிமை என்னைக் கொல்லவில்லை.

இப்படியிருந்தவென்னைத் தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி அயலவர் வேண்டிநிற்க, முதல் பதினைந்து நாட்களும் இலவசமாகப் படிப்பிக்கிறேன் என ஒரு பெரிய மேசை இரண்டு பக்கங்களும் போட இரண்டு வாங்குகள் கொண்டு ஆரம்பித்தேன்.

நான் காலப்போக்கில் ஒன்பது பேரை வேலைக்கமர்த்தி இயங்கும் பெயர்

கொண்ட அம்மாவின் பெயர் சரஸ்வதி உள்ளடங்கும் விதமான 'சரஸ்வதி கலையகம்' எனும் தனியார் நிறுவனத்தை நடாத்தியதோடு வருடாவருடம் கலைவிழாக்களும் நடாத்தினோம்.

இந்தத் தனியார் நிறுவனம் நடாத்துவதற்கு முன்னதாக நானும் அம்மாவும் எடுத்தோம் ஓர்முடிவு.

# அங்கம் - 5

பிரத்தியேக வகுப்பைத் தொடங்கு முன்பாக நான் என் இயலாமை தரும் அசௌகரியங்கள் பற்றி சிந்தித்தேன். நான் நாற்காலியில் உட்கார்ந்தால் எழும்பி நிற்கவேண்டுமாயின் அம்மாவினது உதவி தேவைப்படும் நிலை எனதாகவிருந்தது.

இந்நிலையில் எழுவது உட்கார்வது போன்றவைகளின்போது படிக்கவரும் மாணவமாணவிகளின் பார்வை என்னை மிகவும் இரணப்படுத்தும். அதனால் மேலும் என்வாழ்வு சுமைநிறைந்ததாய் ஆகிவிடுமே.

இவற்றைவிட காலையில் உள்ள ஆரோக்கியம் நேரம் ஆக ஆகத் தேயத் தொடங்கிவிடும். படுக்கையால் எழும்பி நடக்கும் போது உள்ள லாவகம் நேரம் போகப்போக மிக கேள்விநிறைந்த பலமற்றதாக ஆகி சுயதேவைகளைக் கூடநிவர்த்தி செய்யமுடியாமல் அவதிப்படுவேன்.

இவற்றை எப்படி எதிர்ப்பது? அம்மாவும் நானும் ஒன்றுசேர்ந்து சிந்தித்து ஓர் சக்கர நாற்காலி வாங்கலாமென முடிவுசெய்தோம்.

அதையடுத்து ஆரம்பித்த வகுப்புகள் என்னை மும்முரமாக்கியது. அந்த மும்முரவாழ்வு என் கவலைப்படும் நேரத்தை முழுங்கியது.

அத்துடன் வருமானம் தந்த உத்வேகம், செய்யும் பணியால் மாணவர் கண்ட முன்னேற்றம் நான் கூட இவ்வுலகத்துக்கு பயனுள்ளவள் என்ற எண்ணத்தை எனக்குள் வளர்த்தது.

ஒன்றைக் குறிப்பிடத் தவறிவிட்டேன். நான் தொலைக்காட்சியில் பார்த்த நதியா நடித்த "பூவே பூச்சூடவா" படத்தில் கதபநாயகி நோய்வாய்ப்பட்டு எப்போதும். இறந்துவிடலாம் என்று தெரிந்தும் இருக்கும் நாட்களைச் சிறுவர்களுடன் மகிழ்வுடன் கழிப்பது, கூட ஒருவகையில் என்னைச் சிந்திக்க வைத்தது. நானும் அயற்பிள்ளைகளுடன் சேர்ந்து பழக ஆரம்பித்தேன்.

திரைப்படங்கள் நாடகங்கள் போன்ற கலைப்பதிவுகள் மனிதனை வளப்படுத்துவன அமைந்தால் அதன் சிறப்பே தனி. இந்த ஆக்கமும் யாராவது

ஒருவருக்கு உற்சாகத்தைத் தந்தால் இதை ஆக்க நான் படும் பாடு குறித்து மகிழ்வடைவேன்.

இலண்டனிலிருந்து வரும் தொடர்ச்சியான அப்பாவின் மடல்கள், வாழ்த்து மடல்கள் செழிப்பைத் தந்தாலும் குளிரில் உழைத்து அனுப்பும் பணத்தை எனது இடாம்பீக செலவுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற கொள்கை எனதுள்.



ஒன்றைக் கவனியுங்கள் எனது நோய் அதிகரிக்க அதிகரிக்க வசதிகளும் அதிகரித்து வந்ததை.

மேலும் நான் போட்ட திட்டப் பிரகாரம் எமது வீட்டை நாகரிகத்தை விட வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்து திருத்த விழைந்தோம். நான்கு புறத்திலிருந்து விழும் தண்ணீரும் நான்குபுறப் பீலிகளினால் ஓரிடத்தில் சங்கமித்து வெளியேறி விட்டால நடுவிலுள்ள நடுவிலுள்ள சீமேந்துத்தரையில் வீழுவது மேலேயிருந்து விழும் மழைத்துளிகள் மட்டும் தான்.

எனது நாற்காலி சுற்றிவரக் கூடிய விதமாகவும் முற்றத்தை வீட்டை மூடும்விதமாகவும் திருத்தியமைத்தோம்.

அந்த நடுமுற்றம் பூச்சாடி கொண்டு அழகாக மட்டுமல்ல அன்புள்ளங்கள் அதாவது படித்த படிக்கும் மாணவர்கள், மற்றும் அன்புள்ளங்கள் சூழ

அமர்ந்திருக்கும் கலகலப்பான இடமாகவும் இருந்தது. ஒருபக்கம் கொஞ்சம் அகன்ற தாழ்வாரம். அதன்கீழ் ஒருமீன்தொட்டியும் கூட.

சக்கரநாற்காலியை இயக்கும் வலு என்கைகளுக்கு மிக மிகக்குறைவாக இருந்த போதும் அன்புக்கரங்களுக்குப் பஞ்சம் இருக்கவில்லை.

அழகு நிலா தன்னொளியால் நம்மைத் தழுவி அணைக்கும் வேளைகளில் துள்ளிவிழும் மீன்களின் துடிப்பான ஓட்டங்களை மணிக்கணக்கில் உட்கார்ந்து உள்ளங் கொள்ளை போகும் நிலையில் இரசித்தது தான், நாளாவட்டத்தில் நிலாமுற்றம் எனவென் இணையத் தளத்துக்கு யான் நாமம் இடக்காரணமெனலாம்.

நான் என்னை இனங்காணுமுன்பாக என்னை தன் பால்ய மாணவர்களின் நிகழ்வு ஒன்றுக்காக சிலசிறிய பாட்டுக்களை எழுதித்தர வைத்த எனது நண்பி ரஞ்சினியின் செய்கை என்னை எழுதவைத்தது.

வீட்டிலேயே வாழ்வைக் கழித்த நான் வெளியே சென்று பார்க்காத விழாக்களை மாணவர்களை வைத்து நடாத்திய சிறிய விழாக்கள், பின் நாளாவட்டத்தில் வீட்டு முன்முற்றத்தில் பெரிய மேடைகளை மாணவர்கள் உதவியுடனமைத்து நாடகங்கள், வில்லுப்பாட்டு, கவிதைநடையில் வரவேற்புரை, கவியரங்கம், தாளலயம், கும்மிநடனம் போன்ற பலவகை நிகழ்ச்சிகள் எல்லாம் நானே எழுதி மாணவர்களை இயக்கி நடாத்திய பல கலை விழாக்களாகின.

வருடாவருடம், போர்ச்சூழலில் ஐந்து வருடங்கள் மின்சாரம் யாழ்நகரில் இல்லாதபோது கூட பெரிய 'டிரான்ஸ்போமர்' எனப்படும் மின்மாற்றியைப் பயன்படுத்தி குழாய் வடிவிலமைந்த விளக்குகள் கூட ஒளிரவைத்து, ஒலி ஒளிப் பதிவு செய்து கூட கலைவிழாக்கள் நடாத்திவைத்தோம்.

அத்தனை மாணவரையும் அந்த நிறுவனம் இயங்கும்வரை மேடையேற்றியிருக்கிறேன். இந்தமாணவர்களில் யாராவது நேயர்களில் ஒருவனாகவோ ஒருத்தியாகவோ இருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளலாம் என்னுடன்.

கணிதபாடமே எனது முக்கிய போதனை பாடமாகவும், எனது சக்கரநாற்காலி வருமோசை கேட்டவுடனேயே மிகவும் பவ்யமாக மாணவர்களை எதுவித

பேச்சுமில்லாமல் அவர்கள் நாற்காலியில் உட்காரவைக்கும் கண்டிப்பு நிறைந்த ஆசிரியையாகவும் நான் நிர்வகித்து வந்தேன்.

இப்போதோ இங்கெல்லாம் என் மருமக்களுக்கு படிப்பிக்கும் ஆசிரியை என்ற முறையில் பல் பிடுங்கப்பட்ட சிங்கமாகி விட்டேன். வருத்தப்பட்டு சொல்லவில்லை. வாழ்க்கையின் மாற்றத்தை ஒப்பிடுகிறேன். அவ்வளவே.

இப்படியாக இயங்கிய நாம் அரியாலை அருணேதயா வாசிகசாலையினால் வருடாந்தம் நடாத்தப்படும் விழாவிலும் பலநாடகங்கள் மேடையேற்றிருக்கிறோம்.

ஏன்! நாயன்மார்கட்டு வாசிகசாலையில் கூட நடாத்திய 'கானல் நீர்' என்ற நாடகம், வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை, அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையம், அருணோதயா வாசிகசாலை ஆகிய முன்று மேடைகளில் அரங்கேறிய பொருள்(ஆ)தாரமா நாடகம் எல்லாம் எனக்கிருந்த மனிதவளத்துக்கு சான்றுகள்.

ஒரே வேடத்தில் இரு நாடகங்களான 'பொருள்(ஆ)தாரமா', 'நீயா அந்தத்துரோகி' ஆகிய நாடகங்களில் அடுத்தடுத்து நான் நடிக்கவைத்தது நான் எனது நாடகத்துறையில் கையாண்ட புதுமையெனக் கூறுவேன்.

இந்த நாடகத்துறைக்காகவும் எனது பணிக்காகவும் அருணோதயா வாசிகசாலையினர் என்னைப் பாராட்டுப்பாமாலை வழங்கி கௌரவித்தது வாழ்வில் எனக்குக் கிடைத்த மிகவினிய நாள்.

அது ஒருபுறமிருக்க பல சுற்றுலாக்கள் போனாலும் அனைத்தும் மகளிர் என்ற அடிப்படையில் போன ஒருசுற்றுலாவில் என் உற்ற நண்பி ரஜனி, மேலுமோர் பள்ளித்தோழி மற்றும் வளர்ந்த மாணவிகள், அன்புள்ளங்கள் ஆளுக்கொரு பண்டம் பொறுப்பேற்று இரகசியமாக, மிக முக்கியமாக அயல் வாலிபர்களுக்குத் தெரியாத விதமாக எங்கெல்லாம் பல இடங்களுக்கும் சுற்றி தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவிலில் பொங்கலிட்டுமேலும் காரைநகர் கசோரினா கடற் கரைக்குப் போனோம்.

அந்த மண்தரைகளிலும் நமது பேருந்திலிருந்து தூக்கிவந்து கூட எனை சக்கரநாற்காலியில் அமர்த்தினர் என் அன்பு உள்ளங்கள்.

துன்பத்தில் தோள் கொடுத்த தோழமை கொள் நெஞ்சங்கள்!.

என் பள்ளித்தோழிகளை என்னுடனமர விட்டுவிட்டுப் போனவர்கள் அடித்துப்பிடித்து ஓடிவந்தனர்.

# அங்கம் - 6

கடலின் கரைப்பகுதியில் உலாவப்போனவர்களை மீண்டும் திரும்பிவரும் போது இடையில் குழாமாகவீத பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவன் இடைமறித்து 'பிளீஸ்' ஒராள்' என்று விரலைச் சொடக்கி சொடக்கியபடி அணுகியிருக்கிறான்.

இதனால் கடலுக்குள் ஓடினவர்கள் ஒருபுறம், வந்தவழி போன அவர்கள் மறுபுறம், பயந்து வாய்குழறி வாதாடினவள் ஒருபுறம் என மொத்தமாகக் கிலியைத் தமதாக்கியபடி ஓடிவந்தனர்.

இப்போதும் கூடநினைத்து இது பற்றிச் பேசிச் சிரிக்குமளவுக்கு பரபரப்பை ஏற்படுத்திய நாள் அது.

இப்படியெல்லாம் இருந்த எமது வாழ்வில், என் சிறிய அண்ணர் இந்திய பாதுகாப்புப் படையினரால் வாய்க்குள் சாக்குத் துணியெல்லாம் அடைத்து பூவரசங் கதியால்களால் அடித்துச் சித்திரவதைப் பட்டு அந்த நடுநிசியில் இராணுவ வாகனத்தில் கொண்டு செல்லப் பட்டதும் உயிருடன் தான் என் சகோதரன் இருக்கிறாரா என்று கலங்கியதும் என எட்டுமாதங்களாக அவரைப் பார்க்கக் கூடவென்னை அனுமதியாத நம்நாட்டு துன்பங்கள்.

அப்போது அவருக்காக எழுதிய கவிதையில் 'சிறையை நீ வீடாக்கினாய். நம்வீடு சிறையானதே' என்ற வரி இப்போதும் நினைவுக்கு வருகிறது.

ஏற்கெனவே தெய்வ பக்தியுள்ள நான் இந்தத்துன்பத்தைக் கண்டு துடித்துப் போய் நான் தேவர் சிறைமீட்ட முருகனை நினைந்து கந்தச'டிவிரதம் மிகக்கிரமத்துடன் அனுட்டித்த எல்லாம் அபூர்வ அனுபவங்கள்.

தேவர் சிறைமீட்ட முருகனை இயலாத உடல்நிலையிலும் வெந்நீர் வைத்து நீராடடி ஒழுங்கு படுத்தி அம்மா சாமியறையில் கிழே உட்கார்த்தி விடுவார்.

பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறையென ஒன்பது மணித்தியாலமும், மொத்தமாக முப்பத்தாறு தடவை கந்த ச'டி கவசம் ஓதி கடும் விரதம் அனுட்டித்து ஆறாம் நாள் இரவு விழித்திருந்து ஊரெலாம் என் அன்புச் சிறார்கள் பறித்து

வரும் பூக்களை மாலைகளாக்கி அத்தனை படங்களுக்கும் அலங் கரித்து வழிபட்டவள் இவள்.

ஆண்டவன் புண்ணியத்தால் ஓர் சிவராத்திரி தினத்தன்று எனது அண்ணர் காங்கேசன்துறை சிறையினின்று விடுவிக்கப் பெற்றார். அதன் நினைவுகள் என்றும் எனதும் அம்மாவினதும் நினைவில் ஏற்படுத்திய நெகிழ்வால் அந்த நாளில் எம் மனதில் ஆண்டவனிடம் நன்றியின் அர்ச்சிப்புகள்.

பிரதி சிவராத்திரி தோறும் அவரின் பெயரில் நானும் அம்மாவும் அர்ச்சனை செய்தே வருகிறோம் அவர்பெயரில்.

அதற்கு முன்னைய வருடம் அப்பாவின் திட்டங்களின் படி இந்தியாவிலுள்ள வேலூர் மருத்துவமனையில் வைத்திய பரி சோதனைக்காக சின்னண்ணர், அம்மா ஆகியோர் சகிதம் கொண்டுசெல்லப் பட்டேன்.

அப்போது புட்டபர்த்தியிலுள்ள ஸ்ரீ சத்திய சாய் பாபா தரிசனத் துக்காகவும் சென்றுவந்தோம் நாம்.

போய்க் கொண்டிருக்கும் போது எங்கள் பேரூந்தில் ஏறிய பல அங்கக் குறைவுள்ள விகாரமான மாந்தரைப் பார்த்ததும் எனது இடரொன்றும் பெரிதாக எனக்குத் தோன்றவில்லை. மனம் பக்குவப் பட்டது போன்ற உணர்வு.

அதைத்தொடர்ந்து யாழ்வந்ததும் எனது ஒரே அக்காவினது இனிய திருமணம். அதை நானும் சின்னண்ணரும் திட்டமிட்டு திறம்பட நடாத்தி வைத்தோம்.

ஒன்றைக் கவனியுங்கள், நான் நினைப்பதை நடாத்திவைக்கும் ஆதரவு தரும் என் சின்னண்ணர். அண்ணாவென்று நான்விழித்தாலே தன் பெயர் கொண்டழைக்கும் படி அடிக்க வந்து விடுவாரெனக்கு. நாங்கள் நண்பர்கள் மாதிரி. மகிழுந்திலிருந்து இரண்டு கைகளாலும் கைத்தாங்கலாக வாரித் தூக்கி இறக்குவது பலரையும் வியப்பிலாழ்த்தும் அவரன்புக்கு எடுத்துக்காட்டு.

"அம்மாவிலா என்னிலா உனக்கு அதிக அன்பு" என்று நாம் கேட்டால் பதில் கூறத் திண்டாடும் அவரின் தடுமாற்றம் கண்டு "போடா போடா, எனக்குத் தெரியும். உனக்கு உன்ர தங்கச்சி தான்டா பெரிசு" எனச் சிரிப்பார் எம் அம்மா.

கைது தந்த பயனால் சின்னண்ணரையும் வெளிநாட்டுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பவேண்டியவர்களானோம். அவரும் ஒருவாறு இங்கிலாந்து போய்விட்டார்.

நோர்வேயிலுள்ள தனது கணவரிடம் அக்காவும் போய்விட அந்த நாற்சார் வீடு நம்மைக் காக்கும் அகமாகவும் வலது பக்கம் அப்பாவின் தங்கை வீடாகவும் இடது பக்கம் அம்மாவின் தங்கை வீடாகவும் அம்மாவே அத்தனை பாத்திரங்களுக்கும் அதாவது அம்மா, அப்பா, அண்ணா போன்ற பாத்திரங்களாகவும் பம்பரமாகச் செயற்பட வேண்டியவாரானார்.



இருந்தவிடத்தில் என்னிடம் உணவு வாங்கியுண்ண வேண்டிய எனது அம்மா போரின் சூழலில் என்னை நிதமும் சுடுநீர் வைத்துக் கூடக் குளிக்க வார்த்து என் இருகைகளையும் தன் கழுத்தைச் சுற்றி மாலைபோலப் போட்டு இழுத்து சக்கர நாற்காலிக்கு மாற்றிக் குளியலறை கொண்ட போய் என்னைத் தாதியிலும் மேலாக பணிவிடைகள் செய்து பராமரித்தது மட்டுமன்றி என்னுணர்வுகளையும் மிக மதித்து வளர்த்தார்.

நான் கடைக்குட்டியாக இருப்பினும் என் கருத்துகளுக்கு மிகுந்த மதிப்புண்டு எனது வீட்டில்.

அதற்குக் காரணம் எனது பெற்றோர். அதற்காக நான் என் சகோதரர்களை மதிக்காதவளன்றோ, அவர்களை சுயநலமாகப் பயன்படுத்த விரும்புபவள் யானென்றோ, அவர்கள்மீது அக்கறை
யற்றவளென்றோ அர்த்தமில்லை.அவர்கள் அனைவரும் என்னுடன் தான் மிகுந்த பற்றுள்ளவர்கள்.

என்துன்பம் என்னுடன் போகட்டும், என் உடன்பிறப்புகளைப் பாதிக்காமல் என்பதில் மிகவும் பிடிப்புள்ளவளாக இருக்கிறேன். ஆனாலொன்று மட்டும் வேண்டும், நானுள்ள வரை "அடியே தங்கச்சி" என்று என்னை அவர்கள் இடைக்கிடையாவது குசலம் விசாரிக்கட்டுமே.

என்றாற்போல் நான் பரமசாதுவென்று நினைத்துவிடாதீர்கள். இனிப்பு தடவி பேச என்னால் முடியவில்லை. பேசினால் என் தலைக்கு மேலமர்ந்து என்னையே ஆட்டிப்படைத்து விடுவார்கள் என்று உசாராக இருக்கிறேன் என்ற இரகசியம் அவர்களுக்குத் தெரியவேண்டாமே.
ஆமாம் என்னன்புச் சகோதரர்கள் என்னை எப்போதும் இயலாதவளென்று நினைத்ததில்லை. அப்படி என்னுடன் நடந்து கொண்டதுமில்லை. அது தான் எனது பலம்.

ஏறக்குறைய பத்துவருடங்கள் தொலைபேசித் தொடரபில்லாமல் இவர்கள் நினைவை நெஞ்சில் சுமந்தபடி வாழ்க்கைச் சக்கர மோடி இருக்கிறது.

இந்த வேளைகளில் கூடிப் பிறக்காவிடினும் கூட இருந்த அன்பு
உள்ளங்கள், என்மீது அன்புமழை பொழிந்தனர்.

நான் ஏறக்குறைய பதினைந்து நாடகங்கள் மேடையேற்றினேன் என்றால் இந்த அன்புள்ளங்கள் தந்த ஆதரவு தான். கூத்தாடி வாழ்ந்தோம் என்று எளிதாக எண்ணிவிடாத அளவுக்கு நாம் காரியங்களிலும் கண்ணாயிருந்தோம்.

எத்தனையோ பின்தங்கிய மாணவர்களை தொடர்ந்த கண்காணிப்பினால் வளப்படுத்தி இருக்கிறோம். கணிதபாடமே தடையாகவிருந்து உயர்தரம் எட்ட முடியாதவர்களை ஏறவைத்திருக்கிறோம். இவற்றை எல்லாம் குழப்பிப்போட இன்னுமொருநாள் எங்கள் வாழ்வில்.

# அங்கம் - 7

அன்று ஊரே அமைதிப்பட்டுப் போரின் போர்வை தந்த பீதியால் மூடப்பட்டிருந்தது. கந்தச‘’டி விரதகாலம். அம்மா சமைத்துக் கொண்டிருந்தார்.

நானோ மௌனவிரதம். அது எனக்குப் பிடித்தமான விடயம்.

மனம் சங்கடப்படுகிறதா? தோடர்ர்ந்து பத்து மணிநேரம் மௌனம் காத்துப் பாருங்கள். மனமே தெளிந்த நீரோடை போன்று சம நிலையை அடைந்து விடும்.

இதைத்தான் திருமூலர் “பசித்திரு, தனித்திரு, விழித்திரு” என்று கூறிப் போனாரோ!!

தொடர்ந்து காத்த கடும் விரதமான கந்த ச‘’டி விரதத்தை ஆறு வருடமானதும் நிறுத்தி விட்டு அடுத்த வருடங்கள் அந்த கந்தச‘’டி தினங்களில், முருகனுக்காக என்னுள்ளத்தை அர்ப்பணித்து மௌனம் காத்து வந்தேன்.

அம்மாவோ தடபுடலாக பலவகை மரக்கறிகள் கொண்ட மதியவுணவு சமைத்துக் கொண்டிருக்கிறார். கூவிக் கொண்டு விழுகிறது ெ‘ல் இரண்டாவது வீட்டில். அவற்றின் சிலபாகங்கள் எங்கள் எல்லைகளுக்கு உள்ளேயும் விழுகிறது.

‘ஓடுங்கள் வீட்டுக்கு’ என்று மாணவர்களைத் துரத்தும் போது நான் அறிந்திருக்கவில்லை அது தான் எனது தனியார் கல்வி நிறுவனத்தின் இறுதிநாளென்று.

அதுவும் ஒரு இலட்ச ரூபாவை முதலிட்டுத் தளபாடம் வாங்கி இரண்டு கிழமை கூட ஆகவில்லையே.

ஊரே காலியானதும் நானும் அம்மாவும் அம்மம்மாவும் வீட்டிலேயே தங்கியதும், அயலவர்கள் எமையணுகி தாங்கள் தங்கியிருந்த இடமாகிய கிழக்கரியாலைக்கு அழைத்தனர்.

பதினொரு வயதிலேயே என்னிடம் படிக்க ஆரம்பித்தவனும் எனை அக்காவாக

மனதாரக் காத்து வந்தவனுமாகிய சுதா எனப்படும் சுதாகரன் தனது மோட்டார் சைக்கிளில் அம்மா சகிதமாக எனையேற்றிப் போனதும் அதுதான் அவன் எனக்கு செய்யும் இறுதியுதவி என்பது எனக்குத் தெரியாமற் போனதும் இன்றும் துன்பம் பகரும் நினைவுகள்!

வாழ்வின் எல்லைக்கே நான் போனதும் அம்மாவின் அயராத முயற்சியால் கொழும்பு அழைத்து ஏகப்பட்டதும் எனது மாமியார் குடும்பத்துடன் வாழந்ததும் காலப் போக்கில் வீடுகள் மாறியதும் அங்கும் அக்குபங்ஸர் மேலும் சிங்கள நாட்டு வைத்தியத்துக்கு ஆளாகிப் பத்தியம் காத்ததுவும் எண்ணெய் ஒத்தடம், எண்ணெய்க் குளிப்புக்கு உள்ளானதும் அதன் அனுபவங்களும்
கசப்பானவை

ஆனாலொன்று இந்த வைத்தியங்கள் என்னை சுகப்படுத்தா விடினும் இருக்கும் ஆரோக்கியத்தைத் தக்க வைத்திருக்கிறது.

இன்றைக்கு நாளைக்கு என்று நான்கு வருடங்கள் ஓடிப் போனதும் இந்த காலகட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இடம்பெறும் நிகழச்சிகளுக்கு எழுதி அனுப்பியதும் வெளிநாடு புறப்பட முற்பட்டு எதுவும் வெற்றியளிக்காமல் லட்சம் ருபா மட்டில் இழந்து போனதும் நடந்தவை.

அதேகாலகட்டத்தில் அந்த தவிப்பின் பாதிப்பால் அப்பா ஒருவித பக்கவாதம் போன்ற பாதிப்புக்கு உள்ளானதும் தன் நினைவின் ஒருபக்கத்தை இழந்ததுவும் நானும் அம்மாவும் அப்பாவைப் பிரிந்து வாழ்ந்து ஆகிய பதினைந்து வருடங்கள் அப்படியே நிரந்தரமாகி விடுமோ என்ற அச்சத்தால் வாழ்வின் எல்லைக்கே போனதும் நினைவுப் பாதையில் தொட்டுச் செல்ல வேண்டிய கவலைநெரிசல் நிறைந்த சந்திகள்.
காலங்களோ போய்க் கொண்டிருக்கிறது. இழந்துபோய்க் கொண் டிருக்கும் ஆரோக்கியம்.

அதேநேரம் அம்மாவைப் பற்றிக்கொள்ளும் முதுமை.

இல்லாத ஆரோக்கியத்தால் இழந்துநிற்கும் வல்லமையை, ஈடுகொடுக்க செக்குமாடாக உழைக்கும் முதியதாயாரை இருக்கும் சுயவுணர்வுடன் அவதானிக்கும் வலி மிகவும் கொடுமையானது.

துன்பம் விரக்தியாக வார்த்தைகள், கடும்சொற்களாகவே வெளிப் படும்.

அப்போது எனக்குத் துணைநின்ற புத்தகங்களும் இறைவன் மீதிருந்த எனது விடாத பிடிப்பும் அதனாலமைந்த பிரார்த்த னைகளும் என்னைப் புடம்போட்டன.

கொழும்பு வந்தும் அரசல்புரசலாகப் படிப்பித்தும் தான் வந்தேன். படிப்பித்தலால் அரிய மனிதர்களை நான் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

கொழும்பில் கணனி பயிலும் அரிய சந்தர்ப்பங்களும் வாய்த்தன.

வாழ்வில் சரிந்து போகிறேன் என்று நான் எண்ணத்து தொடங்கும் காலங்களில் ஆண்டவன் எனக்குக் கைகொடுத்துத் தான் வருகிறார் என்பேன்.

அதை நேரடியாகவே தனியாகவே வந்து இறங்கிய இங்கிலாந்துப் பயணம் எடுத்துக் காட்டாக நாம் கூறலாம். "எனக்கொன்டெண்டா உன்ர நிலமை என்ன?" என்ற என் அம்மாவின் கேள்விக்கும் அப்பாவின் ஆதங்கத்துக்கும் பதிலாக நான் இங்கிலாந்து வந்து சேர்ந்தேன்.

பதினைந்து வருடத்துக்குப்பின்னர் என் அப்பாவைப் பார்க்காமலே என்நாட்டுக்குத் திரும்பி விடுவேனா என்ற பயத்தில் அகதித் தஞ்சம் கோராமலேயே விமானநிலையத்தூர்டு நாட்டினுள்ளே நுழைந்த இந்த நிலாவின் அனுபவங்களை இனி உங்களுடன் பகிரலாமே.

# அங்கம் - 8

ஒன்றா இரண்டா பதினைந்து வருடங்கள் பிரிந்திருந்த அப்பாவை, அதுவும் ஆரோக்கியம் குறைந்து பதினைந்து வருடம் முதிர்ச்சியடைந்த அப்பாவை, நான் சந்திக்க வேண்டும் என்ற ஆவலும் காரணமாக அகதி என விண்ணப்பிக்காமலேயே ஹீத்ரோ விமான நிலையத்தினூடு லண்டன் மாநகருக்ககுள் நுழைந்து விட்டேன்.

அப்பா தனது நலன்விரும்பி ஒருவரை அழைத்து வந்திருந்தார் விமான நிலையத்துக்கு.

பதினைந்து வயதின் வளர்ச்சி தந்த மாற்றம் அப்பாவுக்கு ஏற்படுத்திய திகைப்பை நான் முகத்தில் காணக்கூடியதாக இருந்தது.

அப்போது தான் அப்பா என்னை சக்கர நாற்காலியுடன் என்னைக் காண்கிறார். ஆனால் அதைத் துல்லியமாகச் சிந்திக்க முடியாத அளவுக்கு ஒரே ஆச்சரியம் அவர் பக்கமாக.

என் அருமைத்தந்தையை பதினைந்து வருடப் பிரிவு தந்த வலியுடன் பார்க்கிறேன். முகமெல்லாம் பூரிப்பு ஆட்கொண்டிருந்தாலும் முதுமை அப்பாவையும் அணுகி விட்டிருக்கிறது.

பூசுசந்தன நிறமும் கம்பீர நடையும் வெள்ளை முடியும் கொண்ட அழகான அப்பா; முகம்நிறைந்த புன்னகையும் ஆனால் புதிதான அப்பாவித்தனமும் கொண்டு காணப்படுவது, மனதுக்கு துன்பத்தைத் தந்தாலும் அப்பாவை பதினைந்து வருடத்துக்குப்பின் என்அப்பாவை, உயிருடன் பார்த்தது என்மனப்பாரத்தின் பெரும் பகுதியைக் குறைத்து விட்டது.

நண்பர் உதவியுடன் அப்பாவின் இருப்பிடத்துக்கு வருகிறோம். சுற்றுமுற்றும் பார்க்கிறேன். பலரும் வாய்பிளக்கும் லண்டன் மாநாகரத்து செங்கல் கட்டடங்கள் பெரிய கவர்ச்சியொன்றும் ஏற்படுத்தவில்லை.
மாறாக வாழ்வின் மீது மேலுமோர் கனமான அழுத்தத்தைத் தரவே பயமும் வேறு பற்றிக் கொள்கிறது. காரணம் வரவேண்டுமென்று வந்தாயிற்று. அம்மாவின் பிரிவு தந்த கிலி அது.

என்னைத் தன் உள்ளங்கையில் வைத்துத் தாங்கி, உதிரத்தை உருக்கி அக்கறையாக வார்த்து வளர்த்த அம்மா எனும் அன்பால் என் குழந்தையெனவே என்னுள்ளத்தின் மீது உட்கார்ந்திருக்கும் அம்மாவைப் பிரிந்தல்லவோ வந்திருக்கிறேன்.

படிகளில் ஏறும்போது ஒருபடியிலிருந்து காலை எடுத்தால் தானே மற்றையபடியில் காலை வைக்கமுடியுமன்றோ!

மொத்தமாக அத்தனை குடும்ப உறவுகளைப் பிரிந்து வாழ்வதோடு, எனது படுக்கையை தொட்டுத் தொட்டு அழுவதாயக் கூறி தொலைபேசியில் அழும், தன்னையே பாதுகாத்து கொள்ளத் தெரியாத அதுவும் மெல்லிய உணர்ச்சிகளால் பாதிப்படையக் கூடிய தன் கடைக்குழந்தையை வாடும் என் தாயின், பிரிவும் இதயத்தில் ஊசித் துளைவுகளை ஏற்படுத்துகிறது.

நான் மட்டும் துணிகரம் கொள்ளாவிட்டால் எப்போதும் எங்கள் குடும்பத்தில் முன்னேற்றம் வரப்போவதில்லை.

வயோதிபத்தை அணுகிவிட்ட எனது அம்மா அப்பா இருவரும் இந்தவுலகத்தை விட்டுப் போகும் போது மனதில் எங்கள் பிள்ளை இந்தவுலகில் பிழைத்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் போகவேண்டுமென்று இருந்த ஆழ்மன விருப்பம் தான் தனியாகவே என்னை இந்நாட்டுக்கு வரவைத்தது.


வந்துவிட்டேன் ஆகிலும் என் சுகாதார தேவைகளைத் தீர்த்து வைக்க ஓர் பெண்ணுதவி கூட இல்லாத கொடுமையான நிலை.

அப்பாவும் இளைய அண்ணரும் தான் நேரடி குடும்ப அங்கத்தவராக இந்த நாட்டில் வாழும் சூழலில் என்வாழ்வின் அவஸ்தையை சிந்தித்துப் பாருங்கள்.

'வெளிநாட்டுக்குப் போய் விட்டால் அரசாங்கமே எல்லாம் பார்த்துக்கொள்ளும்' என்ற மேலோட்டமான கருத்து தந்ததன் விளைவு பாவிப்பிலிருந்த சக்கர நாற்காலியை கொழும்பில் விட்டு விட்டும் வேறு வந்து விட்டதால் பட்ட பாடு அப்பப்பா!

எனது நண்பியான ரஞ்சனி தன்னிரு குழந்தைகளையும் கவனித்து, அப்பா செஞ்சிலுவைச் சங்கத்தில் வாடகைக்குப் பெற்றுக் கொண்டு வந்த

சக்கரநாற்காலியைப் பாவித்து அப்பா தங்கியிருந்த இடத்து வசதிகளைச் சமாளித்து உதவி செய்தார்.



ஏதிலிகளாக்கப்பட்ட தமிழினம் படும் பாடுகளை நினைத்து நான் நாட்களைக் கழிப்பதைத் தவிர எதுவித தெரிவும் எனக்கு இருக்கவில்லை.

கவியரசு கண்ணதாசன் எனக்காகத் தான் 'உனக்கும் கீழேயுள்ளவர் கோடி நினைத்துப்பார்த்து நிம்மதி நாடு' என்று அம்சம் நிறைந்த வரிகளை எழுதினாரோ!

அம்மாவோ தொலைபேசியில் தன் செல்வமே தன்னைவிட்டுப் போய் விட்டதாக ஒரே அழுகை. பத்துமாதத்தோடு பலவருடங்களெனைச் சுமந்தாலும் அலுக்கவில்லையென் அம்மாவுக்கு.

தன்னிருகைகளாலும் என்னை வாரித்துக்கி தன்மார்போடு என்னை அணைத்துத் தூக்கிவளர்த்த அம்மாவை நான் பிரிந்து பயணிக்கும் முதல்நாள் முன்பாக அம்மா கூறினார், "இண்டைக்கு கறுத்த நிறக்கை சாப்பாடு போடுது, நாளைக்கு வெள்ளை நிறக்கை சாப்பாடு போடும்" என.

அது ஒருபுறமிருக்க பதினைந்து வருடத்தின் பின் தன்மகளைப் பார்த்த திகைப்பு குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக தான் பயணிக்கும் போது நடக்கக் கூடிய விதமாக இருந்த தன்பிள்ளை இன்று படும் அவலம் அப்பாவின் மனதை மிகவும் வாட்டியது.
இருந்த போதும் 'எனக்கு இந்தப் பெரிய பிள்ளை வேணாம். எனக்கு அந்தச் சின்னப் பிள்ளை தான் வேணும்' என என் வளர்ச்சி குறித்த வியப்பைத் தெரிவிக்கும் அதேவேர்ள பலவகையுணவும் ஆக்கிப் பரிமாறும் அப்பாவினன்பு இமய மலையளவு.

ஆயினும் கொழும்புத்துறைக் கலவாய் மீனும் ஊரரிசிச் சோறும் என வகைவகையாய் ஆக்கிவளர்த்த அம்மாவின் உணவுக்கு ஒப்பிட்டே பார்க்க முடியா அளவுக்கு தன் சுயம் இழந்த அப்பாவின் உணவை என்னால் அவரின் அக்கறை விழுங்கியுண்ண வைத்தது.

இவ்வளவுக்கும் பதினைந்து வருடமாக தனித்தே சமைத்து சோறு, கறி, கூழ் என்றெல்லாம் பலருடன் பகிர்ந்து பலரின் மனதைக் கவரும் விதமாக ஆக்கிய அப்பாவுக்கு இன்று எதைச் சேர்க்கலாம், எதைத் தவிர்க்கலாம் என்பது கூட நினைவைவிட்டுப் போயிருக்கிறது.

என்நோயின் வளர்ச்சியை அவர் அந்த அளவுக்குத் துல்லியமாக அறிய வேண்டாமென இறைவனின் ஏற்பாடோ! யார் அறிவார்?

எனது நண்பி காலையில் வந்து வாருவார் என் இடைவரை நீண்ட கூந்தலை. அப்பாவும் சின்னண்ணரும் வாரமுற்பட்டாலும் என் சிணுங்கல் அவர்கள் கைகளுக்கு விலங்காக எத்தனை நாளுக்குத் தான் இப்படி எனக்குதவி செய்வது?

அதனால் என் கூந்தலைத் தோள்வரை வெட்டி விடும்படி நண்பியிடம் கூறினேன். வெட்டியதும் தன்னுடன் எடுத்தேகுமளவுக்கு அடர்த்தியான கருங்கூந்தல் எனது. மற்றவர்களின் சிகையலங்காரத்துக்கு கொண்டு போனார் போலும். அம்மா அறிந்து கொள்ளாமலிருப்பதற்கு சட்டம் இயற்றப்பட்டது எமக்குள்.

உதவிகள் கிடைக்காத காரணத்துக்கு நானே தான் காரணம். அன்று மட்டும் அகதி என்று விண்ணப்பித்திருந்தால் எனக்கு ஓரளவாவது பயன் கிடைத்திருக்கும். அதற்கான வழிமுறையைப் பின்பற்ற முடியாத என்னுடல்நிலையும் காரணமாக இருந்ததுவும் குறிப்பிட வேண்டியது.

வைரமுத்து அவர்கள் எழுதி எங்கோ வாசித்தது நினைவில் வர 'நான் குறிப்பிடுவதெல்லாம் உண்மை. உண்மை எல்லாம் நான் குறிப்பிடவில்லை'. குழப்புகிறேனா?

# அங்கம் - 9

ஓரறைக்குள் வாழ்க்கை. அம்மாவைப் பிரிந்திருக்கும் நாட்களின் எண்ணிக்கை வேறு அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

அதைப் பற்றிச் சிந்திக்க முடியா அளவுக்கு வாழ்வே சூனியமான நிலை. பெண்ணாக வேறு தொலைந்து விட்டேனே!

அரசாங்க உதவிக்கு எவ்வளவோ சிரமப் பட்டோம். பதினைந்து வருடம் லண்டனில் வாழ்ந்த அப்பாவுக்காக, கைகொடுக்க வந்தவர்கள் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தன.

எத்தனையோ பேருக்கு பலவிண்ணப்பங்கள் நிரப்பிய அப்பாவுக்கு உதவ இருந்தவர்கள் எவருமே இல்லை. ஓரிருவர் எட்டிப்பார்த்ததோடு சரி.

யாவும் இருக்குமிடத்திலிருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே! இது தான் எனக்கு ஞாபகத்தில் வரும் வாக்கியம்.

பலருக்கும் பொருளாதார ரீதியாக உதவின அப்பாவுக்கு கைகொடுக்கக் கூட முற்பட்டவர்கள் ஓரிருவரே. ஆவர் படும் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இறந்து போய் விடுவாரோ! என்று எண்ணினார்களோ என்னவோ!

நாம் மற்றவர்கள் நம்பும் படி நடக்கலாம். ஆனால் எம்மை நம்புங்கள் என வற்புறுத்த முடியாதே!

ஊரிலுள்ள வரை இருந்த செல்வாக்கு எங்கெல்லாம் ஓடி ஒளித்துப் போக மிகவும் சிரமமாக இருந்தது. வாழ்க்கையே சிரமமாகத் தெரிந்தது. இந்த செய்கை எனக்குள் மேலும் வேகத்தை வளர்த்தது.

இதே சமுதாயம் என்னைத் தேடிவரும் விதமாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வெறி எனக்குள் உருவானது என்றே நான் கூறுவேன். சவால்கள் எனக்கு ரொம்பவே பிடிக்கும்.

யார் என்னைக் காயப்படுத்தினாலும் அந்தக் கணம் துன்பம் என்னை

வாட்டினாலும் அதைக் கண்டு துவளும் பழக்கம் எனக்குப் பிடிக்காது. அந்த சந்தர்ப்பத்தை சவாலாகவே எடுத்துக் கொள்வேன்.

எனது இன்னொரு அன்புள்ளம் விடுமுறைக்காக இலங்கை போயிருந்த மதியக்கா மீண்டு ஹௌளன்ஸிலோவிலிருந்தார். பத்துநாள் வரை அங்கும் போய்த் தங்கியிருந்தேன். ஏற்கெனவே குறிப்பிட்ட கஸோரினா சம்பவத்தில் அந்த அக்காவும் கலந்து கொண்டவர்.

இப்படியெல்லாம்நகர்ந்த நாட்களில் அரசாங்க உதவிக்காக பலவகைமுயற்சிகளும் எடுத்துக் கொண்டு தானிருந்தோம். எல்லாமே எதிர்மறையான பதிலையே தந்தன. நான் இலண்டன் வந்தவுடனேயே அகதியென அடைக்கலம் புகாததன் விளைவாம் அது.

நாற்பத்தைந்து நாடகள் நரகமாகக் கழிந்தது. பின்னேரம் வந்த தொலைபேசி ஒரு வடிகாலான செய்தியைத் தந்தாலும் அதன் விளைவு அவ்வளவு நல்லதாக இருக்கவில்லை.

என்னை மனிதாபிமான அடிப்படையில் கவனித்த பிறன்ட் மாநகரசபை மனிதாபிமான அடிப்படையில் எனக்கு உதவ, அதாவது எனது நாட்களைக் கடத்தும் வகையில் ஓர் நோஸிங் ஹோர்மில் அதுவும் ஓர் வயோதிபர்களைப் பேணும் நிலையத்தில் சேர வாய்ப்புத் தந்திருப்பதாக அந்த அழைப்பு தந்த சேதி.

ஆனால் அப்பாவோ துளியளவும் நான் தன்னை விட்டு வேறிடம் போய்வாழ்வதை அனுமதிக்கவே இல்லை. கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். போதாக்குறைக்கு அவரது கோபத்தின் செய்கையான மௌனமாகிப் படுத்து விட்டார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பாவின் சொல்லுக்கு மறுசொல் கூறாத நான் அன்று தன்னிச்சையாக முடிவெடுக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டேன். இதற்கு எனது சின்னண்ணரினதும் அப்பாவின் அன்புள்ளம் ஒருவரினதும் ஆதரவு கிடைத்தது.
அண்ணர் என்னைக் குழந்தைபோலத் தூக்கி மற்றவரின் மகிழுந்தில் உட்காரவைத்து அந்த நேர்ஸிங் ஹோமுக்கு அழைத்துப் போனதும் பணிப்பெண் ஒருத்தி என்னைத் தங்கள் சக்கர நாற்காலியில் சின்னணணரினுதுவியுடன் உட்காரவைத்துத் தள்ளிக் கொண்டு போனார் உள்ளே.

இரண்டு கிழமையில் உனக்கேற்ற இடம் கிடைத்தவுடன் வேறிடத்தில் சேர்க்கிறோம் என்று அங்குபோகப் பணித்தவர்கள் என்னை அங்கு இரண்டு வருடங்கள் வைத்திருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

புதியநாடு, புதியசூழல், புதியமனிதர்கள், புதியவாழ்க்கைமுறை, புதியபராமரிப்பு எல்லாவற்றாலும் மிகவும் அழுத்தப்பட்டேன். ஆனாலுமோர் நிம்மதி என்சுகாதாரத் தேவைகள் தீர்க்கப்பட உதவி கிடைத்திருக்கிறது.

ஆனால் நான் குளிக்கக்கூட அனுமதிக்கப்பட மாட்டேன், அதுவும் ஒருவாரத்திலும் மேலாகவென எனக்குத் தெரியாதே. குளிப்பது, முழுகுவது கூடப்பெரிய விடயமாகக் கருதும் கூட்டம் இந்த ஐரோப்பாவில் இருப்பர் என அறிந்து வெகுண்டே போனேன்.

சோ'ல் சேவிஸ் எனப்படும் மாநகரசபையினர்கு முறைப்பாடு செய்தேன். முறைப்பாடு செய்யக் கூட சொந்தத் தொலைபேசி இல்லாத அவலங்கள். அவர்களின் தொலைபேபசியிலும் எழுத்துருவிலும் முறைப்பாடு செய்தேன்.

வேலைசெய்பவர்கள் போல் ரொம்ப நன்றாகவே பாவனை செய்வார்கள் அவர்கள், அவர்களை முறியடிப்பது என்பது மிகவும் கடினம்.

ஆயிரந்தான் ஆனபோதும் மறுநாளே மதியவுணவுடன் வந்து விட்டார் என்னருமைத்தந்தை. அவருக்கு என்துன்ப நிலைபற்றிக் கூறமுடியாதே. அப்பா ஆத்திரப்பட்டு அவர்களை அணுக அதையே சாக்காக வைத்து அப்பாவின் வருகையை ரத்து செய்து விடுவார்களே!

சின்னண்ணரே எனது ஆறுதல் தரும் போதிமரமாக இருந்தார்அப்பா எங்கள் இருவருக்கும் இரண்டு பேருந்து பிடித்து சாப்பாடு கொணர்ந்து தருவார்

எல்லாத் துன்பங்களையும் என்னால் எழுத முடியவில்லை. காரணம் அதன் ஆழமும் அளவும் பெரிது. என் சொந்தத் தேவைகளைப் பூர்தி செய்ய பத்து, இருபது, முப்பது, அறுபது நிமிடங்கள் காத்திருந்த அனுபவங்கள் என் எதிரிக்கும் வரக்கூடாது.

பெண்களிடமிருந்து மட்டுமே உதவிபெற வேண்டுமென்ற எனது கொள்கை தந்த துன்பமும் பெரிதே.

அடிக்கடி தற்கொலை செய்யும் உணர்வு எட்டிப் பார்தாலும் அம்மாவுக்காக வாழ வேண்டியவளானேன். நான் இறந்துவிட்டால் அம்மா பட்ட பாடுகள் எல்லாமே வீணாகிவிடுமே! தான் வெளிநாடு அனுப்பியதால் தான் தன்மகவுக்கு இந்நிலையென்று துடித்துப்போவாரே! பந்தம் கூடச் சிறை தானே.

நானூறும் நரகம் நல்காது பொழுது
வீணாக நானும் வடிப்பேனே அழுது
கோணாது தினமும் எடுப்பேனே திடமனது!

ஏன் இந்த வாழ்வு? எதற்காக விடிவு?
எவர்க்குமே இது தெரியாது! - இதுவே
இறைவனின் முன்னேற்பாடு!

காலத்தின் சிறையில் நாமோ கை
விலங்கில்லாக் கைதி , மீட்பவர்ரரோ?
காலமே தானோ!! ..

என காலத்தின் கைதிகள் என்ற தலைப்பின் கீழ்வடித்த எனது கவிதை அந்த இரணங்கள் தந்த பரிசு.

# அங்கம் - 10

நான் லண்டன் வருகிறேன், இங்கு, இலகுவில் எல்லாமே பெற்றுக்கொள்ளலாம் என்று சக்கர நாற்காலியை இலங்கையிலேயே விட்டுவிட்டு வந்த எனக்கு இந்த பராமரிப்பு நிலையத்தில் ஓரிடத்திலேயே உட்கார்ந்திருக்க வேண்டியிருந்த சூழல் கொஞ்சம் கொஞ்சமாக அங்கிருந்த பழைய சக்கர நாற்காலி ஒன்றினால் மாறியது.

என்றாலுமென்ன பிற்பகல் ஐந்து மணிக்கே படுக்கையில் போட்டு விடுவர் அதுவும் அடுத்தடுத்த முறைப்பாடுகள், கோரிக்கை தந்ததன் விளைவாக ஒன்பது மணியளவில் படுக்கையில் போட ஒப்புக் கொண்டனர்.

ஒருவாறு வீட்டுப் பொருளாதார சூழலுக்கமைய நான் ஓர் கணனி வாங்கினாலென்ன சிந்தித்து நாங்கள் மூவரும் முடிவுமெடுத்து உறவினர் ஒருவர்மூலம் வாங்கவும் செய்தேன். என் மகிழ்வுக்கு அளவே இல்லை.

உபயோகிக்கத் தொடங்கிய பத்தாம் நாளே கணனி தன்னியக்கத்தை மறந்தது. அந்த நிகழ்வு மனதை மீண்டும் விரக்தியின் உச்சிக்கே கொண்டு போனது. அந்தக் கணனியை மீளளிப்பு செய்து பணத்தை மீளப்பெறக் காத்திருந்து பொறுமை இழந்து போனேன். பொறுமை இழந்து இருக்கும் மீதிப்பணத்துடன் மேலும் பணம் கடன்பெற்று கொஞ்சம் தரங்குறைந்த புதிய கணனி வாங்கினேன்.

அத்தோடு எனக்குத் தெரிந்த ஒருவர் மூலம் வேலையான எனது அண்ணர் பணத்தை சீட்டு பிடித்து நான் வந்த செலவை ஒருவாறு கடனுக்காய் அடைத்தோம்.

இவற்றினிடையே எனது வானொலிப் பங்களிப்பு ஆரம்பமானது. ஒரு ஆக்கம் வானொலியில் போய் விட்டால் எனக்குக் கிடைத்த நிறைவே தனி. எழுதிவைத்திருக்கும் கவிதையை படுத்திருந்த படியே தான் நான் வாசிப்பேன்.

எழுதிய அந்தத் தாளைத் தூக்கிப் படிக்க முடியாத வலுவிழந்த கைகள். ஒரு தாளைப் படித்ததும் கீழே தட்டிவிட்டு மறுதாளை வானொலிக்காக ஒப்புவிக்கும் என் ஆர்வம் எனக்கு உயிரில் ஓட்டத்தைத் தந்தது.

காரணம் நானும் படைப்பாளியென்ற முறையில் இந்தவுலகத்தில் ஏதொவோர் விதத்தில் என்னாலும் சிலவிடயங்களைச் செய்யமுடிகிறதே என்ற மகிழ்ச்சி தந்த வேகம் அது.



தினமும் உதவி தேடி என் துக்கபுராணம் வாசிப்பதே வழக்கமாகி நானே ஓர் மனநோயாளி ஆகிவிட்டுது போன்ற உணர்வு. தொண்டர் நிறுவனங்களுடனும் பேசியதில் எனது ஆங்கில உரையாடலில் வல்லமை வளர்ந்தது என்று கூறலாம்.

எத்தனையோ தடவை பி. பி. ஸி வானொலிக்கு அழைத்து என் நிலையத்து நடவடிக்கை பற்றி முறையிடலாமா என்று கூட நினைப்பேன்.

ஆனால் அதன்பின்பும் " விடிவு ஒரே இரவில் கிடைத்து விடப்போவது இல்லையே. அவர்கள் தயவில் வாழவேண்டிய பாவி தானே", நான் என்பதால் அவர்ர்கள் கொடுமைகளை பதிந்து வைத்ததோடு சரி.

எது எப்படியிருப்பினும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வேறு என்னைத் தூண்டிக் கொண்டிருந்தது.

இப்படியாகக் கழிந்த நாட்களில் தான் நான் கானக்குரல் நிகழ்ச்சிக்கு அறிவிப்பாளர்களைச் சந்திக்கும் ஆர்வத்தில் என் சின்னண்ணருடன் யான் போனதும் அந்த வருடம் சன்ரைஸ் வானொலியினரின் வருடாந்த நன்கொடைத் தொகையான ஆயிரம் பவுன்கள் எனக்குக் கிடைக்கப் பெற்றதும் நம்பவே முடியாதது.

அது தந்த அதிர்ச்சியை அந்த இரவு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த மதியக்காவுக்கு தொலைபேசியில் அழைத்து கூறிவிட்டே படுக்கைக்குப் போனதும் ஒரு வினோதமான அனுபவம்.

கிடைத்த அந்தப் பணத்தை அப்படியே வங்கியில் போடு என்ற அப்பாவின்

சொல்லுக்கிணங்க போட்டாயிற்று. அதை நாம் ஒருநல்ல காரியத்துக்கே பயன்படுத்த வேண்டுமென முடிவு செய்தேன்.
அதைக் காலப்போக்கில் அப்பாவுடன் அன்பாகப் பழகியவர் நம் ஊரவர் ஒருவர் அம்மாவை அழைத்து வர அது உதவட்டுமே எனக்கொடுத்ததும் அது ஆற்றில் கரைத்த புளியானதும் வேதனை.
நான் நிரப்பிய விண்ணப்ங்களதிகம். கடும் முயற்சிக்குப் பின் எனக்கு சக்கர நாற்காலி கிடைத்தது. அதற்கிடையில் அம்மா இலங்கையிலிருந்து புதிய சக்கர நாற்காலி வாங்கவும் எமக்கு அனுப்பவும் செலவு செய்தது ஏறக்குறைய நாற்பதாயிரம் இலங்கை ருபாய்கள் அப்போது. அது இங்கு வந்தடையவும் நான் எனக்கு நாற்காலி கிடைக்கவும் பணநட்டமே எஞ்சியது.

அப்பாவிடமே அதைப் பத்திரமாகப் பாதுகாக்க வைத்தேன். ஒரு சக்கர நாற்காலி நடக்க முடியாதவர்கள் வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றம் மிகப்பெரியது. நடக்க முடியாமல் அவஸ்தைப் படுத்துவது ஒருபுறம் ஓரிடத்து இருக்கை மனிதர்களைப் புழுங்கவைத்து வதைத்துவிடும். இது அனுபவம் தந்தபாடம்.

அதனால் இலங்கையில் கால்நடக்கமுடியாத இளம் பெண்ணுக்கோ ஆடவனுக்கோ தான் இதைச் சேர்க்க வேண்டுமென திடங்கொண்டு அப்பாவின் குளியலறையின் ஒருபகுதியில் பேணவும் வைத்தேன். அதை சுனாமியைத் தொடர்ந்து நேரம் அனுப்பியும் வைத்தேன்.

ஒருவாறு ஒரு பாடசாலையில் சேர்ந்து இலங்கையிலுள்ள போது கற்ற கணனிப் பயிற்சியை மேலும் விரிவு படுத்த எண்ணினாலும் அங்கே அடிப்படை மட்டுமே பயிற்றுவர் என்பதால் அங்கு பரீட்சை மட்டுமே தோன்றி சான்றிதழும் பெற்றேன். அங்கு போக நான் போக்குவரத்துப் பெறுவதற்கு பட்ட சிரமங்களும் கொஞ்சமல்ல.

கடும் முயற்சிக்கு நிகர் எதுவுமில்லை. ஒருவாறு நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றியாயிற்று. அந்தநாள் என்வாழ்வின் திருப்புமனை என்று கூறுவேன்.

நான் விண்ணப்பித்த பாடநெறி வேறு. ஆனால் தந்த பரீட்சைக்கு நூற்றுக்கு நூறு நான் எடுத்ததும் இரண்டு வருடப் படிப்பை படிப்பதைவிட ஒருவருடப்படிப்பான பல்கலைக்கழகம் புகுவதற்கான பாடநெறித் திட்டத்தில் சேர ஆலோசனைக்கு உள்ளாகி ஆனந்தத்தின் உச்சிக்கே போய்விட்டேன்.

பலசிரமங்கள், தொல்லைகள் இருந்தாலும் எனது காலம் படிக்கப் போவதில் வருவதில், அது பற்றிப் பேசுவதில் கரைந்தது. அப்போது அதிகம் புழக்கத்தில் இல்லாத 'சாட்' எனக்குப் பழக்கமானது. அதனால் அருமையான, 'எருமை' என எங்கள் பேச்சு வழக்கில் கூறும் விதமான பலவித மனிதர்களை முகமூடிகள் போடப்பட்ட நிலையில் அறிமுகமானேன்.

# அங்கம் - 11

சந்தர்ப்பங்கள் தான் மனிதனை வாழவைக்கிறது என்ற கருத்தில் ஆழ்ந்த உடன்பாடு எனக்கு எப்போதும் உண்டு. அதே நேரம் எமது ஆழ்மன விருப்பங்களும் இடைவிடாத அக்கறையும் எப்படியும் அந்த விடயத்துள் இழுத்துச் சென்றுவிடும்.

எப்போதோ இலங்கையிலுள்ள எனது மச்சான் 'சாட்' பற்றிக் கூறியிருக்கிறான். அதன் மூலம் உலகம் பூராவும் தொடர்பு கொள்ளலாம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அப்போது பலரையும் தொடர்பு கொள்வதில் வேட்கை இருந்தாலும் அவன் சொன்னதைப் புரிந்து கொள்ளும் அறிவு இருக்கவில்லை.

பதினெட்டு ஆண்டுகள் வீட்டுக்குள்ளேயே வாழ்ந்ததால் அதிகம் பேருடன் பழகும் இனிய வாய்ப்புகள் பலவற்றையும் இழந்திருக்கிறேன். எனக்கு இளைய மாணவர்கள் தான் எனக்குத் தெரிந்தவர்களாகவும் பழகுபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அப்படியான எனக்கு இப்படி வேட்கை இருந்தது நியாயமானதே.

அப்படியான எனக்கு அருமருந்தாக அமைந்தது இந்த இணையம், அரட்டை, மின்னஞ்சல் என்பன. நான் இணையமும் பெற்று விட்டேன். கணனி பொருத்தியவர்கள் கணனியை இணையத்துடன் தொடர்பு கொள்ள எத்தனித்தனர். வழமைபோல் தடை முன்னின்றது. அவர்கள் சென்று விட்டனர்.

நான் தங்கியிருந்த நிலையத்துப் பெண்மணியின் மகள் தனது தேவையின் நிமித்தம் மீண்டும் முயற்சித்தாள். எத்தனித்தாள் வெற்றியும் கண்டாள். அவள் எனது பெயரையே புனைபெயராகத் தயாரித்தாள்.

இதற்குள் தொலைபேசிக் கட்டணமே இணையத்தொடர்பைப் பேணும் பணமாக இருந்ததும் சிலநூறு கட்டணங்களாக இருந்ததும் அப்பாவுக்குத் தெரியாமல் மறைத்ததும் நானும் எனது சின்னண்ணரும் நடாத்திய திருட்டுத்தனங்களில் ஒன்று.

'களவையும் கற்று மற' என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதுபோல் பலரையும் இணையத்தில் பாகுபாடின்றி சந்தித்தேன். அருமையான நண்பர் நண்பியர்களைச் சந்தித்தேன்.

இணைய அரட்டை என்பது ஒரு கலை என்றே கூறுவேன். முகம் தெரியாத, யாரென்றே தெரியாத அந்நியர்களுடன் தினமும் கூட சந்திக்கும் வாய்ப்பைத் தரும் இணைய அரட்டை முன்பெல்லாம் தட்டச்சுப்பதிவு மூலமே செய்தி வரிகளையுனுப்பும் வசதியுடைய தாய் இருந்தது. அந்த செய்திகளை சுவாரஸ்யமாகக் கொடுப்பது தான் அதன் பரிமாணம்.

தனிமை தந்த துன்பத்தைப் போக்கியதோடு என்துன்பத்தைப் பகிரும் வடிகாலாகவும் இணைய அரட்டை உதவியது. இப்படியாக இருந்த தொடர்புகள் மூலம் கவிதைகளைப் பகிர்ந்து மகிழ்ந்த நான், கோர்ப்புகளாகவும் தமிழில் பதித்து அனுப்பவும் தலைப்பட்டேன். அந்த ஆக்கங்களை இணையத் தளத்தில் பிரசுரித்தால் பலருக்கு காண்பிக்க உதவுமே எனவிரும்பினேன்.

இணையத் தளத்தை எப்படி ஆக்குவது என்பதைத் தேடவிழைநந்தேன். இவற்றை விளங்கவைக்க எனது நண்பர் ஒருவர் ஒலிவாங்கி மூலம் தொடர்பு கொண்டார். அப்போது புரிந்தது குரல்மூலம் தொடர்பு கொள்ளலாம் என, காலப்போக்கில்.

காலதேவதை கரம்பற்றிப் பலதிசைகளும் அழைத்துப் போனாள். பலரையும் தெரிந்து கொள்வதோடு எனக்குள் இருந்த கவிதை விருட்சம் மெல்ல மெல்ல கிளைவிட விழைந்தது.

எனது இணைய அரட்டையில் பலரையும் வைத்து எழுதிய கவிதை பலராலும் பல தடவை வாசிக்க வைத்தது. அதை உங்களுடன் பகிர்கிறேன் உங்கள் சுவைக்காக.

## இணையத்திலே நாம்!

இனம் மறந்தோம்! சனம் மறந்தோம்!
இணைந்து விட்டோம்! இணையத்திலே!
எமை மறந்தோம்! இதயம் திறந்தோம்!
மனந் திறந்தோம்! மகிழ்ந்து சிரித்தோம்!

ஆலமரம் இந்த இணையம்-அதில்
சாலவும் ஆறவ ந்தோம் யாமும்
அமரும் குருவிகளோ அநேகம்-அதில்
பகரும் விடயங்க ளோஅ திகம்!
பாலிரு க்கும்கள் ளிருக்கும்-நாமும்
பாலினைப் பகிர்ந்திட ,பாங்குடன்
ஆக்கிவைப்போம்!அழகுக்கூடம்
அதன்பெ யரோ ரோஜாத் தோட்டம்!

கூவுகின்ற குயில்களுட ன்கூடவே நாமிருந்து
பேசுகின்ற 'ஜொல்லுகள்' பெருங்கதைகள் !

கணீரென்ற குரலால்-மனம்
கவர்திழுக்கப் பாடும் -கார்த்திக்!
கலகலவென்று சிரிப்பு கமழ
கலக்கி வைப்பார் பாட்டால்- மூர்த்தி!
பரபரக்கும் பேச்சால்-பாரத்
பகரும் கதைகள், படுசுவை!

கிளிப்பேச் சால்,கிளர் வூட்டும்
இனிக்கும் குரலாள்-மீனா!
இதமான குரலால் ,இதயம் கொள்ளை
கொள்ளும் பெண்ணாள்-சுபா!
மனந்திறந்து மகிழச்சி ரிப்பாள்-ச வீதா!
எத்தனை யோஇளம் குயில்கள்
எம்மா லமரத் தினிலே!
திலா,ரீவா,அவ்ரீன்,தேவிசிவா

ஈ"வரி,கிறமைஸ்,டிஸ்குளொசர்
இவர்கள் பெயர்கள் அதனுள் அடக்கம்!
இவர்கள் குரலில் நாங்கள் அடக்கம்!

சுந்தரக் குரலில் சுவையாய்
வந்தனங் கள்கூறும் trueman
எத்தனை யோபெ யரில்வந்து
எமைக் கவரும் கட்டிளங்காளை!
Lv யின்குறு ம்புகள்எல் லோரையும்
கவர்ந் திழுக்கும்! சிறப்பாய்...
பாட்டுக் கள்பல பாடும்
pals- நம் pals
உள் ஒருவர்!

கத்துகி றேனென்று சொல்லி
நித்திரை யில்பாடும் கதிரவன்!
மக்களை க்கவர mac mac
பேச்சும் அபாரம்!
மும்மூச்சாய் music
போடும்-எங்கள்
MK_madras!
பெரும் பெரும் அக்கறையுடன்
பேசுவாரு Petor!
Hai ram, கடவுள்,, Shrinee
களைசே ர்ப்பர் கூடத்தை!

Brown eye,Sathisku,Hussain,Raghu,
Chennai boy, Hari Harran, Ram chand
எனஎத் தனையோ சிங்கங்கள்!

அத்தனை னயும்முத் துக்கள்!

இப்படியாக நான் இணையத்து பொது அரட்டை அறைகளில் எழுதி வாசித்த கவிதைகள் அனேகம் அனேகம். கவிதைக்குள் ஆங்கிலம் கலப்பது எனக்குப் பிடிக்காது எனினும் இதுவே நண்ப நண்பியரகளை சரியாக அடையாளப்

படுத்துமென்பதைக் கருதி இணைத்துள்ளேன்.

அந்த நண்பநண்பியர்கள் தந்த உற்சாகம் என் கவிதைகளை வாழவைத்து வளர்த்ததோடு என்னையும் காத்தது. இதனால் கிடைத்த நண்ப நண்பியர்கள் எண்ணிக்கை நூறையும் தாண்டும்.

தொடர்பு கொள்ள விரும்பும் நபர்களின் எண்ணிக்கையிலிருந்து தப்ப போடப்பட்ட முகமூடி தான் நிலா என்ற எனது புனைபெயர்.

அதே இணையத்தில் இலண்டன் வானொலியை செவிமடுப்பதால் அதேபுனை பெயரில் உலாவருகிறாள் இந்த நிலா.

# அங்கம் - 12

இணையத்தின் வரவு எம்மைப் போன்று நாட்டைப்பிரிந்து வாழும் மாந்தர்க்கு மிகவும் ஆறுதல் தரவல்ல சாதனம் என்பது நிதர்சனம். ஆனால் அதேவேளை இணையத்தால் தம்குடும்பங்களை இக்கட்டான கட்டங்களுக்கு இட்டுச் சென்றவர்களும் இருப்பது பற்றி அடிக்கடி நாம் அறிந்து கொண்டு தானிருக்கிறோம்.

நான்கு சுவர்களுக்கும் அடையில் அகப்பட்ட என் போன்றவர்கள் அறைக்குள்ளிருந்தே அவனியை தொடர்புச் சிறகால் அரவணைக்க அரும்பெரும் கண்டுபிடிப்பு இணையம் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை. இந்த கணனி யுகத்தில் வாழ எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு இறைவனுக்கு நன்றிகள்.

இணையத்து நண்பர்கள் என் வாழ்வில் ஒன்றிப்போனவர்கள் ஆதலால் அவர்கள் பற்றி எழுதாமல் 'எழுத எழுத' வின் பக்கங்களை நகர்த்த என்னால் முடியவில்லை.

எமக்கென்று அரட்டைஅறைகள் எனப்படுகின்ற அரங்குகளை அமைத்து நாம் இணையம் மூலம் ஒன்று கூடி விவாதங்கள், பாட்டுக்குப் பாட்டு என்றெல்லாம் பலமணிக்கணக்காக மகிழ்ந்த பொழுதுகள் என் வாழ்வின் வசந்தங்கள்.

அந்த அரட்டை அரங்குகளுக்கு 'அன்பு அரன்மனை' என்றும் அந்த அரண்மனை திறக்க முடியாத வேளைகளில் 'நிலாமுற்றம்' என்றும் பெயர்கள் வைத்து இயங்கிய நாம் உலகம் பூராவும் உள்ள பலநாட்டுத் தமிழர்களையும் இணைத்தோம்.

அங்கு 'ஆஸ்தானக் கவிஞ்ஞை' என்ற பட்டம் வேறு சூட்டி என்னைத் தலையில் வைத்துக் கொண்டாடினர் என்றால் பாருங்களேன்.

இப்போது கூட பொது அறைகளில் பலரும் அரட்டை செய்யும் போது கூட என்வரவு தெரிந்தால் கவிதாயினி என்பவர்களும் கவிபாட வேண்டுபவர்களும் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

பலவேளைகளில் கவிதைகளை வாசித்து மகிழும் நான் சிலவே ளைகளில் "நான் என்ன கவிதை முட்டையிடும் வாத்தா நான்" என்று நகைச்சுவையாகக் கூறி தப்பித்து வெளியேறி விடுவேன்.

இப்படியாகப் பிறந்தது நிலாமுற்றம் எனப்படும் எனது இணையத்தளம். அது கூட என்நண்ப நண்பியர்கள் இணையும் பாலமாக இருந்து வருகிறது. இணையத்து அரங்கம் நிலாமுற்றம் பற்றி அப்போது எழுதி வசிக்க எழுதிய கவதை பாடலாகவும் ஒரு நண்பி பாடி அனுப்பினாள் ஒலிவடிவில்.

## நிலாமுற்றம்

ஓடியோடிக் களைத்த நாங்கள்
தேடித்தேடி இணையும் நிலாமுற்றம்!
பாடிப்பாடி பேசிப்பேசி எமைமறப்போம்!-ஒன்று
கூடிக்கூடிக் கலைவோமே.. தினந்தோறும்!

கனக்கும் இதயத்தை இலேசாக்க
திறக்கும் எங்கள் கலைக்கூடம்!
சுரக்கும் மகிழ்வூற்று,சுவையாக
பிறக்கும் நிம்மதி பேரானந்தமே!

அறைக்குள் இருந்து அவனியடங்க
அகலும்நம் நட்புச்சிறகுகளே!-அதனால்
குறையும் மனப்பாரம், குறையும் இடைவெளிகள்!
குறைகளும் கோள்குண்டணிகளும் கறைதானிங்குமே!

இதயத்தை இதயமாக மதித்திட-நமக்கு
இணையத்தில் கிடைத்தவினிய பொழுதுகளே!
வலயத்தை, நட்புவலயத்தை விரித்திட
குவலயத்தில் கொடுத்து வைத்தோமே!

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு' என்று கூறுவதற்கொப்ப இணையத்துடன் இணைந்து என் தனிமையைப் போக்கிய நான் என் கல்வியிலும் கவனம் செலுத்தத் தவறவில்லை.

நான் வாழ்ந்து வந்த பராமரிப்பு நிலையத்தினர் இயன்றளவு குறுகிய சேவையே வழங்கினர். ஆவர்களுக்குத் தேவை எனது உயிர் வாழ்தல். காரணம் பணம் ஈட்டுதல் தானே அவர்கள் குறி, அதற்கு என் உயிர்வாழ்தல் அவர்களுக்கு வேண்டியதொன்றாக இருந்தது.

தரும் தேநீர் கூட ஏனோ தானோ என்றிருக்கும். அதை மேசையில் வைக்கும் பாங்கே என்னைப் பல தினங்கள் அவர்களுக்குத் தெரியாமல் வோ' பேஸின் எனப்படும் முகம் கை கழுவப் பயன்படும் தொட்டியில் ஊற்ற வைத்திருக்கிறது.



நோர்வேயில் இருந்து அண்ணர் குடும்பம் வந்து போனார்கள். மனதில் கற்பாறையாக அழுத்திய பிரிவு எனும் கல் கரைந்து மனம் இலேசானது. அப்பாவின் அன்புக்கு பாத்திரமானவன் தன்னை இனங்காட்டியவன் 'அம்மவை அழைத்து வருகிறேன்' என்ற கபட நாடகத்துக்கு கானக்குயில் விழாவில் கிடைத்த தொகையும் மேலும் ஒருதொகையும் பலியானது.

காலம் தன்பணியைச் செய்து கொண்டுதானிருந்தது. அடுத்தவருடமும் வந்தது. நான் விண்ணப்பித்த மின்சாரத்தால் இயக்கக் கூடிய சக்கர நாற்காலி எனக்கு வழங்கப்பட்டது. அதையும் நான் பாவிப்பதற்கும் மறுக்கப் பட்டேன்.

நான் ஏற்கெனவே தொடர்பு கொண்ட தொண்டர் தாபனங்களும் எனது 'மறுப்புப்' போராட்டத்துக்கு உதவினர். ஆவர்கள் முன்னிலையில் சாரதி பயிற்சி போல் எனது நாற்காலியைச் செலுத்தி வெற்றி கண்டு விட்டாலும் எனது பாதுகாப்பு பற்றி தான்வருந்துவதாக போட்ட அந்த நிலையத்து பெண்மணி போட்ட சூழ்ச்சிக்கு ஆளாகி என்னை முன்பக்கம் விழாமல் இருப்பதற்கான் ஓர் குறுக்கு பட்டிக்காகக் காத்திருக்க வேணடடியவளானேன்.

'அடிக்கு மேல் அடி' விழுந்து கொண்டேயிருந்தது. பிறந்தாயிற்று, வாழ்ந்து தானே ஆகவேண்டும் என்ற போக்கில் என்வாழ்வு தொடர்ந்தது.

ஏதோ சாக்குக் கூறி என் குளிப்பை முற்றாகவே நிறுத்தி விட்டார் அந்த நிலைய நிர்வாகி. ஒருநாள் இந்த துன்பம் தாளாமல் ஓவென்று மிகப்பெரிதாகக் கதறி ஒர் கார்த்திகை நட்சத்திர நாளன்று அழுதது அந்த முருகன் காதுகளில் விழுந்திருக்க வேண்டும்.

ஒருநாள் நான் கூறிய வாக்கை அதாவது 'I want to commit suicide' என்ற வரியை அப்படியே நான் தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்ற தகவலை 'சோ'ல் சேவிஸ்' இடம் தெரிவித்ததை அடுத்து தினமும் எனக்கு தொலைபேசியில் பதிவு செய்தாவது சுகம் விசாரித்து வந்தனர் சோ'ல் சேவிஸினராகிய மாநகரசபையினர்.

கல்லூரியினால் வந்ததும் தொலைபேசிச் செய்திகளை செவியுறுமெனக்கு எனது குடிவரவு குடியகல்வு பற்றி செயற்படும் தாபனத்திலிருந்து வந்த அழைப்பு அவர்களை அழைக்கவைத்தது. நான் இங்கு நான்கு வருடங்கள் வாழலாம் என்ற நற்சேதி தான் அந்த அழைப்புக்குக் காரணம்.

என் மகிழ்வுக்கு அளவே இருக்கவில்லை. நான் பல்கலைக் கழகம் போவதற்கும் இந்த அனுமதி உதவும் என்ற மகிழ்வில் பறந்தேன்.
அதைத் தொடர்ந்து ஏதாவது ஒரு வீடு வாடகைக்கு எடுத்துப் போய் வாழலாம் என்றிருந்த எனக்கு வாழ்க்கை நான் நினைத்தது போல் இருக்கவில்லை.

# அங்கம் - 13

என்க்குக் கிடைத்த நான்கு வருட விசா எனப்படும் ஐக்கிய ராச்சியத்தில் வாழ்வதற்கான அனுமதி எனது உரிமைகளை அதிகரிக்கும் என்பதால் மனதில் கொஞ்சம் தென்பு வந்தது.

இப்படியான உரிமை கிடைத்த நம்நாட்டு இளம்வாலிபர்கள் கிடைத்த உரிமையை வேறுதிசையில் செலுத்துவது மிகமனவருத்தத்துக்குரியது. இவர்கள் தங்கள்



சமுதாயத்துக்கே எதிராக, இந்த நாட்டு அரசாங்கமே செயற்படும்விதமாக வெட்டு, கொத்து என்ற கீழ்த்தரமான விடயங்களில் ஈடுபடுவது கோடரிக் கொம்புக்கு ஒப்பானது.

இங்கு பல்கலைக்கழகத்தில் படிப்பதென்றால், அதற்குப் பணம் செலுத்துவதென்றால் கூட இங்கு வாழ அனுமதி பெற்றிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட சாராருக்கே இந்த நாட்டுமாணவர்கள் செலுத்தும் தொகையான 'ஹோம் ஃபீஸ்' செலுத்திப் படிப்பைத் தொடரமுடியும். கல்வியின் மீதுள்ள

ஈடுபட்டால் இரத்தத்தைப் பணமாக்க இரவு நித்திரையைத் தியாகம் செய்து பட்டம் பெறும் வாலிபர்களையும் பார்த்தே இருக்கிறேன்.

அந்த அவஸ்தையிலிருந்து நான் தப்புவதற்கு எத்தனையோ காரணங்கள் காட்ட அந்தப் பல்கலைக் கழகங்கள் சம்மதித்தும் இந்த விசா அரசாங்க உதவியைப் பெற ஆதரவாக இருக்குமே என்று மகிழ்ந்த எனக்கு இந்த நாட்டில் குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் வாழ்ந்திருந்தால் தான் அந்த வசதிகளும் கிடைக்குமென்றும் நான்வந்த அன்றே அகதி விண்ணப்பம் கோராமல் அதனால் மேலுமோர் வருடத்தை பின்போடும் துர்அதி'டத்துக்கும் ஆளாவேனென்றும தெரிந்திருக்கவில்லை

ஆகஸ்ட் முப்பதியோராம் திகதியன்று இவ்விடம் வந்து சேர்ந்தாலும் மூன்று தினங்கள் கழிந்து தானே அகதி விண்ணப்பம் செய்தேன். என் வாழ்க்கையில் எதுவுமே போராடித்தான் கிடைக்கிறது! கிடைக்கிறது என்பதால் போராடப் பழகி விட்டேன்.

சின்னண்ணர் திருமணப் பேச்சு நடக்கும் வேளை. எனக்கு வேறு இடத்தில் அதுவும் இது போன்ற பராமரிப்பு நிலையத்தில் வாழும் வாய்ப்பு வந்தது.
ஆனால் நானோ தனித்து ஒருவீடெடுத்து வேலைக்கு ஆட்களை அரசாங்க தயவில் அமர்த்தி அப்பாவுடன் வசிப்போமே என்று படாத பாடுபட்டேன்.

நானாகப் பணம் செலுத்தி வீடுவாடகைக்கு குறிப்பிட்ட சூழலில் எடுப்பது, அதுவும் நில மட்டத்தில் என் சக்கரநாற்காலி போகவரக் கூடியதாகக் கிடைக்குமா என்பது சந்தேகம். நானோ உழைப்பூதியம் பெறாதவள்.

சுவரெறிந்த பந்தான என் நிலைமையை நான் கூறவே தேவையில்லை. ஏனென்றால் தங்களுக்கு வாடகை கிடைக்க மாநகரசபையிடம் இழுபறிநிலைப்படும் என்ற எண்ணம் தான்.

என்னைத் தங்கள் சம்பாத்தியத்தில் அரச உதவியின்றி எவரேனும் பார்த்துக்கொள்ளல் என்பது மிகவும் பாரிய விடயம். ஆசியநாட்டு நிலைவேறு, ஐரோப்பிய நிலைவேறு. இலங்கையிலுள்ள போதுகூட அப்பாவின் வெளிநாட்டு உழைப்பு தான் என்வசதிகளை அதிகமாக்கி வைக்க உதவியது.


அதனால் அப்பா தான் பல்கலைக்கழக அனுமதிக்கட்டணத்தைச் செலுத்த

தயாரானபோதும் என்னால் பல்கலைக்கழகம் அப்போது போகமுடியவில்லை. அப்பா இதரசெலவுகளைப் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடுவதோடு என் சலுகைகள் எப்போதுமே கிடைக்காமல் போய்விடும் என்ற இந்நாட்டுச் சட்டதிட்டங்கள்.

சின்னண்ணர் திருமணத்துக்கு அப்பாவும் போய் அம்மாவை பதினழு வருடங்களின் பின் சந்தித்ததும், நான்வாழ்ந்த பராமரிப்பு நிலையத்துக்கு அண்மையாக அப்பா வந்து சேர்ந்ததுவும் எனது சின்னண்ணர் தம்பதியினர் இங்கு இலண்டனில் வாழத் தொடங்கியதும் நடந்த நல்ல விடயங்கள்.

அம்மா அப்பாவைப் போல் இப்டிப்பல ஆண்டுகள் பிரிந்து வாழும் தம்பதியனர் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள். குடும்ப முன்னேற்றத்திற்காக தங்களைப் பிரிவு எனும் தீயில் உருகவைக்கும் மெழுகுவர்த்திகள்.

நானும் மனஞ்சலிக்காது கல்வித்திணைக்களங்களுக்கும் விண்ணப்பித்து ஏமாற்றத்தைப் பதிலாகப் பெற்றேன். இப்படியாக இரண்டுவருடங்கள் மேலும் சென்றது.



அந்தக்காலங்களிலும் இணையத்தளம் அமைப்பதற்கான கற்கை நெறிகளையும் 'மல்ரிமீடியா' எனப்படும் கணனி சார்பான கல்வியையும், கணனி வலைப்பாடு பற்றியும் பயின்றே வந்தேன்.

நிலாமுற்ற இணையத்தள வளர்ச்சியும் அம்மாவின் இலண்டன் வருகையும் பல்கலைக்கழகம் போவதற்கான ஏற்பாடுகளும் ஆயின. ஆம்மா லண்டன் வந்ததும் தான் என் மனம் அமைதி கொண்டது. என்னைப் பராமரிப்பதே வாழ்வாக இருந்த அம்மா இனியாவது அப்பாடா என்று வாழட்டுமே என்று பிரார்த்தித்தேன்.

பல்கலைக்கழகம் போகலாம் என்ற சந்தர்ப்பம் வந்து விட்டது. இந்த வயதில் இந்தப் படிப்பு தேவைதானா என்ற தயக்கம் தடுத்தாலும் பிற்காலங்களில் இதை நினைத்து வருந்தக் கூடாதே என நினைப்பதோடு என்னைப் பெற்றெடுத்த தாய்தந்தையர்க்கு என்னால் செய்யக்கூடியதே அவர்களை மகிழ்விக்க அவர்கள்

கனவை நனவாக்குவது என்றவுறுதியான முடிவை எடுத்துக் கொண்டேன்.

'மிடில்செக்ஸ்' பல்கலைக்கழகம் நான் அனுப்பிய இரண்டு விண்ணப்பங்களையுமே ஏற்றுச்சம்மதித்துப் பதிலளித்திருந்தது. அதுவும் எதுவித நிபந்தனையோ, நேர்முகப் பரீட்சையுமே இல்லாமல் அனுமதி தரத் தயாராக இருந்தது எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது.

இதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த Brunel பல்கலைக்கழகத்தினர் எனது இயலாமை பற்றியே தொன்னூறு வீதம் வினாக்கள் தொடுத்ததும் என் கணித அறிவு போதாது அந்த குறித்த கற்கைநெறிக்குப் போதவில்லை எனத் தாங்கள் நினைப்பதால் அடிப்படை ஆண்டிலிருந்து படிக்கும் படிமடல் அனுப்பியதும் நான் அவர்களிடம் சவாலாக தனிப்பரீட்சை நடாத்தவைத்து அந்தப் பரீட்சையில் என்கணிதத் திறமையை நிரூபித்தது என்மனவலிமையை இழந்து விடாமல் தக்கவைத்துக் கொள்வதும் சத்தியமானவை.



எங்கும் இன்முகவரவேற்பை விரும்பும் நாம் பல்கலைக் கழகத்தில் எதிர்பார்த்தும் தப்பில்லைத் தானே. அந்த வரவேற்பே தங்களுக்கு தொல்லையாக இருக்கும் என்று எதிர்பார்த்தார்களா?

பல்கலைக் கழகம் போவதற்கு மூன்று மாதம் முன்பாக ஒருநாள் எனக்கொரு மின்னஞ்சல் கிடைத்தது. நிலாச்சாரல் இணையத் தளத்திலிருந்து தங்கள் தளத்தில் வந்து என் ஆக்கங்களைப் பிரசுரிக்கும் படி. அந்த இணையத்தள ஆசிரியரும் நிலா என்ற புனைபெயருக்குரியவர் என்பது தான் விந்தை.

விளையாட்டாக நடாத்திய இணையத்து அரட்டைகள் தந்த விளைவு நான் 'Forum hub' எனும் மன்ற மையம் எனும் இணையத்தளத்துக்குப் போய் தமிழ்க் கவிதைகளை தமிழ் உச்சரிப்பை ஆங்கில அட்சரம் கொண்டு பல கவிதைகளை எழுதவைத்தது. அந்தக் கவிதைகள் இவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும்.

'நிலாவிடமிருந்து நிலாவுக்கழைப்பு' எனவோர் கவிதையைப் பதிலாக அனுப்பியது நினைவிலுள்ளது. அந்த அறிமுகம் என்னைத் தீபம் தொலைக்காட்சியில் 2002 ஆம் ஆண்டு காலைக்கதிர் நிகழ்ச்சியில் ஒருமணிநேர நேரடிச்சந்திப்பு நிகழ்வாக இடம்பெற்றது என்வாழ்வில் மறக்கவே முடியாத இனியநாள்.

அந்த செவ்விக்கு முதல்நாளும் என்னால் தூங்கவே முடியவில்லை என்ற அளவுக்கு மகிழ்ந்தேன்.

செவ்வியன்றும் தூங்கமுடியவில்லை என்ற அளவுக்கு மகிழ்ந்தேன். ஆண்டவனின் படைப்பின் திறனைப் பார்த்தீர்களா?

இவ்வளவு துன்பங்களையும் தந்து இவ்வளவு கொடுப்பனவு களையும் தந்திருக்கிறார்.

இதைத்தான் நான் என் நண்பர்களிடம் அடிக்கடி கூறுவது 'நான் எவ்வளவு துரதி'டசாலியோ அவ்வளவுக்களவு அதி'டசாலி'. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# அங்கம் - 14

என் பெற்றோர் பார்க்கட்டுமே என தீபம் தொலைக்காட்சி சந்தா கட்டி அந்த வசதியைப் பெற்றுக் கொடுத்து விட்டு எனது வலது கை எனப் பலருக்கும் அறிமுகம் செய்து வைக்கும் முகுந்தாவின் உதவியோடு சேலையுடுத்து தீபம் தொலைக்காட்சி செவ்விக்குப் போனேன்.

போனவன்று கூட நான் குளிப்பதற்கு மறுக்கப்பட்டேன், எனினும் அதைக் கூறி அம்மாவினதோ சின்னண்ணரினதோ மனங்களை வருத்தி மகிழ்வின் சதவீதத்தைக் குறைக்க விரும்பாமல் மகிழ்வை முகத்துக்கு முலாமிட்டு மகிழுந்தில் பயணஞ் செய்தேன்.

உலகமெனும் மேடையிலே நாமெல்லாம் நடிகர்கள் தானே. பாடசாலை போகும் காலங்களில் கூட நான் பலதடவையோ அல்லது ஒருதடவையோ கீழே விழ நேரினும் இயன்றளவு அம்மா அப்பா காதுகளில் விழாமல் பார்த்துக்கொண்ட அந்தப் பழக்கம் தான் இதற்கும் காரணமோ!

எல்லாவற்றிலும் மேலாக இரண்டு ஆண்டுகள் அடிமையைப் போன்றே நான் கவனிக்கப் பட்டாலும் அம்மாவிடம் இருந்து எல்லாவற்றையும் யாம் மறைத்தோம்.

இந்த பராமரிப்பு நிலையம் வந்ததும் ஓரிரு நாட்களில் அம்மாவுக்கு தொலைபேசியில் அழைத்து எனக்கு அதைவிட சிறந்த வசிப்பிடம் கிடைத்ததைக் கூறமுற்பட்ட எனக்கு அம்மாவின் அழுகை தூக்கி வாரிப் போட்டது.

என் நண்பி மூலம் நான் பட்ட பாடுகளை அம்மாவிடம் கூறியதால் 'நீ இப்பவும் என்ன பாடு படுகிறேயோ. என்னத்தையெல்லாம் என்னட்டையிருந்து மறைக்கிறாயோ?' என்று ஒரே அழுகை. சிலர் கூறும் ஆறதல்கள் கூட அவலங்களில் கொண்டு போய் விட்டு விடுகிறது மனிதர்களை.

நான் ஒரு இடாம்பீக தோற்றமும் வசதியுமுள்ள நிலையத்தில் தான் மாற்றலாகி வாழ்ந்தேன் எனினும் ஒரு மனிதனுடைய உடல் நலம் மிகப் பெறுமதி வாய்ந்தது. உடல்நலம் கெட்டு விட்டால் அன்பான பராமரிப்பு கிடைக்காவிடின் அந்த மனிதனின் வாழ்வே நரகம்.

அதுவும் சுற்ற வர நடப்பதைக் கிரகிக்கும் ஆற்றலுடன் மற்றவர்களின் பாராமுகத்தை அனுபவித்தல் என்பது ஒரு வித்தை என்றே கூறுவேன். வந்து பிறந்தாச்சு, வாழ்ந்து தீரணுமே, அதேவேளை எடுத்த பிறப்பில் அர்த்தம் இருக்க வேண்டுமே என்ற கொள்கை வேறு.

சவால் தான். ஆனால் நாற்பத்திரண்டு வருடங்கள் வாழ்ந்தாச்சே!

இந்த பராமரிப்பு நிலையம் மட்டுமென்ன ஆகா ஓகோவென்று கவனிக்காவிடினும் ஐயா பிச்சை வேண்டாம் ஆளை விடு என்ற அளவுக்கு பராமரித்தனர். சோ' ல் சேவிஸ் எனப்படும் மாநகர சபையினர் வேறு ஆரம்பத்திலேயே எச்சரித்து விட்டது தான் காரணம் போலும்.

இது ஒருதனித்த குடும்பத்தினரால் நடாத்தப்படும் நிலைய மல்லவே. இந்த நிலையம் ஐம்பது மட்டில் கிளை கொண்ட பெரியநிறுவனத்தின் கிளை. அத்துடன் நான் இந்நாட்டில் வாழ அனுமதி பெற்றவள் என்பதோடு எனது உரிமைகள் தெரிந்த வளாகி விட்டேனே.

நான் மின்சாரத்தால் சக்தியூட்டப்பட்ட மின்கலம் கொண்டு இயங்கக்கூடிய சக்கரநாற்காலியில் அந்த நீண்ட பெரிய விறாந்தைகளில் அங்குமிங்கு உலாவத் தொடங்கியது தான் மகிழ்வைத் தந்தது.

எங்கேயோ இலங்கை நாட்டின் ஒருபகுதியில் ஏதோவோர் மூலையில் இந்த நிலையில் இருந்த என்னைக் காலமகள் இங்கு அழைத்து வந்து ஓரிடத்தில் அமர்ந்தாலும் சாதாரண மனிதர்கள் போல பலவிடங்களுக்கும் போய்வர சந்தர்ப்பம் தேடித் தந்த அந்த நாற்காலி எனக்கு புதவித உற்சாகத்தை தந்தது.

இப்படியாக வலம் வந்த எனக்கு எப்போதே மனதுள் துளிர்விட்ட எண்ணம் ஆசையாக பரிணாமம் கொண்டது. அது என்ன தெரியுமா? நான் ஏன் நானாக ஏதாவது மோட்டார் வாகனம் ஓட்டக்கூடாது என்ற ஆசைதான் அது.

அதற்காகவும் முயன்றேன். அதற்காக நான் தகுதியுள்ளவள் தானா உடலளவில், என்று என்னை மதிப்பீடு செய்ய Wokkingam எனப்படும் இடத்துக்கு அண்மையாக அமர்ந்துள்ள ஓரிடத்துக்கு தனியாகவே இரண்டு புகையிரதங்கள் ஏறி எனது சக்கர நாற்காலியில் போய் வந்ததே புதிய அனுபவம்.

காலம் சம்மதித்தால அதுவும், அதாவது மகிழுந்து செலுத்தும் வாய்ப்பும் என்வாழ்வில் இடம்பெறக் கூடும். அப்படி சந்தர்ப்பங்கள் வாய்த்தால் நான் பிரசன்னமாகும் இலக்கியக் கூட்டங்களும் சந்திப்புகளும் அதிகமாக வாய்ப்புண்டு.

இந்த நாட்டில் போக்குவரத்துக்கு ஏற்படுத்தும் செலவுண்மை யில் பெரியது. அதுவும் என்போன்ற சக்கர நாற்காலியுடன் பயணஞ்செய்வோராகின் அதை சாதாரண உடல்நிலை யுள்ளவர்கள் பயணஞ்செய்யும் வாகனங்களுக்கான செலவுடன் ஒப்பிடும் போது மிக வேறுபாட்டைத் தரும்.

தீபம் தொலைக்காட்சிக்குக் கூட 'பிளாக் காப்' எனப்படும் பெரிய அளவிலான மகிழுந்தை இருபது பவுன்கள் (அதுவும் சலுகை அடிப்படையில் இயங்கும் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியதால் ) செலவு செய்து போயிருந்தேன் செவ்விக்கு.

ஒருமணிநேரம் முன்பாக அங்கு போயவிட்டோம். அமைதியான அந்தச் சூழலில் ஏதாவது நல்லதாய் ஏதும் செய்யலாமே என்று ஓர் கவிதை எழுத முனைந்து இதை அங்கு வாசித்தும் சமர்ப்பித்தேன்.

> தெளிவாய் தெரிவாய்! திங்களாய் மிளிர்வாய்!
> பரிவாய் புகல்வாய்! பகலனாய் சுடர்வாய்!
> வருவாய் வனப்பாய்! வதிவாய் வாஞ்சையாய்!
> தருவாய்! கற்பகதருவாய், வளர்வாய்! வாழ்வாயே!

என்ற 'ய்' என நிறைவுபெறும் சொற்களைக் கொண்ட இந்த பந்தி அந்தக் கவிதையின் ஒரு பகுதி. பின்பொரு வேளை ஈலிங் துர்க்கையம்மன் கோவில் சுவரில் காணப்பட்ட அருவாய' உருவாய் என்ற துதி எனக்கு என் மனதில் ஓர் பெரிய கேள்வியைத் தொடுத்தது. அந்த துதியை எங்கோ கேட்டதன் பாதிப்பு தான் அந்த கவிவரிகளுக்குக் காரணமோ!

# அங்கம் - 15

என்ன தான் இருந்த போதும் எதிர்பார்த்தே இருக்காத, எனது நீண்ட நாள் கனவு நனவாகும் தருணத்தில் நானிருக்கிறேன் என்ற நிறைவு மனதில் துள்ளலாக இருந்தது.

அம்மாவும் இலண்டன் வந்து சேர்ந்து போவதற்குத் தான் நான் பல்கலைக்கழகம் புகும் தருணம் வந்ததோவென நேர்நோக்குடன் சிந்தித்து அந்தமகிழ்வை முழுதாக அனுபவிக்க முயன்றேன், அந்த அளவுக்கு அந்தப்படிப்பின் மேல் பிடிப்பு.

நான் உடலால் பாதிக்கப்பட்டவள் என்பதால் ‘ஓபின் டே’ எனப்படும் எனது கற்கை நெறியான கணனி வலைநுட்ப வியலுக்கான பொறியில் துறைக்கு அறிமுக நாளுக்கு அம்மா வையும் சின்னண்ணரையும் அழைத்துப் போனேன்.

வேறோர் நாள் என் இயலாமை என் படிப்புக்கு எந்த அளவுக்கு இடைஞ்சலாக இருக்குமென்பதை மதிப்பீடு செய்ய அழைத்தனர்.

அதிகூடிய பலனைப் பெற, என்னால் எனது படிப்பை வெற்றிகரமாக முடிக்க எந்த வகை உதவி தாங்கள் வழங்க முடியுமென நான் நினைக்கிறேன் என மிகவும் மென்மையாக விசாரித்து தகவல்களைப் பெற்றதோடு தாங்கள் என்னவெல்லாம் உதவி செய்ய எனக்கு இந்நாட்டுச் சட்டம் இடங்கொடுக்கும் எனவும் விளக்கினர்.

அன்று மட்டும் ஆவது ஆகட்டுமென நான் அப்பாவின் உதவியுடன் போயிருந்தால் நான் எவ்வளவோ உதவிகளை இழந்ததோடு மிகவும் துன்பத்துக்கும் ஆளாகி இருப்பேனோ! பொறுமையின் பலன் இன்று அனுபவிக்கிறேனோ!

என்னை மதிப்பீடு செய்தவர்களும் பகுதியாக உடற் பாதிப்புக்கு உள்ளானவார்கள் என்பதாலோ எனக்கு நம்பிக்கை தரும் விதமாக அவர்கள் பேசியது எனக்கு மேலும் நம்பிக்கை நாற்றுக்கு உரமானது போலுணர்ந்தேன்.
என்றாலும் உள்ளே ஒருணர்வு ‘நீ இதை வெற்றிகரமாகச் செய்து முடிப்பாயா, முடிக்கணுமே’ என்று கூறிக் கொண்டே இருந்தது. என்ன தான் எம் கைகளில் இருக்கிறது?’

நாம் முழுமனதுடன் முயற்சி செய்ய வேண்டும் பலன் கிடைக்கும் போது கிடைக்கும். முயன்றோமே என்ற மனநிறைவாவது மிஞ்சுமே என்ற கொள்கையுடையவள் நான். அதன்போது ஏற்படும் அனுபவங்களே பாடமாக கட்டாயமாகத் துணைநிற்கும் எமக்கு.

நான் பல நாட்களாக கொள்வனவு செய்ய விரும்பிய எங்கு சென்றாலும் கொண்டு செல்லக் கூடியதும் அதிகப்படியான இடத்தை இலகுவிலே ஆக்கிரமிக்காததுமான laptop என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கணனியொன்றும் அதை வைத்து என்னுடலுக்கு இயன்றளவில் உதவக்கூடியதுமான மேசையும் இன்னும் சிலபொருட்களும் வழங்க ஒப்புக்கொண்டனர்.

பாருங்கள் ஆரோக்கியம் எம்மை விட்டுப் போகும் போது அதைநிவர்த்தி செய்ய எத்தனை எல்லாம் செய்தும் அது எமக்கு முழுதும் திருப்தி தருகிறதா என்றால் அது தானில்லை.

ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் இது பற்றிச் சிந்தித்தல் நன்று. இல்லாதோர் கூட இப்படியான உதவிகளைப் பெற்று தங்கள் வாழ்வை வளமாக்க முயற்சித்தே ஆகவேண்டும்.

எனக்குத் தான் கைகளைக் கூட உயர்த்தி தட்டச்சில் பதிவு செய்வதென்பது அவ்வளவு சுலபமான விடயமல்லவே. இப்போது கூட இடதுகையால் வலது முழங்கைக்கு ஊன்று கொடுத்துத் தான் கணனியில் பதிவு செய்கிறேன்.

பல்கலைக்கழகப் படிப்பென்றால் அதற்கு நிறையவே எழுத்துப் பிரதிகள், அறிக்கைகள் ஆக்கவேண்டி இருக்குமே என்பதை மனதில் நிறுத்தியதோடு எங்கோ காதில் விழுந்த சேதியைச் செயலாக்க எண்ணி நான் உச்சரிக்கும் போதே அட்சரங்களாக ஆக்கக் கூடியதும் எனது உடற்சிரமத்தைக் குறைப்பதுமான கணனிக்கான மென்பொருள் ஒன்றையும் ஒலிவாங்கி, ஒலிப்பதிவு கருவியையும் வேண்டி நின்றேன்.

அதுமட்டுமா, பல்கலைக் கழகம் போய்விட்டால் எனது புத்தகங்களைக்காவுதல், புத்தகங்களை வெளியே எடுத்துத் தருதல், உணவை உண்பதற்கு உதவிசெய்தல், எனது சுகாதாரத் தேவையை நிவர்த்தி செய்தல், மேலும் எனது சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு செல்லல் எல்லாவற்றுக்கும் கூட உதவியாள் அமர்த்த பணம் ஒதுக்கப் பட்டுள்ளதாம் எனவும் அறிந்தேன்.

எனது மின் சக்கர நாற்காலி வெளியே எடுத்துச் செல்ல அனுமதி எனக்கு இருக்கவில்லை ஏனென்றால் அப்போது தரபப்பட்ட நாற்காலியின் வலிமை வெளியில் கொண்டு போக போதுமானதல்ல என்பது அவர்கள் வாக்கு. அதற்கேற்ற சக்கரநாற்காலிக்கு விண்ணப்பித்தாலும் ஏற்கெனவே மூன்று வருடங்கள் காத்திருப்பவர்களும் உள்ளார்களாமே.

அது ஒருபுறமிருக்க சுகாதாரத் தேவையை நிவர்த்திசெய்வதாயின் அதற்கு என்னை இடம் மாற்ற 'ஹொய்ஸ்ட்' எனப்படும் ஓர் உபகரணம் தாங்கள் கொள்வனவு செய்யவும் தயாராக இருந்தர்கள். பத்து வருடங்களின் பின் தங்களுக்கு இந்தத் தேவை ஏற்பட்டதாகவும் அதற்கு எனது பக்க பிறன்ற் மாநகரசபை உதவும் என்றும் கூறினார்கள்.

இவற்றையெல்லாம் இலவசமாக வழங்கி எங்கோ பிறந்து வளர்ந்த என்னை இந்த அளவுக்கு கவனிக்கும் இந்த நாட்டுக்கு நான் நிறையவே கடமைப் பட்டிருக்கிறேன்.

அதனால் தான் கடந்த வருடம் யூலை மாதம் முதல் தொண்டராக கணனி பயிற்றுவிப்பவராகவும், அடுத்து இணையத்தள அமைப்பாளராகவும் பணியாற்றுகிறேன். அதன் நிறைவு அனுபவித்துப் புரிய வேண்டியது.



அதுமட்டுமல்ல என்னைப் போல் உடலால் பாதிக்கப்படவர்களுக்காக நடாத்தப்படும் நிறுவனங்களில் பணிபுரிய எனக்கு மிகவும் விருப்பம். பட்ட அனுபவங்கள், வலிகள் தேவைகள் எல்லாம் எனக்கு தெரிய வந்திருக்கின்றன. என்னை வளர்ச்சியின் இடைநிலையில் இந்தநிலைக்கு என்னை ஆக்கிய இறைவன் சித்தம் அது தானோ ஆரறிவார்?

காலப்போக்கில் தான் ஒருவிடயம் புரிந்தது, யாதெனில் நான் கணனித் துறையில் பட்டம் பெறுவதற்குப் பதிலாக வேறு கணனியைப் பயன்படுத்தி வேறு துறையைக் கற்றிருக்கலாம் என்பது.

ஏனெனில் கணனி சம்பந்தமான ஒருதுறையில் பட்டம் பெறுவதாயின் அதன் மென்பொருள் சம்பந்தமான கல்விக்கு 'புரோகிராம்' எனப்படும் ஒரு பகுதியைச் செய்வதற்கு நிறையவே கணனியில் பதிவு செய்து பரிசீலிக்க வேண்டும். அதை மற்றவர்களிடம் சொல்லிச் செய்வித்தல் என்பது பகற்கனவு.

# அங்கம் - 16

'நேர்ஸிங் ஹோம்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பராமரிப்பு நிலையத்தில் இருந்து பல்கலைக்கழகம் பட்டம் பெறப் போய்ப் பயிலும் முதல் நபர் நானாகத் தானிருப்பேன் என்று அந்த நிலையத்து முகாமையாளர் கூறிப் பெருமைப்படுமளவுக்கு ஒரு சிரமமான சூழலில் நானிருந்தேன்.

ஏற்கெனவே குளிக்க அனுமதிக்கப் படாமல் தீபம் தொலைக்காட்சிச் செவ்விக்குப் போன அனுபவம் தந்த பாடம் காரணமாக தினமும் நான் குளித்து விட்டே பல்கலைக் கழகம் புகவேண்டும், அதற்கு ஆணை பிறப்பிக்கும் படி முகாமையாளரிடம் கேட்டுக்கொண்டேன். அது செயலானது.

முன்னரே குறிப்பிட்டது போல் ஏற்கெனவே என் 'இயலாமையைச் சமாளிப்பது எப்படி' என்பதை ஒரு பாடமாகவும் மனதில் எடுத்தால் தான் என் கல்வியைக் கற்க என்னால் முடியும் என்பதை முற்றாக உணர்ந்திருந்தேன்.

நான் உள்ள நிலையத்திலோ எந்தவோர் உதவிக்கும் அழைப்பு மணி அழுத்தி அவர்கள் தங்கள் வசதிக்கேற்பவும் மனநீதிக்கு ஏற்பவும் வந்து ஒருமனதாகவோ, மனமில்லாமலோ அல்லது முழுதாகவோ பகுதியாகவோ செய்து தருவார்கள்.



என்னை ஏற்றிச் செல்ல சிற்றூந்தொன்று ஒழுங்கானது பல்கலைக் கழகத்தில் என் போன்றவர்களுக்கு உதவி செய்வதெற்கென உள்ள அமைப்பினால். பல்கலைக் கழகத்திற்குப் போனதும் வாசல்வரை வந்து அழைத்துப் போனார் வசதிகள் பற்றிப் பேசு ம் பெண்மணி. இதமாக இருந்தது மனதுக்கு.

உதவிக்கு என ஒரு முகவர்கள் முலம் ஆயத்தப் படுத்தப் பட்ட பெண் வந்தாள். பயம் விலகி கொஞ்சம் நம்பிக்கை என்மனதுள் உட்புகுந்தது. மிக முக்கியமாக வெளித் தொடர்பு பல விதத்திலும் என்னை மகிழ்வித்தது. மக்கள் தொடர்பு, புதிய காட்சிகளுடனான வெளித் தோற்றங்கள் எல்லாமே பிடித்துக் கொண்டது.

நான் அடிக்கடி பொருமுவேன், இல்லை பொறாமைப் படுவேன் இந்த முண்டாசுக் கவிஞன் பாரதியாரையும் கவியரசர் வைரமுத்துவையும் நினைத்து.

ஏன் தெரியுமா.. இந்த மீசைக் கவிஞன் இந்த இயற்கை எல்லாவற்றையும் எப்படியெல்லாம் பருகியிருப்பான். குவியரசர் வைரமுத்து தான் நினைத்த மாத்திரத்தில் அமைதி தேடி தனக்கு இட்டமான தங்கும் விடுதி தேடி கவிவடிப்பாரே

அந்த அளவுக்கு இயற்கை, அமைதியான வாழ்வு என்பன என் கவியுள்ளத்துக்குத் தேவைப்படும். எனக்கும் கீழே உள்ளவர் கோடியாச்சே.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை படிப்பை நான் காதலித்தேன் என்றால் மகையில்லை. அந்த அளவுக்கு ஆழ்ந்த அக்கறை எடுத்தேன் இந்நிலை அடைவதற்கு. அதற்கான காரணங்கள் பல. சிலவற்றை நான் பேசாமலிருப்பது தான் எனக்கு அழகு. ஆனால் அந்தக் காரணங்களுக்குக் காரணமானவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

காலையில் எழுந்து அம்மா அதிகாலையில் எழுந்தே ஆக்கிய உணவை அதுவும் சோறு கறிகள் ஆக்கி அவசர அவசரமாகக் கொண்டுவர நாளுக்கொரு உடை அணிந்து அம்மா அப்பா மனங்குளிர அவர்கள் கடைக்குட்டி பள்ளி போனது இனிய அனுபவமன்றோ!
சீமைக்கு அரசன் ஆனாலும் தாய்க்கு மகன் தானே! அதுபோல் என் பெற்றோர்க்கு கடைக்குட்டி நான் தானே என்ற பெருமையில் அகமகிழ்ந்து போனேன்.

மற்றவர்கள் தயவில் வாழ்வது சிரமந் தானான போதும் பாடங்கள் கணனி, கணிதம் சம்பந்தமானவை என்பதால் மிகவும் உவகையடைந்தேன். விந்தை என்னவென்றால் எனது வகுப்பில் நான் மட்டுமே பெண், மீதி எல்லோருமே ஆண்கள்

என்ன தானான போதும் நேரங்கடந்து உதவிப்பெண் வருவதும் தகுந்த நேரத்தில் சுகாதாரத் தேவைகள் பூர்த்தி செய்ய முடியாமல் அவலப் படுவதும் கூட இருக்கத் தான் செய்தன.

எனது கணித ஆசிரியர் பற்றிக் கூறியே நான் நகர வேண்டியவளானேன். வயது முதிர்ந்த வெள்ளைக்கார மனிதர் அவசர அவசரமாக எழுதுவதும் நான் அடிக்கடி அதைச்சுட்டிக் காட்டுவதும் வழக்கமாயின.



அவரிடம் நான் ஒருநாள் என் ஐயம் பற்றித் தெரிவிக்க அவர் என்னுடன் பேசு முன்பாக வெண்பலகையை சரிபார்த்துவிட்டு என்னுடன் பேசமுற்பட்டது இனிய நினைவுகள். அந்த அளவுக்கு அடியேன் கொடுத்தேன் தொந்தரவுகள்.

கல்வியை நான் இரண்டு விதமாக நோக்கினேன். மாணவியாகவும் ஆசிரியையாகவும் அணுகினேன். எவ்வளவு தான் நான் பிரியப் பட்டாலும் வாழ்க்கை படிக்கத் தேவையான உபகரணங்களை தகுந்த நேரத்தில் கைகளில் எடுத்துத் தர உதவியில்லாமல் பலதடவைகள் மனம் வெந்ததுமுண்டு.

முதலாம் தவணை இலகுவாகக் கடந்தது. அடுத்த தவணை நானே போக்குவரத்தை ஒழுங்கு செய்யப் பணிக்கப் பட்டேன். காரணம் போனதவணை எனக்கென ஒதுக்கிய பணத்தில் கூடிய விகிதம் செலவாகிவிட்டதாம்.

நான் ஒழுங்கு செய்யும் மகிழுந்தோ தினமும் தொலைபேசிமூலம் போகும், வரும் நேரத்தைத் தெரிவித்து ஒழுங்கு பண்ணினால் நேரத்துக்கொரு சாரதியுடன் மகிழுந்து வந்து ஏற்றிப்போகும். பாதுகாப்பு பற்றிக் கவலைப் படத்தேவையில்லையாயினும் பயணத்துக்கு ஏற்ப பணமுமதிகமாகும்.

அதைச் சரியாகக் கணக்குக் காட்டும் பொறுப்பும் வேறு. அதே நேரம் முப்பது நிமிடங்களுக்கு மேலாகப் பயணம் செய்ய வேண்டிய தூரத்தில் என் பல்கலைக்கழகம் இருந்ததால் மகிழுந்தில் ஏறும்வரை நிச்சயம் இல்லாத பலநாட்கள்.

நாட்கள் சவாலான போதும் என்னோராண்டு பல்கலைக் கழக வாழ்வு நிறைவானது. மே மாதம் பதினான்கில் பரீட்சை முடிந்து பெறுபேறு வருமுன்னரே இந்தியாவுக்கு உல்லாசப் பயணம் போனோம் அந்த வருடம் யூன் நான்கில்.

# அங்கம் - 17

இணையத்து நண்பர்களை வாழ்வில் ஒரு தடவையாவது சந்தித்து விடவேண்டும் என்ற தாளாத ஆர்வம் காரணமாக, அதேநேரம் அங்குள்ள எனது நண்பர்கள் என்னை எப்படியும் கைவிட மாட்டார்கள் என்ற அசராத நம்பிக்கையின் மேலீட்டாலும் இந்தியா பயணிக்க வேண்டுமென்று விரும்பினேன்.

நான் அப்பாவிடம் விளையாட்டு விளையாட்டாக 'அப்பா நான் இந்தியா போறன்' என்று கூறிவந்து இறுதியில் வினையாகவே 'அப்பா, நான் சொன்னது போல உண்மையாவே இந்தியா போகத்தான் போறன் தான். அதுக்கு உங்கட சம்மதம் தேவையப்பா' என்று நான் தெரிவித்தேன். ஆம் என்று அப்பா சம்மதிக்கா விடினும் போகாதே என்று மறுப்பும் தெரிவிக்கவில்லை.

அது மட்டுமல்ல. ஒருநாள் ஒரு காகிதச்சுருளை என்னிடம் கொணர்ந்து நீட்டினார். அதைப்பிரித்துப் பார்த்தால் உள்ளே இருந்தது ஐந்நூறு பிரித்தானிய ஸ்ரேளிங் பவுண்கள்.

அப்பாவுக்கு எங்கள் நால்வரில் என்னை மிகவும் பிடிக்கும். நான் கடைக்குட்டி என்பது காரணமாகவோ அல்லது அவருக்குப் பிடித்தமான விதத்தில் நான் வாழ்வது காரணமாகவோ இருக்கலாம். அதாவது பொழுதைப் பயனுடன் கழிக்க வேண்டுமென்ற கொள்கையுள்ளவர் அவர்.

அது மட்டுமல்ல என்னில் பெரிய நம்பிக்கை கூட இருந்தது அவருக்கு. நான் எனது விருப்பங்களை நிறைவேற்றித் தானிருக்கிறேன். ஆனால் பொறுத்திருந்து சாதித்து இருக்கிறேன் என்று கூறலாமோ என்ற கேள்வி என்னுள் இப்போதும்.

நானாகவே என்னிடம் பணம் உள்ள போது அவர் கேட்காமலே கொடுத்திருக்கிறேன் அப்பாவின் தேவையறிந்து. அதுமட்டுமல்ல 'தன்பிள்ளை எங்கு பணத்துக்குப் போவாள் இப்பெரிய தொகைக்கு?' என்று சிந்தித்திருப்பார் தானே!

மே பதினான்கில் பரீட்சை முடிந்து கிடைத்த அந்த இருவாரங்களுக்குள் இந்திய தூதாதரகம் போனதும் விசா எனப்படுகின்ற வேறு நாட்டில் தங்கும் அனுமதி எடுத்ததுவும்

கிடைத்த விமான நுழைவு சீட்டைக் கொள்வனவு செய்ததுவும் அவசர அவசரமாக இந்நாட்டு நாளாந்த நடவடிக்கைகளை வீடியோ புகைப்படக் கருவியில் படம் பிடித்ததுவும்

அதே அவசரத்துடன எனது நண்பர்களுக்கு ஒருவர் விடாமல் அன்பளிப்பு வாங்கியதுவும் இந்தியா நோக்கி அம்மா சகிதம் யூன் நான்கு 2003 இல் இந்தியா நோக்கிப் பயணமானதுவும் உண்மை.

இவ்வாறாக இந்தியா போன நாம் பட்ட அனுபவங்களை 'நிலாவின் இந்திய உலா' என்ற தொடரில் நான் எழுத முற்பட்டு முடிக்காத நிலையில் உள்ளது. அதை 'எழுத எழுத' என்ற இந்தத் தொடரைத் தொடர்ந்து உங்கள் ரசனைக்குத் தர இருக்கிறேன்.

அங்கு போய் பயணித்த வேளை நாம் பயணஞ் செய்த மகிழுந்து சாலைவிபத்துக்கு உள்ளானதுவும் அதை அப்பாவுக்கு எப்படித் தெரிவிப்போம் என்று மனம் புழுங்கியதுவும் அம்மாவையும் சக்கரநாற்காலி பாவிக்கும் ஒருவராகவே அம்மாவை அழைத்து வந்ததுவும் நடந்தவை.

யூலை பதினைந்தில் பயணஞ் செய்ய முடியாமல் ஆகஸ்ட் இருபதாம் திகதி அதுவும் கிட்டத்தட்ட ஆயிரம் பவுண்கள் மேலும் செலவு செய்து நேரடி விமான நுழைவுச் சீட்டு வாங்கி இங்கிலாந்து பயணமானதுவும் நாம் எதிர்பாரத்தது போலல்லாமல் கரிசனத்துடன் அப்பா எமைப் பராமரித்ததுவும் எம்முன்னே கடந்தவை.

அதுமட்டுமா அம்மாவோ தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில். ஏற்கெனவே தன்னைச் சுமக்க முடியாத நிலையில் உள்ள அப்பா, அம்மாவைப் பராமரித்தது மட்டுமல்லாமல் தனது சக்திக்கமைய எனக்கும் ஆகாரம் செய்து கொணர்நது தந்தார்.

அப்படி ஆதரவு காட்டிய அப்பா திடீரென இடது கையையும் காலையும் ஆட்ட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார். பேசவும் சிரமப்பட்டார்.

எனினும் வைத்தியசாலை செல்ல மறுத்து விட்டார். ஒருவாறு அவரைச் சமாளித்து அருகிலுள்ள வைத்தியசாலையில் செப்ரெம்பர் எட்டாம் திகதி அவரை அனுமதித்ததுவும்

நீராகாரம் மட்டும் கொடுக்கலாம் என்றதும் பகீரென்றது.

நேர்ர்வேயிலிருந்து அண்ணாவும் அவரது மகள் மது'ரவும் வந்தார்கள். அம்மாவைச் சக்கர நாற்காலியில் அழைத்துத் தான் போய் அப்பாவைப் பார்வையிட வேண்டிய சூழல்.

அடுத்த திங்கட் கிழமை இரண்டாம் பல்கலைக்கழக வருடம் வேறு ஆரம்பமாகிறது. அதுவும் புதுக்கிளையில். மேலும்

துன்பங்கள் வரும்போது தொடர்ந்து வருமென்பதை நான் அனுபவத்தில் கண்டேன். பிரச்சனைகளுடன் பிரச்சனையொட்டியெம்மை வேடிக்கை பார்த்தது. சிறிய கோட்டுடன் பெரிய கோட்டை ஒப்பிடும் போது சிறிய கோடு உருச்சிறுத்துத் தெரிகிறது.

மற்றைய வீட்டுப் பிரச்சனைகளுடன் ஒப்பிடும் போடு பல்கலைக் கழகப் பிரச்சனைகள் சிறிதானது. இன்னும் இரண்டே வாரங்களில் அதாவது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மூன்று கிழமைகளில் எனது அப்பா உலகத்தை விட்டுப் போய்விட்டார்.

லண்டன் தமிழ் வானொலியில் இந்த அங்கம் ஒலிபரப்பாகும் தினமான இன்று அப்பாவின் மூன்றாண்டுத் திதியாகையால், அவருக்காக எழுதி அவரது அந்தியேட்டியில் நானே தொகுத்து வெளியான நினைவுமலரின் கடைக்குட்டியின் கவலைக் கண்ணீர்! என்ற எனது விம்மலின் ஒருபகுதியை உங்களிடம் பகிர்வதில் ஆறதல் கொள்கிறேன்.

கடைக்குட்டியின் கவலைக் கண்ணீர்!

அப்பா!

என் நினைவுச்சிறகு நீங்கள் என்னைச் சுமந்து மகிழ்ந்த காலத்தை நோக்கிப் பறக்கிறது! உங்கள் கடைக்குட்டி வதனியை 'குட்டி! குட்டி! என்றழைப்பது

பேச்சுப் போட்டிகளில் என்னைப் பேசவைப்பது,

நான் விளையாடப் போய் நேரஞ்செல்ல வந்தால் எமைக் காத்திருந்து கண்டிப்பது,

நள்ளிரவில் நித்திரையிலாழ்ந்தவென்னை நித்திரையுடனே தூக்கிவந்து உங்கள்
சித்திரமொன்றை பார்க்கவைத்ததுவும்

ஞாயிற்றுக்கிழமைகளில் சேர்ந்திருந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகள் (சக்கரைப்பந்தல்,
தணியாத தாகம்) இரசிப்பதுவும் எத்துணை இனிமை தரும் நினைவுகள்!

காலம் தன் கொடுமையை என்மீது விரித்தது எமக்குத் தெரியாமல் காலம் புகட்டிய போது, நீங்கள் உங்களுக்குள்ளேயே விறைத்துப் போனது,

'நீ இயலாத பிள்ளை, படித்திருக்க வேணும்' எனை ஊக்குவித்ததுவும்,
நான் படிக்க உட்கார்ந்தால் 'போதும் படித்தது' என்பது,

வைத்தியம், வைத்தியம் என படிப்படிகளாக ஏறியதுவும், பணம் பணமாக இறைத்ததுவும்

இத்தனைக்குள்ளும் என்னைப் வேம்படி மகளிர் கல்லூரியில் படிப்பித்ததுவும்

என்னை எப்படியும் சுகப்படுத்தி விடவேண்டும் என்றதும் காரணமாக
வெளிநாடு புறப்பட்டதுவும் கடிதங்கள் கடிதங்களாக எழுதி எந்நோய் பற்றி
ஆராய்ந்து அலுத்துப் போனதுவும், சலிக்காது இந்தியா ஈறாக
வைத்தியத்துக்கு அனுப்பிவைத்தது தவறாது இருவாரத்துக்கு
ஒருமுறையாவது மடல் எழுதியணைப்பதுவும் நீங்கள் ஒரு நல்ல தந்தையென்று கூ றுகள்.

நான் பதினைந்து வருடங்கழித்து இலண்டன் வந்த போது 'எனக்கு அந்த சின்னப்பிள்ளை தான் வேண்டும்' என்றதுவும்

அம்மா இலண்டன் வரும்வரை, மூன்றரை வருடங்கள் தினமும் சோறு கறி ஆக்கிவந்து இரு பேரூந்துகள் பிடித்துவந்து, காத்திருந்து கெஞ்சிக் கூட என்னையுண்ணவைப்பதுவும்

நோய்வாய்ப்பட இருவாரங்கள் முன்பாக இந்தியா சென்று விபத்துக்குள்ளான அம்மாவையும், என்னையும் ஆக்கித்தந்து ஆதரவு காட்டியதுவும், அப்பா! மறக்கத்தான் முடியுமா?

ஏன்! இந்தியா போக முழுச்சம்மதம் தந்து ஒரு பெருந்தொகையுமல்லவா தந்து விட்டிருந்தீர்கள்!

அந்த ஆதரவுக்கு, இறுமாப்புக்கு நான் எங்கு போவேன்.

நீங்கள் போனதும் என் பாதி பலமே போய்விட்டது போலுணர்கிறேன் அப்பா!

இதன் தொடர்ச்சி பின்னர் வரும் சந்தர்ப்பத்தில் தொடரும்.

# அங்கம் - 18

மீண்டும் உங்களைச் சற்று பின் நோக்கி அழைத்துப் போகிறேன்.

அப்பாவோ வைத்தியசாலையில் அனுமதியாகி உள்ளார். எனது இரண்டாவது பல்கலைக் கழக வருடம் இன்னும் ஒரு கிழமையில் ஆரம்பமாக இருக்கிறது.

என்ன செய்யலாம்? எப்படியும் தொடங்கிய எனது படிப்பை முடித்தாக வேண்டும் என்பதில் தெளிவாக, அதேநேரம் உறுதியாக இருந்தேன்.

மேலும் அப்பாவின் நிலையும் அந்தளவுக்கு பெரியதாகத் தெரியவில்லை அப்போது. வைத்தியர்கள் கூட தங்கள் அனுமானங்களை அப்படியும் இப்படியுமாக இழுத்துப் கூறியது எங்களுக்குப் புரியவில்லை.

குடும்பத்தவரின் உடல்நலம் குன்றும் போது அதைமுழுதாக ஒப்புக்கொள்ளும் மனநிலை எமக்கு வருவதில்லை.

செப்ரெம்பர் எட்டாம் திகதி அப்ப வைத்தியசாலையில் அனுமதியாகினார். அண்ணாவுடன் போய் எனது இரண்டாவது வருடப் படிப்புக்கும் என்னைப் பதிவு செய்து வந்து விட்டேன்.

செப்ரெம்பர் பதினைந்தாம் திகதி புதிய ஆண்டு, புதிய கிளையில் ஆரம்பமானதால் அங்கு பிரச்சனைகளுக்குக் குறைவிருக்கவில்லை. சில இடங்களில் லிப்ட் எனப்படும் பாரந்தூக்கி இருக்கவில்லை ஆதலால் தான் இந்த வினை.

அங்கு எனது விரிவுரைகள் நடந்தன. ஏற்கெனவே பன்னிரண்டு வாரங்களில் பதினொரு வாரங்கள் தான் விரிவுரை கொடுக்கப்படும். அந்த விரிவுரைகளை இழப்பதென்றால்?

முறைப்பாடு ஏற்பவர்கள் எங்கிருக்கிறார்கள்? அவரகள் என்னைச் சந்திக்க எப்போது முற்படுவார்கள் என்று நான்பட்ட துன்பங்கள்! அப்பப்பா! சொல்லிலடங்கா!

எதை நினைத்து கவலைப்படுவது? உறுதியோடு பிரச்சனைகளை அணுகினேன். நம்பிக்கை நசுங்கிப் பாடுபட்டது. ஏற்கெனவே துன்பந்தரும் சக்கர நாற்காலி. அத்துடன் குளிர் தரும் கொடும் அனுபவங்கள்!

பராமரிப்பாளர் வராதவிடத்து போட்டுவிட்ட குளிருடையைக் கழற்றிவிடக் கூட உதவிபெற முடியாத கொ ரங்கள்! கட்டடத்துக்குள் குளிருடையுடன் இருப்பது என்றால் மிகவும் அசௌகரியமாக இருக்கும்.

இவற்றையெல்லாம் அசட்டை பண்ணாமல் என்முன்னாலேயே நழுவிப் போகும் பொன்னான பல்கலைக்கழக நாட்கள். எனது கனவுப் பொறகலசம் உடைந்து சிதற நான் அனுமதிக்கலாமா? துடித்து வெதும்பினேன்.

மின்நாற்காலியில் போனால் வைத்தியசாலைக்கு அதன் சக்தி தீர்ந்து இடையிலேயே நின்று விட்டால் இந்த விடயமே செய்தியாகப் பேசப்படலாம். அதை ஒப்பாத என்மனம். ஆதலால் அப்பாவைப் போய் பார்வையிடாமல் என் வசிப்பிடம் வந்து விட்டேன்.

நான் பார்க்கப் போகும் வேளைகளில் அவர்மகள் நினைத்து அப்பா முகம் வாடுவதும் அந்த மனநிலையைக் கோபம் போல் வெளிப்படுத்துவதும் நடந்தவை.

இரவு பன்னிரண்டு மணியளவில் தொலைபேசி ஒலித்ததும் புரிந்து கொண்டேன். அப்பா தன் இறுதிமூச்சை இழக்கும் நிலையில் உள்ளதாகக் கூறினாள் அந்த மருத்துவ மனைத்தாதி.

என்னையும் என் அப்பாவின் உயிர்பிரிந்த உடலை உடனே பார்க்க அழைத்துப் போயினர். புன்சிரிப்பு தவழ எங்கள் பொக்கி'ம் கண்மூடி இருந்தாலும் உடலின் கணகணப்பு அப்படியே இருந்தது.

இன்றும் எனக்கு என் அப்பாவை இறுதியாகத் தொட்டுப் பார்க்கக் கிடைத்ததனால் ஒரு பெரிய நிறைவு. வந்தவரெலாம் இருந்து விடவரவில்லை தான். ஆனால் அவர்களுடன் வாழ்ந்த பொழுதுகள் தான் மிக முக்கியமானவை.

அப்பாவின் நினைவுமலரை நானே ஆக்கி முடித்தேன். அவரது வாழ்வு பற்றியும் நானே எழுதுவது பெரும் பேறாக உணர்ந்தேன்.

என் அப்பாவுக்கு ஒருகோப்பை தேநீர் கூட கொடுத்தவளில்லை இந்த சின்ன மகள். இந்தப் புத்தகத்தைக் கூட ஆக்கவில்லை என்றால் வேறெதைச் செய்ய முடியும் என்னால்.

எனக்காக இருக்கிறது ஒரு பெருங்கடமை. இறுதியாக அதை நானும் நிறைவேற்றினேன். அந்த நினைவு மலரில் அமைந்த என் கண்ணீரின் ஒருபகுதி உங்களுக்காக.

நீங்கள் போனதும் என் பாதி பலமே போய்விட்டது போலுணர்கிறேன்

கடந்த அங்கத்தில் இடம் பெற்றதன் தொடர்ச்சி இது.

அப்பா!

உங்கள் சின்னமகள் வதனியைப் புலம்பவிட்டு நீங்கள் வானுலகம் போனது என்னவிதத்தில் நியாயம்? அப்பா. உங்கள் செல்லமல்லவோ நான்.

அப்பா நான் வருத்தக்காரியென ஆகுமுன்பே உங்கள் மிகநேசத்துக்குரிய குழந்தை தானே!

இத்தனை வயதாகியும் ஆறுவயதுக்குழந்தையைக் கண்காணிப்பது போல் காத்து வந்தீர்களே! எனைக்கண்டதும் உள்ளவரை உச்சிமோந்து மெய்மறந்து போவீர்களே!

எங்குபோனாலும் 'அப்பா தேடுவார், துடித்துப்போவார்' என்று துடிக்கும் இதயம் இன்றும் துடிக்கிறது அதே வேகத்துடன்.

ஆனால் நீங்களில்லை எனக்காகக் கவலைப்பட!!

ஒரு நளினம், ஒருவித கர்வம் கொண்ட உங்கள் செய்கைகளை நான் எங்குபோய் இரசிப்பேன்? 'நடப்பு' என்று நீங்கள் சிரித்தபடியே கூறும் அந்த ஷபாவம்ஷ கலந்த செய்கையை எப்படி நான் அடிக்கடி எண்ணாமல் இருக்க முடியும்?

நான் எந்தவொரு கலைப்படைப்பு செய்யும் போதும் அப்பா ஷஇப்படி விமர்சிப்பார்ஷ, ஷஇப்படி செய்தால் தான் அப்பாவுக்குப் பிடிக்கும்ஷ என என்

மனம் சொல்லும். ஏன், உடைகளைப் பற்றியோ அல்லது சிகையமைப்பைப் பற்றியோ நீங்கள் கூறும் விமர்சனங்களெத்தனை!

என் முதல் விமர்சகனல்லவோ நீங்கள்!

நான் எழுதும் கவிதைகள் உங்கள் அறைச்சுவரின் ஒட்டிகளாகி விடுமே!

அந்த பரிவு, அந்த அக்கறை காட்ட யாரால் தான் முடியும்? உங்களது கவிதைகளை புத்தகமாக்க விரும்பினேன். நீங்களோ "உனதும் எனதும் தான் சேர்ந்து வரவேண்டும்" என்றீர்கள். நானும் சம்மதித்து உங்களதும் எனதும் கவிதைகள் ஒன்றாக 'எந்தையும் யானும்' என்ற பெயரில் பிரசுரிக்க இருந்த எங்கள் திட்டத்தை, காலனன்றோ கலைத்துவிட்டான் அப்பா!

இந்தமகள் அப்பாவின் ஆசீர்வாதத்துடன் அதை நிறைவேற்றுவேன் அப்பா!

அப்பா என் ஒவ்வொரு முன்னேற்றத்தையும் சிரித்து பெருமிதத்துடன் உற்சாகப்படுத்தும் அந்த அன்புக்கடலை நான் எங்குதான் காண்பேன்?
அப்பா நீங்கள் தான் என் மானசிக குரு!

அதனால் தானின்று நானிந்தளவு நன்னிலையிலிருப்பது!

உங்களுக்காகவும் அம்மாவுக்காகவும் தான் நான் இந்தவயதிலும் பல்கலைக்கழகம் புகுந்ததுவும் படிப்பதுவும். நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது நீங்கள் கண்ட கனவல்லவா அது?

இல்லாவிடில் உங்களை இறுதியாத்திரை அனுப்பி இரண்டே நாட்களில் நான் என்படிப்பில் இறங்கியிருக்க மாட்டேனேயப்பா!

இன்னும் இரண்டு ஆண்டுகளாவது உயிரோடிருக்க வேண்டும் என்பீர்களே! எமன் அழைத்தானே!

வைத்தியசாலையில் நானுங்களை இறுதியாகப் பார்வையிடவந்த போதும் 'நீ சிரமப்பட வேண்டுமா?' என்ற உங்கள் ஆதங்கம், எனைக்கண்டதும் கவலைதொக்கும் உங்கள் வதனம் யாவும் இதயச்சுவரை அப்பிக் கொண்டுள்ளது அப்பா!

உங்கள் சின்னமகள் உடலளவில் பாதிக்கப்பட்டாலும் மனதளவில் நம்பிக்கையூற்றி நீங்களும் அம்மாவும் வளர்த்தீர்களே!

உங்கள் மகள் இந்தவுலகில் பிழைத்துக்கொள்வாள் அப்பா!

உங்கள் வழியிலேயே நான் வாழ்ந்தேன். இனியும் வாழ்வேன் அப்பா!

அதுதான் நான் காட்டிய, காட்டும் அன்புக்கு அர்த்தம் தரும்.

எங்கிருந்தாலும் உங்கள் உள்ளம் எம்மை வழமை போல் வாழ்த்தும்.

உங்களுக்குப்பிள்ளைகளாகப் பிறக்க நாங்கள் நால்வரும் கொடுத்துவைத்தவர்கள் அப்பா!

என்று எழுதியிருந்தேன்.

# அங்கம் - 19

பல்கலைக்கழக வாழ்வில் நான் இரண்டாவது வருடம் பட்ட அனுபவங்கள் எனக்குப் போதிமரம் என்றே நான் கூறுவேன்.

முன்பே குறிப்பிட்டபடி அப்பாவின் இறுதிச்சடங்கு முடித்து இரண்டாம் நாளே விரிவுரையை மேலும் இழக்க முடியாத சூழலில் பலைகலைக்கழகம் போனேன். போயுமென்ன, விரிவுரை நடந்து கொண்டிருக்கும் வேளை தலையின் பின்புறம் ஒரே இருட்டாக இருப்பது போன்ற உணர்வு.

அதேநேரம் குறிப்பிட்ட கிழமைகளில் கோர்ஸ்வேர்க் என ஆங்கிலத்தில் சொல்லப்படும் பாடவேலையைச் சமர்ப்பித்தே ஆகவேண்டிய முக்கிய பணியின் அழுத்தம் ஒருபுறம். அதுமட்டுமா, அப்பாவின் அந்தியேட்டிக்கு முன்பாக நினைவுமலரை நானே ஆக்கவேண்டுமென்ற பிடிவாதம் வேறு.

எனது வேலைகளை காலந்தாழ்த்திச் சமர்ப்பிக்க சில விரிவுரையாளர்கள் சம்மதித்திருந்தனர். எப்படியும் விரிவுரைகளுக்கு சமூகமளிக்க வேண்டும். அதேவேளை 'லாப்' எனப்படும் கணனி பற்றிய பயிற்சிகளையும் கவனிக்க வேண்டிய அழுத்தம்.

பாடவேலைகளுக்கும் பரீட்சைகளுக்கும் மிகுந்த தொடர்பு இருக்கும். பாடவேலைகளுடன் போராடும் போது தானாகவே பாடத்தைப் பற்றிய விளக்கம் கிடைத்து விடும். எது எப்படியிருப்பினும் எல்லோரையும் போல் அதேயன்று பரீட்சையில் தோற்றவேண்டுமே.

கணனியில் பதிப்பிக்க முழுதாக இடங்கொடுக்காத என் உடல்நிலை. அதற்கும் உதவியாள் வழங்க அவர்கள் தயாராக இருந்தனர். இருக்கும் ஒரு அறைக்குள் இன்னொருவரை அழைத்து வந்து வேலைவாங்குவது என்பது முள்ளில் மேல் நடப்பது போன்றது.

அவர்கள் உதவி செய்ய வரும்போது அருவிமாதிரி விடயங்கள் வாய்வழி வந்து சிதறுமா? என்ன! விரிவுரையாளரால் கூட அதுமுடியாது என எனது விரிவுரையாளர்களில் ஒருவரான கிறிஸ்ரோபர். கேண்டபேர்க் கூற நான் கேட்டிருக்கிறேன்.

இந்த விரிவுரையாளர் தான் எனது பாடநெறிக்கே பொறுப்பாளர். ஆவர் என் வகுப்புகளை கீழே தரையுடன் உள்ள வகுப்பில் நடாத்த ஒழுங்கு செய்ததோடு என் நிலை குறித்து விளக்கும் மின்னஞ்சல்களை ஒன்று விடாமல் இடைவிடாது எனக்காக இடம்பெறும் கூ ட்டங்களில் குரல் கொடுத்தவர்.

ஆதலால் எப்போது என் பிரச்சனை குறித்து மற்றவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பும் போது இவர்க்கு அனுப்புவது என் வழக்கமானது.

இந்த ஆங்கிலேயர் சங்கீதம் இசைப்பது போல மெல்லிய தொனியில் செய்யும் விரிவுரையானது பலரையும் தூக்கத்திலாழ்த்த வல்லது. என்னையும் தான். ஆவர் மட்டும் அங்கில்லாது இருந்திருந்தால் நான் என் நம்பிக்கையை இழந்திருப்பேனோ என்னவோ. நாம் வணங்கும் தெய்வங்கள் மனித ரூபத்திலும் வருமோ.

இவரைப் போலவே தான் எனக்குக் கிடைத்த சாரதியும் பல்கலைக் கழகக் காலங்களில் மிக ஆதரவாக இருந்தவர். அவரோ அறுபதை அண்மித்த ஜமக்கா நாட்டைச் சேர்ந்த கறுப்பு மனிதர். குடும்ப காத்திருந்து கூட எனைவீடு அழைத்து வரும் அன்புமனம் கொண்டவர்.

எங்கோ பிறந்து எங்கோவளர்நத பலவித வேறுபாடுகள் கொண்ட மனிதர் அன்பாக நடந்து இதம் சேர்த்தாரே. அன்பின் வலிமையே தனி. அன்பு காட்டுபவர்கள் கட்டாயம் காதலர்களாகத் தானிருக்க வேண்டும் என்பதில்லை. எம்மை ஏற்றிச் செல்லும் பேரூந்தின் சாரதி கூட இன்முகத்தவனாக இருந்தால் மனம் இலேசாகிறது.

எத்தனை தடங்கல்கள்! அதே நேரம் அதை முறியடிக்க உதவிகள்! இரவு இரண்டு மூன்று மணிவரை குறைந்த பட்சம் வாரத்தில் ஐந்து நாட்கள் விழித்திருந்து வேலைகள் முடிப்பதும், அந்த நள்ளிரவு நேரத்தில் என்னைப் படுக்கையில் போட உதவிக்கு அழைப்பு மணி அழைப்பதும் சிலர் மிகவும் எரிச்சலை வெளியில் காட்டாமல் முகத்தில் காட்டிப் படுக்கையில் போடுவதும் கடுமையான அனுபவங்கள்! துணிந்தாயிற்று. இனி சாணென்ன? முழமென்ன?

பல்கலைக் கழகத்தில் படிக்கக் கிடைத்த சந்தார்ப்பம் தந்த நிறைவு தந்த சிரமங்கள் பலவற்றையும் எதிர்க்க மிகப்பெரிய மனத்துணிவைத் தந்தது.

இதற்குள் தன்னுடனே வாழ்ந்த தன் துணையை இழந்து தவிக்கும் என்தாயின் கண்ணீர். அவருக்கு ஆறுதல் கூறத்தென்பு இல்லாத போதும் அம்மாவையும் ஆறதல் காட்டும் புதிய பொறுப்பும் எனதானது.

துணையைப் பிரிந்து தன் வசிப்பிடத்தில் தவிக்கும் அம்மா நித்திரையின்றித் தவிப்பார். அதேநேரம் முதுமை. இரவு 12 ஆனாலும் தொலைபேசி அழைத்து என்னுடன் பேசும் படி கூறியிருந்தேன். இருவருமே புலம்பிச் சோர்வோம்.

எத்தனை அழுத்தங்கள். மற்றவர்கள் தயவில் வாழ்வது பலவிதத்தில் எம்மைப் பாதிக்கும். அதேநேரம் மற்றவர்கள் சில நிமிடங்களில் முடிக்கக்கூடிய சுகாதாரத் தேவை கூடக் காத்திருத்தலும் உதவி கிடைத்தாலும் அவர்கள் பயிற்சி இல்லாதவர்களாக இருந்து விடுவதும் உயர் படிப்பு அதுவும் பொறியியல் துறை படிப்பதும் அவ்வளவு சுலபமல்ல.

அதற்கு செலவான நேரம் போக உடற்களைப்பு, உடல் நோயின் பாதிப்பு அத்தோடு புதிதாகச் சேர்ந்து கொள்ளும் உடல் உபாதைகள் இவற்றுடன் குடும்பநிலை, மேலும் சூழல் தரும் சிரமங்கள் என இப்படி எத்தனை அப்பப்பா!

மூன்றாம் தரமாக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டிய தேவை கொண்ட எனது மூக்கு. காரணம் ஒரு வித மென்தசை வளர்ந்த தன் வினை. அதுவும் இங்கிலாந்தில் மூன்று வருடங்கள் காத்திருக்க வைத்து விட்டனர். அங்கு இங்கு அப்போது இப்போது என்று அலைந்தே கழிந்து விட்ட காலம்.

மூக்கில் மென்தசை வளார்ந்ததால் சுவாசிக்க, பேச எல்லாமே தடை. தொலைபேசியில் கேட்கவே வேண்டாம். தினசரி வாழ்வில் கழுத்து என்பதை நெக் என்று ஆங்கிலத்தில் நான் கூற லெக் என்று அதாவது கால் என்று புரிந்து கொள்வர் எனக்கு உதவுபவர்கள் என்றால் பாருங்களேன்.

என் இ.ஸி.கே என ஒவ்வொரு அட்சரமாக ஆங்கிலத்தில் உச்சரித்து சொல்லை ஆக்கி ஒப்புவித்து உதவி பெற்றுக்கொள்ளும் நிலையில் என் மூக்கு.

இந்த நிலையில் எப்படி உரையாடி வாழ்கையை ஒட்டுவது. இருக்கும் உடல் தாளாமை இன்னும் அதிகமானது. என்றாலும் என் அறைச்சுவரில் நானே என்னை அச்சுறுத்திட ஒட்டிலபத்திருக்கும் முயற்ச்சி, பயிற்சி, உயார்ச்சி என்ற

பெரிய எழுத்தில் என்னை எச்சரிக்கும் சுவரொட்டி!

அதே நேரம் அம்மாவுடன் நான் சீவிக்க வேண்டும் என்ற சங்கற்பம் வேறு ஆகவே விரிவுரைக்குப் கொடுத்த முக்கியத்துவத்தை விட அம்மாவுடன் நானும் சேர்ந்து வாழ மாநகரசபை வழங்கச் சித்தமான வீடுகளை எல்லாம் போய்ப் பார்வையிட்டேன். பார்வையிடுவதும் படு அவசரமாக பல்கலைக் கழகம் போதும் பலத்த மன அழுத்தத்துக்குள்ளதும் பழகிப்போனவை.

வீடுவரும் எனக்கு ஒரே ஆறுதல் இணையம் தான். ஆதன் மூலம் என்னை ஊக்குவிக்கும் என் அருமை நண்பர்கள்.

சிலரின் பெயரை நான் கூறி மற்றவர்களை வேதனைப் படுத்த விரும்பவில்லை. துவண்டு போகும் மனதை தினமும் மகிழ்வு என்ற பதார்த்தம் கொண்டு இந்த நிலாவை நிமிர்த்தி வைத்த பெருமை நிலாமுற்றத்து, அன்பு அரண்மனை இணையத்து அரட்டையரங்க நண்பர்களையே சாரும்.

இவற்றினிடையே அப்பா காலமாகி ஏழு மாதங்களில் ஓர் பெரிய வயிற்று சத்திரசிகிச்சைக்கு என்னை உள்ளே அனுப்பி விட்டு நோர்வேயினால் வந்த அண்ணாவின் ஆதரவில் உயிரைச் சுமந்தவென் அம்மா.

எனக்கு மயக்க மருந்து தந்தால் நினைவு வரும்போது இருக்கும் இயக்கம் தடைப்படலாம் என்பது மருத்துவர்கள் எண்ணம். இதனால் அம்மா எப்போதும் மிகவும் கலங்குவார். இது எனக்கு மறுபிறப்போ என்று நிகைக்குமளவுக்கு பாரியது என்றே கூறுவேன்.

# அங்கம் - 20

உங்கள் அனுமதியுடன் உங்களைச் சற்றுப் பின்நோக்கி அழைத்துப் போகிறேன். இரண்டாம் வருடத்தின் இரண்டாவது தவணையும் ஆரம்பமானது. Project எனப்படும் பெயரால் ஒரு பருந்து இந்த நிலாவெனும் கோழிக்குஞ்சைப் பிடித்தது என்றால் மிகையில்லை. அந்தப்பருந்தின் கால்கள் என்னவென்று கேட்கிறீர்களா. என்சக மாணவர்கள் தான்.

மிக வினோதமாக என் அனுமதியில்லாமலே என்னை ஓர் ஆறு பேர் கொண்ட குழுவின் தலைவியாக பேராசிரியர் தெரிவு செய்து விட்டார். அந்த ஆறு பேரும் இளைஞர்கள்.

அவர் செய்தால் என்ன?, இவர் செய்தாலென்ன? என்று சிந்தித்தார்களே அன்றி நான் செய்தாலென்ன என்று தங்களுக்குக் கொடுத்த பகுதியைத் தன்னும், அதுவும் தாங்கள் ஒப்புக் கொண்ட பகுதியைத் தகுந்த நேரத்தில் செய்யப் பின் நின்றனர்.

எனக்கோ என்னை மற்றவர்கள் பொறுப்பில்லாதவள் என்றோ அல்லது ஆவமில்லாதவள் என்றோ நினைக்க நடப்பது எள்ளளவும் பிடிக்காது. என் இயலாமை என்னை, என் இயக்கத்தைத் தடுப்பது வேறு.

ஆனால் இந்தப் படிப்பு நான் தெரிந்தெடுத்த சவால் என்பது தான் உங்களுக்குத் தெரியுமெ. நான் ஒரு முழு இரவு விழித்திருந்து அவர்கள் பகுதியையும் இயன்றளவு செய்து முடித்து எனது பேராசிரியருக்கு மின்னஞ்சலில் அனுப்பி விட்டு மறுநாள் காலை ஒன்பது மணியின் பின் தொலைபேசியில் தெரிவித்தும் விட்டே படுக்கைக்குப் போனேன்.

அவரும் குழுவுக்கென்று கொடுக்காமல் எனக்கென்றே அதற்குரிய புள்ளிகள் தரத் தயாராக இருந்தார். Project என்றால் எமது ஈடுபாட்டை, செயற்பாட்டை படிப்படியாக பேராசிரியருக்கு அத்தாட்சிகளுடன் எமது அர்ப்பணிப்பை அடிக்கடி உறுதிப்படுத்த வேண்டும்.

உடற்களைப்பு போய், செய்து முடித்து விட்டேன் என்ற திருப்தி வந்ததும் என்சக மாணவர்கள் மேலிருந்த ஆத்திரம் குறைந்து இரக்கம் வரத் தொடங்கி

விட்டது. இனி இப்படித் தலைமைப் பொறுப்பு எதுவும் வேண்டாம் என முடிவு செய்தேனன்றி அவர்களுக்கு எதிராக செயற்பட ஒப்பவில்லை என்மனம்.

என்னுடைய முழு ஈடுபாட்டைக் கண்டதும் சகமாணவர்கள் விழித்துக் கொண்டனர். என்னிடம் உதவி கேட்க வெட்கப்படுமளவுக்கு என் முயற்சி!

இவ்வாறான போராட்டங்கள் முடியும் போது நான் மிகவும் நோய்வாய்ப் படுவதுண்டு.

இந்ததவணையிறுதியும் பலத்த இருமலும் பற்றிக் கொண்டது. வேறு தெரிவுகளேதும் இருக்கவில்லையே.

பரீட்சையும் வந்தது. பயமும் சேர்ந்து கொண்டது. சாதாரணமாக ஒவ்வொரு தவணையும் மூன்று பாடங்கள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவது.

ஆனால் எனக்கோ ஆறுபாடங்கள். காரணம் முதற் தவணையில் செய்யாத மூன்று பாடங்களின் பரீட்சையும் வேறு. இப்போது நினைத்தாலும் என் பிடரிக்குள் ஒருவித துன்பம் எனக்கு.

ஏற்கெனவே கல்வி கற்க வேண்டிய வயதைத் தொலைத்த நான். அத்துடன் தாளாமை, தாளாமை தேடித்தந்த சூழ்நிலை. சூழ்நிலையின் அழுத்தங்கள்!

இவற்றுடன் சகவாசிகள் தரும் தொல்லைகள். குறிப்பிட்டே ஆகவேண்டியது, இரண்டாம் அறைவாசி தன் வயிற்றை நிரப்ப மேலும் உணவுகேட்டு போடும் பெரிய கூச்சல்!

காலத்தைப் பாருங்கள்! ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அந்த மனிதர் முன்னைய காலங்களில் உணவகச் சொந்தக்காரன், இன்று தன் உணவுக்ககாக மற்றவர்களை மன்றாடும் காலம் இது.

உடல்நிலை தந்த சோதனை. இவரின் நிலையைப் பார்க்கும் போது இந்த உலக வாழ்வில் ஆரோக்கியம் தொலைந்து துன்பப் படாமல் இருக்கத்தான் என் தந்தை இவ்வுலக வாழ்வை முடித்தாரோ என்னவோ! என்று எண்ணத் தோன்றும்.

நாம் நித்திய வாழ்வில் இயன்றளவு மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் வாழப் பழக வேண்டும். அதுவே நாம் நம் சமுதாயத்துக்குச் செய்யும் பெரும் உதவி.

நாம் மற்றவர்கள் நலனை எண்ணுவதே எமக்கு நலனைத் தருகிறது. மேலும் நல்ல பழக்க வழக்கங்கள் எம்முடல் நிலை தளர்ந்து எப்படியும் அடைந்தே தீரவேண்டிய முதுமை எம்மை அணுகும் போது படும் அவலங்களைத் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம்.

எங்கோ இழுத்துப் போகிறேனா ? வாருங்கள் என் பரிட்சை மண்டபத்துக்கு புரீட்சை செய்வதற்கு மேலதிகநேரம் தருவார்கள் தான் ஏன்?

எழுதித்தரக்கூட ஆட்கள் நியமிப்பார்கள் நான் தான் அதை மறத்துவிட்டேன் எனது பாடங்களோ கணிதம் கணணியுடன் கூடிய தொழில் நுட்பவியல் சார்ந்த பாடங்கள். இன்னொருவரை வைத்து எழுதுவிக்க முடியுமா?

எனது எழுதும் வேகம் குறைவு. அதேநேரம் குனிந்து எழுத முடியாமல் கழுத்தும் வலிக்கும் அதாவது கழுத்து தசையும் இறுக்கும். ஒரு காகிதப்பெட்டியொன்றைப் பெற்று மடியில் வைத்து என் பரீட்சையை எழுதி முடிப்பேன்.

இரண்டு பாடங்கள் தோற்றிய பின் தலைக்குள் இருக்கும் என்மூளை எங்கோ போய்விட்டது போன்ற உணர்வு அந்த அளவிற்கு சக்தி தீர்ந்த நிலை அந்நிலையில் மறுதாள்களை எப்படி எழுதி முடிப்பது?

நான்கு பாடங்கள் தான் தோற்ற முடிந்தது. அதுவும் இரண்டாவது வருடப் பாடங்கள் இன்னும் மூன்றாம் வருடத்து மூன்று பாடங்கள் இணையப் போகின்றன. சுமை மேல் சுமை இதற்குள் என் சத்திர சிகிச்சையும் வேறு என்றாலும் இந்த நிலாவின் ஆயுள் கெட்டிதான் இல்லாவிடில் இந்த எழுத எழுத தொடர்தான் ஏது?

# அங்கம் - 21

வயிற்று சத்திர சிகிச்சை முடிந்து வைத்தியசாலையில் தங்கியிருக்கும் போது அப்பாவின் மறைவும் அம்மாவின் முதிர்ச்சியும் மனதில் வலியை ஏற்படுத்தியது.

என்ன செய்வது? இந்தவுலக வாழ்க்கை ஆளுக்கு ஆள் வேறுபடுகிறதே! அதை மறுக்க எமக்கு என்ன உரிமை இருக்கிறது? அதை இயன்றளவு எமது முயற்சியால் சீர் செய்யப்பார்க்கலாம். அது சரி செய்யப் படுதொ என்னவோ, சரி செய்வதிலேயே வாழ்வு கழிந்து விடும்.

நினைத்ததைவிட சுலபமாக நான் எனது சத்திரசிகிச்சை தந்த உபாதைகளிலிருந்து குணமெய்தினேன். ஆனாலுமென்ன? நாடகள் மட்டும் தன்பணியை செவ்வனே செய்து கொண்டிருந்தது. மூன்றாம் வருடப் படிப்பும் ஆரம்பமானது.

எனக்கும் பிரச்சனைகளுக்கும் ரொம்ப அருகாமை. இந்தத் தவணை கொஞ்சம் பூதாகாரம் என்றே கூறவேண்டும்.

இவ்வளவு நாட்களும் வகுப்புகள் மேலே மாடியில் நடைபெறுவதும் அந்த வகுப்புகளை கீழேயுள்ள வகுப்புகளும் மாற்றுவதுமாகப் பிரச்சனை தீர்க்கப்பட்டது.

இப்போது மேலேயுள்ள கணனிகளுடன் கூடிய ஆய்வுகூடத்தை என்னால் அணுகவே முடியாத இக்கட்டான சூழல்கள். காரணம் அந்த மாடிக்கு லிப்ட் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பாரந்தூக்கி அமைக்கப் பெறவே இல்லை.

ஏற்கெனவே தந்திருக்கும் பாடவேலைகளை பதிவு செய்து ஒப்படைக்க சிரமப்படுமெனக்கு என் நிலை குறித்து மின்னஞ்சல் அனுப்ப முடியுமா? என்ன! என்றாலும் எழுதினேன். சேகரிக்கவும் செய்தேன். சேகரித்ததே ஒரு கோர்ர்ப்பின் அத்தனை கண்ணாடித் தாள்களிலும் போட்டால் அதுவே ஒரு பாடநெறிக்கான பாடவேலை போலிருக்கிறது. இப்போதும் என்கைவசம் இருக்கிறது.

பல தொலைபேசி அழைப்புகள், பல சந்திப்புகள், அழுத்தங்கள் இவற்றின்

பின் பல்கலைக்கழகத்தினர் என்னை நான் படிக்கத் தொடங்கிய பாடநெறியான பொறியியல் துறையை விட்டு வேறு துறையைத் தெரிந்தெடுத்துப் படி என்றனர். மறுத்து விட்டேன்.

என் சகமாணவர்கள் என்னை சக்கர நாற்காலியுடன் தூக்கிப் போகலாமேயென கருத்தைத் தெரிவிக்க உடல் நலம், பாதுகாப்பு என்றெல்லாம் கருதி 'அடித்தேன் பிடித்தேன' என்று அவசர மின்னஞ்சல் இதற்காக மறு கிளையிலிருந்து எமது கிளைக்குப் பறந்து வந்துவிட்டது.

எனக்காகக் காலம் காத்திருக்குமா? என்ன? அது தன்பாட்டுக்கு நகர்ந்து என் பொன்னான பாடநேரங்களை விழுங்கிக் கொண்டிருந்தது ஒருபுறம். வெந்து புழுங்கினேன்.

நான்காவது வாரம் ஒரு அங்கீகரிக்கக் கூடிய தீர்மானத்தை முன்வைத்தனர். அதுவும் அவ்வளவு சிறப்பான தீர்வென்று கூறமுடியாது. ஆனால் அந்த அனுபவம் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்பதை அவர்களின் பிரசாரம் தெரியப்படுத்தியது.

அது என்னவென்றால் எனது பேராசிரியர் வழங்கும் போதனையை நான் கீழேயிருந்தே தொலைக்காட்சி முலம் பார்க்கலாம். கேட்கலாம். அதுவும் அவ்வளவு எளிதான விடயமல்லவே!

எப்படியெல்லாம் கணனி வலையை ஏற்படுத்துவது என்று அவர் பலவித நிறங்கொண்ட மின்சுருள்களான வயர்கள் என ஆங்கிலத்தில் சொல்லப் படுகின்றவற்றை அங்குள்ள கணனி சார்ந்த தொழில்நுட்ப சாதனங்களில் பொருத்தி விளங்க வைப்பார்.

நேருக்கு நேர் படிப்பித்தே முழுதாக விளங்கச் சிரமமான பாடத்தை இப்படி தொலைக்காட்சியில் விளங்க வைத்தால் ஏற்கெனவே கால்வாசிக்கும் மேலாக முடிந்த பாடத்திட்டத்தை நான் எப்படி உள்வாங்குவது? மிகவும் துன்பப்பட்டேன்.
இந்த காலப்பகுதியில் நான் ஏற்கெனவே தொலைபேசியில் பதிவு செய்து வைத்த சேதி கேட்டு விழித்துக் கொண்ட எம் போன்றவர்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய அமைப்பு என்னைத் தொடர்புகொண்டு எனக்காக உதவ முன்வந்தனர்.

அவர்களிடம் பேசி என்நேரம் போக்குவதை விரும்பாத நான் இருந்த வசதிகளைக் கொண்டு என் இலக்கை அடைய முடிவு செய்தேன். இல்லாததை நினைத்து ஏங்குவதை விட இருப்பதை நினைத்து திருப்தி கொள்வது புத்திசாலித்தனம். அல்லவா?

பல போராட்டங்கள், பல நடைமுறைச் சிக்கல்கள். எல்லாவற்றையும் எழுத என்னால் முடியாது. எழுத நினைவிலும் இல்லை. பட்ட துன்பங்களைப் பேசிப்பேசியே வாழ்வின் நல்ல நேரங்களை இழக்கவும் நான் விரும்பவில்லை.

நான் கடந்து வந்த பாதை ரொம்ப முட்கள் நிறைந்தது என்பதை மட்டும் இவ்வளவு மட்டும் நான் பகர்ந்த விடயங்கள் புரிய வைத்திருக்கும் என நம்புகிறேன்.

என் மூன்றாம் வருடத்தின் முதலாம் தவணை நிறைவு பெற இரண்டாம் தவணையும் ஏறக்குறைய ஒரு மாதத்தின் பின் ஆரம்பமானது.

அத்தவணையை ஆர்வத்துடன் எதிர்பார்த்த எனக்கு தொடங்கி இரண்டு கிழமையில் கொப்புளிப்பான் தொற்றிக் கொண்டது.

அதுவும் இந்த குளிர்தேசத்தில், வாழும் பொது பராமரிப்பு நிலையத்தில்! நம் நாட்டிலென்றால் இப்படி இடர்கள் வந்தால் அதை சகஜமாக எடுத்துக் கொள்வார்கள். இங்கு இத்துன்பம் தங்களைத் தொற்றினால் தங்கள் உயிர் கூடப்போய் விடக் கூடும் என்ற பாங்கில் நோக்குவார்கள்.

பத்து நாட்கள் பறந்தது. அம்மாவின் அணைப்பில் வாழ்ந்த எனக்கு இவை எல்லாமே வாழ்வின் புகட்டலென்றே நினைக்கிறேன். அப்பா இருந்தால் இப்படி எல்லாம் எனக்காக அக்கறை காட்டுவாரே என்று மனவருத்தமும் எட்டிப்பாரக்கத் தானே செய்கின்றது.

பல்கலைக் கழகவாழ்வு அப்பா எமைவிட்டுப் போன நாள்முதல் சுமையாகவே ஆனது போன்ற உணர்வு. அதை ஆமோதிப்பது போன்ற எனைச் சுற்றி நடக்கும் சம்பவங்கள். இவற்றுக்கும் மேலாக முத்தாய்ப்பு வைப்பது போன்ற நிகழ்வு நோர்வேயிலிருந்து வந்த அண்ணாவுக்கு கழுத்தில் நடந்த திடீர் சத்திரசிகிச்சை.

கடந்த வருடம் எனது சத்திரசிகிச்சைக்கு வந்து யாழ்நகர் போய் மீண்டனர் அண்ணவும் மகனும் அதைத்தொடர்ந்து லண்டன் வந்த அண்ணியும் மகளும் இங்கே வந்த சோர்ந்துவிடுவதான் இங்கேயே வாழ்வது என அப்படி வாழத் தொடங்கிஆண்டென்று முடியாது நிலையில் இப்படி ஒரு சோதனை.

துன்பங்கள் என்னைத் தாக்குவதை நான் சகிக்கத் தொடங்கி சகாப்தங்கள் ஆசின்றன. என் சகோதரார்களைத் துன்பம் துரத்தாமல் இருக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை. அவார்கள் தானே எனது கொடுப்பனவுகள்.இவர்கள் வாரிவுகள் தானே கலங்கரை விளக்கங்கள் இறைவன் இவார்கள் வளமுடன் காப்பானாக

ஒருவாறு அண்ணாவின் மருத்துவ சோதனைகள் நல்ல பதிலையே தந்தது. மனம் அமைதியானது நான் அம்மாவிடம் கூறி விட்டேன் எதுவும் அசம்பா விதமென்றால் என் பட்டப்படிப்பை மறந்து விடுவதே முடிவு என.

ஆண்டவனுக்கு என் மீது கருணை இருக்கிறது அவனுக்கு என் நன்றிகள்.
ஒருவாறு முன்றாந்தவணைப் பரீட்சையும் நடந்தது. மிக மிக பதட்டத்துடன் முடிந்த அந்த காலங்கள்.
பரீட்சையும் முடிந்தது நான் ஒருவாறு கரையை அடைந்து விட்டேன். மனம் அப்பாடா என்றிருந்தது ஆனாலும் ஒரு அதிருப்தி.

நான் நினைத்தனடி என்னால் என் பங்களிப்பைச் செய்யக் கிடைத்திருந்தால் மேலும் தரமாகச் செய்திருக்கலாமே என என்னவோ என்னவோ ஏதோ இந்த சக்கரநாற்காலிக்கு சொந்தக்காரி அதுவும் இந்த வயதில் இந்தச் சூழலில் வாழ்ந்த யான் நினைத்த இலக்கையடைந்து விட்டேனே என்று மகிழ்ந்தேன்.

இளநிலைப் பட்டதாரி என்ற நிலையை அடைந்து விட்டேன். ஆயினும் என் வீட்டார் யாவரும் அந்த நன்னாளுக்காகக் காத்திருந்தனர். அதாவது தலையில்தொப்பி, கழுத்தில் பட்டி சகிதம் சான்றிதழ் பெறும் விழாவுக்குரிய அந்தநாள்!
அந்த நாளுக்கு இருவாரங்களுக்கு முன்பாக எனது மூக்குக்கான சத்திர சிகிச்சை என இருந்த வேளையில் என்னைப் பராமரிப்பவள் என்னைக் கீழே விழுத்தி விட எனது இடது கண்ணின் மேற்புருவத்தின் எலும்பும் இடது முழங்காலும் நோவு கண்டுவிட அதைப் பராமரிப்பு நிலையத்தினர் அசட்டை பண்ணிவிட அதுவே அமர்க்களமாகி விட்டது.

# நிறைவு அங்கம்

நம்மில் பலர் செய்யும் பிழைகளை ஒத்தக் கொள்ள முன்வருவதில்லை. ஒத்துக் கொள்வோமானால் பல துன்பங்கள் தவிர்க்கப் படும்.

அந்தப் பராமரிப்பு நிலையத்தினர் என்னை கீழேவிழுத்தியும் தெரியாதது போல் நடந்து கொண்டது தான் பெரும் தவறு.

“என் தங்கைக்கு என்ன நடந்தது?” என்று கேட்ட என் அண்ணரை நான் வசித்த ‘இரண்டாம் மாடியில் போய் விசாரி’ என்றிருக்கிறார் அந்த தற்காலிக முகாமையாளர்.

அண்ணா அவர்களை அணுகிய பின்பு தான் அவசர சிகிச்சைக்கு அழைக்கிறார்கள். காலையில் எட்டு மணி விபத்துக்குக் காரணமாக இருந்து விட்டு இரவு ஏழுமணிக்கு அதற்காக நடவடிக்கை எடுப்பவர்கள் மீது கோபம் வராதா! என்ன!

என் குடும்பத்தினர் மிகவும் ஆத்திரப் படத்தொடங்கி மேலிடம் போகுமளவுக்கு இறங்கியதும் மன்னிப்பு இத்யாதி எனவெனை அணுகினர் பராமரிப்பு நிலையத்து ஊழியர்கள். நான் தான் சமாதான நடவடிக்கையில் இறங்க வேண்டியதாயிற்று.

எப்படியெலாம் வீடு, வாசல் என வாழ்ந்த எமக்கு நம் நாட்டு நிலை தேடித் தந்த பயன் இது.

பரீட்சை தொடங்கு முன்பாக ஒருவீட்டை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நான் ஒப்புதலும் மாநகர சபைக்குக் கொடுத்து விட்டேன்.

நான் இதற்கு முதல் சென்று பார்த்த வீடுகள் எதுவுமே எனது தேவைகளுக்குப் பொருத்தம் கொண்டதான அமைப்புக் கொண்டிருக்கவில்லை.

இதற்கான வழிகாட்டலைத் தந்தவர்கள் பிறன்ட் அட்வோகஸி எனப்படும் ஒரு தொண்டரமைப்பின் உதவியுடன் தான் இவற்றைச் செய்தேன்.

உடற்பாதிப்புக்கு உள்ளான அல்லது வயோதிபர்களுக்குக் குரல் கொடுக்கும் இந்த அமைப்பில் இப்போதும் நான் ஒரு உறுப்பினர்.

பட்டவனுக்குத் தானே அதன் வலி தெரியுமல்லவா?

குரல் கொடுக்க வந்தவர்களை ஒரு கட்டத்தில் நான் வாழ்ந்த கட்டடத்துக்குள் நுழையவே கூடாது என கட்டளையிட்டது நான் வாழ்ந்த பராமரிப்பு நிலையத்தின் நிர்வாகம்.

பாருங்கள், எத்தனையோ இடர்கள் இருப்பினும் நான் எம்குடும்பத்தாரை விட்டு வாழ்ந்தது கூட என் பெருந்தாகமான கல்வியைத் தொடரத்தானோ என்றும் சிந்தித்ததுண்டு.

அதைநேரம் கிடைத்த சந்தர்ப்பத்தை உபயோகமாகப் பயன்படுத்தியவன் தானே வாழ்வில் வெற்றிக்கனிகளைப் பறிக்கிறான்.
அதேநேரம் வாழ்வின் நாளாந்த நடைமுறைகள் கூட சிறைப்பட்டநிலை. ஊதாரணத்துக்கு என்னைத் தேடிவருபவர்களைக் கூட 'வாங்கோ, இருந்து சாப்பிட்டு விட்டோ தேநீர் குடிச்சிட்டுப் போங்கோ என்று கூ றமுடியாத வாழ்க்கை.





இங்கிலாந்து என்று வந்து எட்டு வருடங்கள் எப்படித் தானென்னைக் கடந்து போயினதோ!

விதைத்ததை அறுவடை செய்ய இருக்கும் நேரத்திலும் சோதனையா?

புருவத்தில் பட்டது கண்ணில் படாமல் போனதே என்று மகிழ்வடைந்தேன்.

எனது நாசிக்கான சத்திர சிகிச்சை மேலும் பின் போடப் பட்டது. நான் பல்கலைக் கழகம் புகந்து வெளிவந்தாயிற்று. ஆனால் என் சத்திர சிகிசடசை நடந்தபாடில்லை என்பதை நினைத்து வருந்தத் தான் முடியும்.

நம் நாட்டிலுள்ள போது என்னைக் காட்டி ஓரிரு மாதத்திலான சத்திர சிகிச்சை மூன்று வருடங்களாகியும் ஆகவில்லையே!

இப்போது மட்டும் நாட்கள் மிக மெதுவாக நகர்ந்தன. ஏன் தெரியுமா?

வாழ்வில் நான் இந்தநாளும் என்வாழ்வில் வருமென்று எதிர் பார்க்காத நாள் வருகிறதே! அதற்காக!

எதையுடுத்துவது இந்த விழாவுக்குச் செல்லலாமென சிந்தித்தேன். சேலை தான் முதலிடம் பெற்நது. காரணம் எனக்கு மிகவும் பிடித்த உடை சேலை தான்.

ஆசியர்களின் உடலமைப்புக்கு உகந்தது இது என்பது எனது கணிப்பு. அத்துடன் காக்கை குளித்தாலும் அன்னமாகாது! நான் ஆசியப் பெண் என்பதை மறைப்பதும் கடினம். அத்துடன் மறைப்பதில் எதுவித திருப்தியும் வந்து விடப் போவதுமில்லை.

இன்றும் எனது வலதுகை என வர்ணிக்க வல்ல அன்புள்ளம் வந்து சேலையுடுத்தி விட்டாள். ஒரு சக்கரநாற்காலியில் அமர்ந்திருக்கும் ஒருவருக்கு, அதுவும் என்னைப் போல் கால்கை இயக்கம் குன்றியவருக்கு உடுத்துவது என்பது மிகக் கடினம்.

உடுத்திவிட்டாள். வெம்பிளி கொன்விறன்ஸ் மண்டபத்தில் மிக அழகான அந்த வைபவம். முன்பெல்லாம் தொலைக் காட்சியில் பார்த்து மகிழந்த வைபவத்துள் நானும் பங்காளி.

நான் மேடையில் போய் சான்றிதழ் பெற பிரத்தியேக ஒழுங்கு செய்திருந்தனர். அம்மாவும் சின்னண்ணரும் எனது விசேட விருந்தினர்களாக என்னுடனமர்ந்திருக்க நோர்வேயிலிருந்து இதற்கென வருகை தந்திருந்த அக்காவும் பெரிய அண்ணரும் எங்கோ சேய்மையில் அமர்ந்திருந்தனர்.

என் பெயர் திக்கித் திக்கி அழைத்தனர். நான் மேல் நோக்கிப் போகும் போது கிடைத்த கரகோ'த்தின் போது, எவ்வளவே சிரமப்பட்டு நுழைவுச்சீட்டெடுத்து வரக் கூடியதாக அமைந்தது நல்லதென நினைத்தேன். என்ன தானான போதும் இந்த இயலாத தங்கை அவர்கள் மனதில் தீராத துன்பத்தைக் கொடுத்ததை யான் அறிவேன்.

மேல் மேடையை அடைந்ததும் அந்த கற்ற அவையின் பெரியவர் தன்னிருக்கை விட்டெழுந்து வந்து கைகுலுக்கினார. அதேவேளை மண்டபமே அதிர்ந்த கைதட்டல்.

நான் மண்டபத்தின் பார்வையாளியாக உள்ளவரை ஒரு வினா எனக்குள். 'நான் அப்படி யென்ன பெரிதாகச் செய்து விட்டேனென. ஆந்த கல்விமானோ பலருக்கும் மதிப்புக்குரிய 'வைஸ் சான்ஸிலர்'. மற்றைய கல்விமான்கள் பேசும் போது கையுயர்த்தி மரியாதை கொடுத்தவர் என்முயற்சிக்குத் தந்த மரியாதை. மனமே நிறைந்து போனது.

இருந்த இடத்துக்கு மிகவும் நிதானமாக மீண்டேன். காரணம் அந்த சாய்வு என்னை முன்னோக்கி விழுத்த வாய்ப்புகள் தெரிந்தன. வந்ததும் தான் கண்டேன். என் சின்னண்ணரின் கண்களிலிருந்து ஒரே கண்ணீர். ஆனால் முகத்தில் மகிழ்வு. ஆமாம் ஆனந்தம் தந்த கண்ணீர்.

என் சக்கரநாற்காலியைத் தள்ளிச்செல்லும் போதெல்லாம் என் பட்டப்படிப்பைத் தன் கனவாகக் கண்டவர். அதனால் தான் அவருக்கு அந்த விசேட நுழைவுசீட்டு.

அவர் சொன்னார் தன் கண்ணீரின் காரணத்தை. இதைப்பாரக்க அப்பா எம்முடன இல்லையே என்பதும் இந்த நிலையிலும் என் தங்கச்சி சாதிச்சிட்டாளே என்பதும் தானே காரணம் என.

அந்த அன்புக்கு நிகரேது?

எனது பராமரிப்பு நிலையம் வந்தேன் என்சுகாதார தேவையின் நிமித்தம். அப்போது வந்த தொலைபேசியில் தான் அறிந்தேன், வேறொரு வீடு எனக்கும் அம்மாவுக்கு வசிக்க அமையலாமென.
அதுவும் அந்த யூலை ஆறு. திடீர் திடீரென யாவும் நடந்தது.

யூலை இருபத்தொன்பதில் மூக்கின் சத்திர சிகிச்சை நடந்தது. ஆகஸ்ட நான்கில் வீடு பார்த்து ஒப்புதல் கையொப்பமும் இட்டேன்.

அதற்கு முன்னதாக எனது மாடியில் வசித்த அனைவருக்கும், சகல ஊழியர்க்கும் ஒரு பாபகியூ எனப்படும் வெளிப்புறச்சூழலில் நடாத்தும் விருந்துபசாரத்தை வைத்து என் நன்றியைத் தெரிவித்தேன்.
ஆகஸ்ட் பதினேழில் ஒக்டோபர் பத்தில் ஒலிபரப்பான "அன்புள்ள சினேகிதியே" நிகழ்வுக்காக என்னைப் பேட்டி கண்டனர்.

அடுத்து ஒருவாரத்தில் நாம் இந்த வீட்டின் வாசியாகி விட்டோம்.. சரியாகச் சொல்லப் போனால் நானும் அம்மாவும் ஏழு ஆண்டுகளின் பின் இந்த வீட்டில் ஒன்றாக வாழ்கிறோம்.

எனக்கு முன்புபோல் வலியில்லை அம்மா என்னைச் சுமக்கவில்லை ஆதலால். ஆனாலும் உணவாக்கி என்னைக் காத்து வருகிறார். உள்ளது எனக்கு வலி, அம்மாவை என்னால் ஆதரிக்க முடியவில்லையே ஒரு பெண்பிள்ளையாகவென.

இந்த காலகட்டத்தில் தொண்டராக கணனி பயிற்றுவிக்கும் பணி யூ கே ஒன்லைனில் கிடைத்தது. அனுபவம் தேவையல்லவா வேலை எடுப்பதற்கு!

முதல்மாதம் கழித்தே தொலைபேசி இணைப்புத் தந்தார்கள். புதிதாகக் கட்டிய கட்டடத்தில் முதன் முதலாகக் குடியேறி அனைத்து சாமான்களும் வாங்கி கட்டடத்தை வீடாக்கியதே ஒரு இனிய அனுபவம்.

எப்படி லண்டன் தமிழ் வானொலி கேட்டேன் என்று நினைவில்லை. முன்பு கேள்விப் பட்டிருக்கிறேன். இணையத்து வானொலியாக நான் கேட்டதனால் நிலா என்ற புனைபெயரில் திரு நடாமோகன் பணிபுரியாத நேரத்தில் எதேச்சையாக தொலைபேசியில் நுழைந்து விட்டேன்.

என் ஒருவருடப்பணியை முடித்து மேலுமோர் நிறுவனத்தில் இணையத்தள அமைப்பாளராகப் பணியாற்றுகிறேன் இப்போது. இதுவோர் நலிந்தோர்க்கு போக்குவரத்து வழங்கும் தொண்டா நிறுவனம்.

என் அப்பாவின் கவிதைகளைப் புத்தகமாக்குவது என்ற ஆவலை நிறைவேற்ற

எனது காலம் வந்ததைப் பயன்படுத்தியே ஆகவேண்டுமே! நானே தான் ஒருசில பக்கங்கள் போகத் தமிழில் இடது கையின் துணைகொண்டு வலது கரமியக்கி பதிவு செய்து இந்தியா அனுப்பியும் விட்டேன்.

ஒக்டோபர் இருபத்தியேழாம் நாளின்று. நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி நாம் நடாத்தவிருக்கும் நல்வெளியீட்டு விழாவில் இந்த 'எழுத எழுத' நூலும் வெளியிடப்படவேண்டுமென்ற ஆர்வ மேலீட்டால் இதைப் பதிவு செய்து கொண்டிருக்கிறேன். இப்போது அதிகாலை ஒன்று நாற்பத்தைந்து. இதன்பின்பு இந்த கோர்ப்பை இந்தியாவிலுள்ள பதிப்பகத்திற்கு மின்னஞ்சல் செய்து நித்திரைக்குப் போகிறேன்.

ஆண்டவன் துணை இருந்தால் இப்புத்தகமும் நவம்பர் ஐந்தாம் திகதி வெளியாகலாம்.

## எல்லாம் அவன் கருணை!



ஈழத்தில் பிறந்து, கடந்த எட்டு ஆண்டுகளாக இலண்டனில் வாழும் அரியாலையூர் அம்புயம், நிலா ஆகிய புனைபெயரில் எழுதிவரும் உதயகுமாரி பரமலிங்கம் "எழுத எழுத" என்ற அனுபவங்களின் கோர்ப்பான இந்த நூல் இவரது இரண்டாவது நூலாகும்.

சக்கரநாற்காலியில் உழலும் இவரது அனுபவங்கள் சுவையானது. சோகமானதாகவும் பாடமாகவும் கூட அமையலாம் என்கிறார் இவர்.